(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. — ப்ரமாதீச ஹு மாசிமீ —FEBRUARY 1914. — ஸஞ்சிகை 2. No. 2.

பொருளடக்கம்.

வியாஸங்கள்—	பக்கம்.
கால்நடைகளின் அபிவ்ருத்தி	... 58
விறகு கஷ்டம்	... 61
கோழிகளின் முட்டையிடும் தன்மை	... 63
தென்னம் வண்டு	... 64
கிணறுவெட்டுதலால் உண்டாகும் லாபங்களின் மேல் தீர்வை	... 65
கொத்துமல்லி	... 66
தென்னை நாற்றுத் தெரிந்தெடுத்தல்	... 67
மோட்டார் கலப்பைகள்	... 68
ரூரல் ஸங்கங்களின் நிர்வாகம்	... 69
பழங்களைக்கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவது	... 73
உதிர் நக்ஷத்ரங்கள் —எம். ஸி. எஸ். அநந்த பத்மநாபராவ்	... 77
பொது நிலத்தில் ஆக்ரமிப்பது	... 81
ப்ளேக் க்ருமிகள் தேகத்தில் ப்ரவேசிக்கும் விதம்	... 85
பூச்சிகள் சண்டைசெய்யும் விதம்	... 89
பெண்கல்வியும் அதன் ஆவச்யகமும் —டி. கே. ராமபத்ர கனபாடிகள்	... 93
டாக்டர் ரபீந்த்ர நாத் டாகூர்	... 97
விவஸாயப்பகுதி	... 58
கோவாபரேஷன் பகுதி	... 69
வ்யாபாரப்பகுதி	... 73
வித்யாவிஷயப் பகுதி	... 77
வ்யவஹாரப் பகுதி	... 81
ஸுகாதாரப் பகுதி	... 85
பையன்கள் பகுதி	... 89
ஸ்த்ரீகள் பகுதி	... 93
ஜீவ்ய சரித்ரம்	... 97
சிறு கதைகள்	... 99
பகுதிக்குறிப்புகள்	... 101
மாஸ வர்த்தமானம்	... 106
காலஸ்திதி	... 111
பஞ்சாங்கம்	... 112

CONTENTS.

Articles—	PAGES.
THE IMPROVEMENT OF CATTLE	... 58
DEARTH OF FUEL	... 61
FECUNDITY IN FOWLS	... 63
COCOANUT BEETLE	... 64
ASSESSMENT ON WELL IMPROVEMENT	... 65
CORIANDER	... 66
SELECTING COCOANUT SEEDLINGS	... 67
MOTOR PLOUGHS	... 68
MANAGEMENT OF RURAL SOCIETIES	... 69
PACKING AND TRANSPORT OF FRUITS	... 73
SHOOTING STARS —M. C. S. Anantha Padmanabha Rau, M.A.	... 77
ENCROACHMENT IN A COMMON LAND	... 81
HOW THE PLAGUE GERMS ENTER THE BODY	... 85
HOW INSECTS FIGHT	... 89
FEMALE EDUCATION AND ITS NECESSITY —T. K. Ramabhadra Ghanapattigal	... 93
DR. RABINDRA NATH TAGORE	... 97
The Agricultural World	... 58
The Co-operative World	... 69
The Commercial World	... 73
The Educational World	... 77
The Legal World	... 81
The Sanitary World	... 85
The Boys' World	... 89
The Ladies' World	... 93
Biography	... 97
Short Stories	... 99
Departmental Notes	... 101
Diary of the Month	... 106
Season Report	... 111
Calendar	... 112

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

3000 இந்தியர்களுக்கு

நல்ல ஆதாயமுள்ள வேலை.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனியார் தங்களுடைய மில்லுகளில் மூவாயிரம் இந்தியர்களுக்கு தக்க சம்பளமுள்ள வேலை கொடுத்து வருகிறார்கள். ஜனங்கள் ஏராளமாய்

லா லி ம் லி

கலப்பில்லாத கம்பளித் துணி

வாங்குகிறபடியால் அவ்வளவு க்ராக்கிக்கும் ஸமாளிப்பதற்காக இந்த மில்லுகள் வருஷம் முன்னூற்றருபது நாளும் வேலை செய்து கொண்டிருக்கின்றன

லாலிம்லி துணிகள் இந்தியர்களால் இந்தியாவிலேயே செய்யப்படுகின்றன. இது இந்த தேசத்துக்கே ஒரு கீர்த்தியாகும்.

அடுத்த தடவை நீங்கள் துணிகளுக்கு ஆர்டர் செய்யும்போது கான்பூர் உல்லன் மில்ஸுக்கு உங்கள் ஆர்டரை அனுப்பவேண்டும் என்று உங்களுக்குத் தோன்ற வில்லையா?

கான்பூர் வுல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,

டிபார்ட்மெண்ட் நம்பர் 25, கான்பூர்.

CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.,

Dept. No. 25. Cawnpore.

ப்ளானல்கள் ஸெர்ஜுகள், ட்வீடுகள், சட்டைத்துணிகள் வேலைக்காரர்களுடைய துணிகள் குதிரைக்குப் போடும் துணிகள் முதலியவைகளின் மாதிரிகளுக்கும் விலை ஜாப்தாவுக்கும் எழுதுங்கள் அவை இனாமாக அனுப்பப்படும்.

SUPPLEMENT TO THE "PRACTICAL LIFE."
"பிழைக்கும் வழிக்து" அனுபந்தம்.



Dr. RABINDRANATH TAGORE.
டாக்டர் ரபீந்த்ரநாத் டாகூர்.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். — G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. — ப்ரமாதீச ஸ்ரு மாசிமீ, FEBRUARY 1914. — ஸஞ்சிகை 2. No. 2.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, *citizenship, and popular*, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
Single copy ...	0 6 0	...	0 8 0
Sample copy ...	0 4 0	... ...	0 6 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	...	5 0 0	per month.
½ do	...	2 8 0	do
¼ do	...	1 4 0	do
1/10 do	...	1 0 0	do

The above rates are all *net* and subject to no discount whatever Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The *Editor* solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any *Agent*. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும, ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்ய நாடு.
வருஷம் 1 க்கு ...	4 0 0	...	6 0 0
தனிப்ரதி ...	0 6 0	..	0 8 0
மாதிரி காபி ..	0 4 0	...	0 6 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0	
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0
1/10 பக்கத்திற்கு	,,	,,	1 0 0

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம, வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும, எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும. பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை க்ருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,

3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

THE IMPROVEMENT OF CATTLE.

கால் நடைகளின் அபிவ்ருத்தி.

இந்தியாவில் கால்நடைகள் விவஸாயத் தொழிலுக்கு வேண்டியவளவுக்குக் குறைவாயிருக்கின்றனவென்றும் இப்போது இருக்கும கால்நடைகளுக்குத் தகுந்த வளவு தீனியகப்படுவது கஷ்டமாயிருப்பதோடு அவைகள நல்ல நிலைமையிலில்லை யென்றும் பலா சொல்லி வருகிறார்கள். விவஸாயத் தொழிலுக்குக் கால் நடைகள் எவ்வளவு தூரம் போதாமலிருக்கின்றன வெனபனதப்பற்றி ஒரு கிருபா 'ஹிந்துஸ்தான் ரெவ்யூ' பத்ரிகையில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அவர் கொடுக்கும் பின்வரும் கணக்குகளால் இந்தியாவிலும் அதிலுள்ள பல மாகாணங்களிலும இத்தனை கால்நடைகள் இருக்கினறனவென்றும், ஸாகுபடியாகும் நிலஙகள் இவ்வளவு இருக்கின்றன வென்றும, ஒன்றுக்கொன்றுள்ள சராசரி விகிதம் இப்படியிருக்கிறதென்றும் தெரிய வரும்.

மாகாணம்.	காளை மாடுகளும் எருமைக்கடாக்களும்	ஸாகுபடியாகும் நிலததின் விஸ்தீரணம் (ஏக்கரில்)	ஒரு எருத்து மாட்டுக்கு எத்தனை ஏக்கர் நிலமிருக்கிற தென்பது.
	லக்ஷம்.	லக்ஷம்.	
ப்ரிட்டிஷ் இந்தியா ...	456	22,30	5·0
வங்காளம் ...	104	3,66	3·5
பம்பாய் ...	29	2,53	8·5
சென்னை ...	73	3,37	4·5
ஆக்ரா ...	75	2,69	3·6
பஞ்சாப் ...	48	2,48	5·1
மத்யமாகாணங்கள் .	35	1,77	5·0
அயோதயை ..	33	9,3	2·9

இந்தக் கணக்குகளால் இந்தியாவின் எந்த மாகாணத்திலும், மூன்று ஏக்கருக்கு ஒரு மாடு வீதங்கூட இல்லை யென்று தெரிய வருகிறது. பம்பாயிலோ $8\frac{1}{2}$ ஏக்கருக்கு ஒரு கால் நடையாக இருந்து வருகிறது. அங்கே 1910-11-ம் வருஷத்தில் கால்நடை ஸென்ஸஸ் கணக்கு எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அகமெதாபாத் ஜில்லாவிலும அதற்குப் பக்கத்திலும இரண்டு பஞ்சங்கள் நேர்ந்ததால் அங்குள்ள கால் நடைகளின நிலைமை இனனம் ரொம்பவும் கேவலமாகவே யிருக்கும்.

ஒவ்வொரு வருக்கும எத்தனை ஜோடி எருதுகள் இருக்கினறனவென்பது பின்வரும் கணக்கால் தெரியவரும்.

மாகாணம்.	எருதுகள் எத்தனை ஜோடிகள் என்பது	ஏர்கள்.	ஒரு ஏருக்கு எத்தனை ஜோடி எருதுகள்.	ஒரு ஏரைக் கொண்டு எத்தனை ஏக்கா உழுபபடுகிறது.
	லக்ஷம்.	லக்ஷம்.		
பரிட்டிஷ் இந்தியா ...	228	196	1·1	5
வங்காளம ...	-52	47	1·1	3·5
பம்பாய் ...	15	10	1·4	3·5
சென்னை ...	36	38	0·95	4·5
ஆக்ரா ...	38	33	1·2	3·6
பஞ்சாப் ...	24	21	1·2	5·1
மத்ய மாகாணங்கள் ...	18	11	1·6	5·0
அயோத்யை ...	17	15	1·1	2·9

மேலே காட்டியுள்ள கணக்கின்படி, ஜாகளுக்குப்போதுமான கால்நடைகளுள்ள ப்ரதேசம மத்யமாகாணங்கள் ஒன்றுதான. ஆனல் இநதக்கணக்கில் கொடுககப்பட்டிருக்கும எருதுகளின் ஸங்க்யையில் வண்டி யிழுக்க மாதரம் உபயோகப்படும் எருதுகளின் ஸங்கயையைக் குறைக்கவில்லை. வண்டி மாடுகளின் ஸங்க்யை ரொம்பவும் ஜாஸ்தியாயிருக்கும் எனபது நிச்சயம். வண்டி மாடுகளின் தொகையைக் குறைத்துவிட்டால் மத்யமாகாணங்களிலகூட உழுவதற்குப் போதுமான எருதுகள் இருக்கமாட்டாவெனறு தெரியவரும்.

இப்படி மாடுகள்குறைவாயிருப்பதால் ஜனங்களுக்கு இரண்டு விதத்தில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தியாவிலுள்ள விவஸாயிகளுக்கு ரஸாயன உரங்கள் தயாரசெய்து உபயோகிக்கத தெரியாமலிருப்பதால் அவர்கள் கால்நடைகளின் சாணத்தையே வெகுவாய் எருவாக உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இநதியாவில் கறவை மாடுகள உள்பட 9-கோடி கால்நடைகள் தான் இருக்கின்றன. ஸாகுபடி செய்யப்படும் நிலமோ $22\frac{1}{4}$ கோடி ஏக்கராதும. சாணததில பெரும்பாகம வரட்டி தட்ட உபயோகப்பட்டுப் போகிறது. இதைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும், $2\frac{1}{2}$ ஏகர் நிலததுக்கு ஒரு மாட்டின் எருத்தான கிடைப்பதாகிறது.

இன்னொரு விஷயமென்னவென்றால் இந்தியாவில் கறவை மாடுகள், பசுக்களும எருமைகளுமாக, 4 கோடி தான் இருககின்றன. இவைகள் ஆயுளில பாதி காலம் பால் கொடுப்பதிலலை. இநதியாவின் ஜனத்தொகை $31\frac{1}{2}$ கோடியாகையால் இநதக் கணக்கின்படி 15 பேருக்கு வேண்டிய பாலுக்கு ஒரு கறவை மாடாக ஏற்படுகிறது. இப்படியிருக்க சிசுமரணம் அதிகமாயிருப்பதற்குக் கேட்பானேன் ?

இநத நிலைமையை சரிப்படுத்துவதற்கு ஒரு வழியிருக்கிறது. அது என்னவென்றால் ம்ருக வைதய உதவியை அதிகப்படுத்துவதே. தற்காலம இந்தியா முழுவதிலும் 1,09,000 கால்நடைகளுககு ஒருவர் வீதம ம்ருக வைத்யர்கள் இருநது வருகிறாகள. சில மாகாணங்களில் இந்த விகிதம் குறைவாயும் சில மாகாணங்களில் அதிகமாயும இருககிறது. ஆகவே ம்ருக வைத்யாகள் வேண்டிய அளவுக்கு இல்லையென்றேற்படுகிறது. மருக வைத்ய உதவியை தகுநதபடி அபிவ்ருத்தி செய்தால் கால்நடைகளின் நிலைமை அபிவ்ருத்தி யடையும்.— என்று அநத நிருபா எழுதியிருக்கிறார்.

கால் நடைகளின நிலைமையை அபிவ்ருத்தி செய்ய மருக வைத்ய உதவியை ஜனங்களுக்குள் பரவச்செய்ய வேண்டியது அவச்யமென்பதை சென்னை ம்ருக வைதய டிபார்ட்மெண்டார் அறிந்துகொண்டு, பெரிய ம்ருக வைத்ய சாலைகள் சீக்ரம் ஸதாபிப்பது முடியாதென்று எண்ணி, சில இடங்களில் சிறிய ம்ருக வைத்ய மருநதுச்சாலைகள் ஸதாபிக்க ஏறபாடு செய்திருக்கிறார்கள் என்று சென்றமாஸ ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அநேகர் கால்நடைகளுக்கு ஜல வஸதியும மேய்ச்சல்தரை வஸதியும செய்து கொடுக்கவேண்டும் எனறும, நல்ல ஜாதி கால் நடைகள் வ்ருத்தி செய்வதற்காக ப்ரத்யேகமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சொலலிவருகிறார்கள். ஸமீபத்தில் சென்றமாஸத்தில்சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டா சிதம்பரநாதமுதலியார் கால்நடைகளின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு கமிடடி நியமிக்கவேண்டுமென்று ஒரு தீாமானங்கொண்டு வந்தார். அந்தத் தீர்மானம் பின் வருமாறு:—

சென்னை ராஜதானியில் அந்தந்த ப்ரதேசத்து ஜாதிகளாயும் பொதுவாயும் உள்ள

எருத்துமாடுகள் கறவைமாடுகள் ஆகிய இவைகளின் தற்கால நிலைமையைப் பற்றியும், கால்நடைகள், கால் நடைகளின உணவு ஆகிய இவைகள் எப்படி யிருக்கின்றன, இவைகள எவ்வளவு மட்டில் ஜனங்களுக்கு வேண்டிய அளவுக்குக் கிடைக்கின்றன, இவைகளின் விலை எப்படி உயர்ந்திருககிறது, ஆகிய இவைகளைப்பற்றியும் விசாரித்து ரிபோர்ட்டு செய்யவும், இவைகளைச் சீர்திருத்த என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசனைகள் சொல்லவும, உத்யோகஸ்தர்கள், உத்யோகஸ்தரல்லாதவர்கள், ஒரு நிபுணர் ஆகிய இவர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னர் நியமிக்க வேண்டு மென்று இந்தக்கௌன்ஸில் சிபாரசு செய்கிறது.

இந்தத தீர்மானத்தை ப்ரேரிக்கையில் ஆனரபிள் மிஸ்டா சிதம்பரநாத முதலியார், இந்த ராஜதானியில் 100-க்கு 70 பாகம் ஜனங்கள் தங்கள் விவஸாய வேலைக்குக் கால்நடைகளையே நம்பியிருப்பதாகவும், கால்நடையே விவஸாயிகளுடைய ஐச்வரியமென்று பல அதிகாரிகள் ஒப்புக்கொண்டு அவைகளுடைய நிலைமையை உயர்த்த வேண்டியது அவச்யமென்று சொல்லி வந்திருப்பதாகவும், கால்நடைகளின் தற்போதைய நிலைமை த்ருப்திகரமாயில்லை யென்றும், அவைகள் ரொம்ப தாழ்ந்த நிலைமை யடைந்திருந்தும் விலை மாத்ரம் 100-க்கு 150-பங்கு அதிகமாயிருக்கிறதோடு, வருஷாவருஷம் வேர்க்கடலை அன்ய நாடுகளுக்கு ஏற்றுமதி யாவதாலும், மேய்ச்சல் தரைகள் குறைந்து போனதாலும், அவைகளுக்கு தீனியகப்படுவது கஷ்டமாயிருக்கிறதென்றும், க்ராமங்களில் காளைமாடுகளை வளர்த்து வ்ருத்திசெய்வது குறைந்து போனதால் நல்ல ஜாதி கால்நடைகள் குறைந்துவருகின்றன வென்றும், கால்நடைத் தீனியின் விலை ரொம்ப அதிகமாகிவிட்டதால் ரயத்துகள் பொலிகாளைகள் வைத்து வளர்க்க முடியாமலிருக்கிறார்கள் என்றும், ஆகையால் ஜனங்களின் பெரும்பாகத்தாருடைய ஸௌகர்யத்தை உத்தேசித்துத் தாம கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்வார்கள் என்று தாம் நம்புவதாகவும் சொன்னார்.

இதைத் தாங்கிப்பேசின ஆனரபிள் மிஸ்டர் அகமெத் தம்பி மரக்காயர் கால்நடைகள் நோய்களால் ரொம்ப ஜாஸதியாக இறந்து போவதை உத்தேசித்து தீர்மானத்தில் கேட்டுக்கொண்டபடி ஒரு கமிட்டி நியமிக்க வேண்டியது ரொம்ப அவச்யமென்று சொனனார்.

கவர்ன்மெண்டுக்காக எழுந்துபேசின ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸன், இந்த ராஜதானியில் கால்நடைகளை அபிவ்ருத்தி செயவதைப் பற்றியும் அவைகளை வைத்து ஸம்ரக்ஷணை செய்வதைப்பற்றியும் விசாரணை செய்வதற்காக கவர்ன்மெண்டார் மிஸ்டர் ஸாம்ப்ஸனை ப்ரத்யேகமாய் நியமித்தார்கள் என்றும் அவர் எழுதியிருக்கும்ரிபோர்ட்டில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று தீர்மானத்தில கேட்டுக்கொண்டிருக்கும் விஷயங்களெல்லாம ஆராய்ச்சி செய்து எழுதப்பட்டிருக்கின்றன வென்றும், 'அந்தப் பெரிய ரிபோர்ட்டைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்து வருவதாகவும, கவர்ன்மெண்டார் அந்த ரிபோர்ட்டின்மேல் ஆர்டர்கள் போடும்போது ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியாரும், மிஸ்டர் அகமெத்தம்பி மரக்காயரும சொல்லிய விஷயங்களையும் கவனிப்பார்கள் என்றும் சொன்னார். இன்னும், அந்த ரிபோர்ட்டின்மேல் என்னவிதமான ஆர்டர் போடுவதென்பது இன்னம நிச்சயமாகவில்லை யென்றும, ரிபோர்ட்டில் கண்டிருக்கிற எல்லா விஷயங்களைப்பற்றியும் முடிவான ஆர்டர் போட்டு விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை யென்றும், சில விஷயங்களைப்பற்றி மறு

படியும் கவனிக்க வேண்டியிருக்கலாமென்றும், அப்போது அவச்யமென்று தோன்றினால் உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்களின் அபிப்ராயத்தையும் கேட்பார்கள் என்றும், இப்போது வெளியிலிருந்து அபிப்ராயம் கேட்கவேண்டியது அவச்யமென்று கவர்ன்மெண்டார் நினைக்கவில்லை யென்றும், கவர்ன்மெண்ட் ஆர்டர் போட்டாகிறவரையில் அந்த ரிபோர்ட்டை கௌன்ஸிலில் வைக்க முடியாதென்றும், ஆகையால் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபிப்பதாயும் சொன்னார்.

ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் மறுபடியும் எழுந்து பேசினபோது, மிஸ்டர் ஸாம்ப்ஸனின் ரிபோர்ட் என்ன ப்ரேரணைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது பொது ஜனங்களுக்கு தெரியவில்லை யென்றும், அவைகளைப்பற்றி பொது ஜனங்களின் அபிப்ராயத்தை கவர்ன்மெண்டார் தெரிந்துகொள்ளவேண்டியது அவசயமென்றும், ஆர்டர்கள்போடுமுன் ரிபோர்ட்டை ப்ரசுரம் செய்வதனால் கவர்ன்மெண்டுக்கும் பொது ஜனங்களுக்கும் ரொம்ப நன்மை ஏற்படுமென்றும் சொன்னார். ஸர்ஜான் அட்கின்ஸன் ரிபோர்ட்டை ப்ரசுரம் செய்ய முடியாதென்று பதில் சொன்னார். கடைசியில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் தமது தீர்மானத்தை வாப்ஸ் வாங்கிக்கொண்டார்.

DEARTH OF FUEL.

விறகு கஷ்டம்.

7, 8 வருஷங்களுக்கு முன் சென்னையில் ஒரு டன்விறகு 6 ரூ, 7ரூ-க்கு அதாவது ஒரு குண்டு 3 அணா, $3\frac{1}{2}$ அணாவுக்கு விற்றுக்கொண்டிருந்தது. இப்போது டன் 13,14 ரூபாய்க்கும் குண்டு 6 அணா, 7 அணாவுக்கும் விற்கிறது. ஒன்றுக்கு இரட்டியாகிவிட்டது. விறகுக்குப் பதிலாக, நிலக்கரி, மண்ணெண்ணெய், காஸ், மின்ஸாரம் ஆகிய இவைகளை மேல நாட்டார் உபயோகித்து வந்தாலும், நமதேசத்தில் இவைகள் ஸாவஸாதாரணமாக வெகு காலமாகும். ஆகையால், வேண்டிய அளவு விறகு கஷ்டமின்றி அகப்படும்படியான வழியை நாம தேடவேண்டும.

கொறுக்காய்ப்புளி மரம் விறகுக்கு நல்ல மரம். அது ஸாதாரணமாய் 10-வருஷ காலத்தில் நல்ல பெரிய மரமாகிறது. அதின் மரம் சித்ர வேலைகளுக்கு உதவாது. ஏனெனில அது லேசில் உடைந்துபோகும். அது விறகுக்குத்தான உபயோகப்படும். கொறுக்காய்ப்புளி தினபதற்கு தித்திப்பாயிருக்கிறது. இம்மரத்தைப் பயிர் செய்வது கஷ்டமில்லை. இது ஸாரமில்லாத பூமியில்கூடப் பயிராகும். ஆரம்பத்தில சில வருஷங்கள் ஜலம பாய்ச்சினால் போதுமானது. இதை மருகங்கள் வந்து அழிப்பதில்லை. இதன் முட்களுக்குப் பயந்து மருகங்கள இதை அண்டுவதில்லை. ஆகையால்; இது பயிராவதைப்பற்றிக் கவலையொன்றுமில்லை. செலவு மிகவும் குறைச்சல். இந்த மரம் ஆகாயததிலுள்ள நைட்ரொஜனை க்ரஹித்து பயிராகும நிலத்துக்கு உரமாகக் கொடுக்கிறது. மேலும பருவமழைபெய்யாமல் பஞ்சத்தால் ஜனங்கள் கஷ்டப்படுமபொழுது, இமமரம ஏராளமாய் பழம கொடுக்கிறது. இதை ஏழை ஜனங்கள தினகிறார்கள்.

இம்மரத்தைப் பயிரிடுவதற்கு என்ன செலவு பிடிக்குமென்றும், விவஸாயிக்கு என்ன ஆதாயம் கிடைக்குமெனறும பார்ப்போம். ஒரு பெரிய நிலஸ்வான் இருக்கிறா என்று வைத்துக்கொள்வோம. அவர் ஏகர் ஒன்றுக்கு 800, 900-ரூபா செலவு செய்து 10-வருஷ காலம் வரையில் ஆதாயத்தை எதிர்பாராமலிருப்பார் எனறும் வைத்துக்கொள்வோம. 200-அடி அகலம 200-அடி நீளமுள்ள நிலத்தில் ஒவ்வொரு வரிசைக்கும இடையில் 10-அடி இருக்கும்படி விட்டு 20-வரிசையாகக்

கன றுகள் வைக்கலாம். ஒவ்வொரு வரிசையிலும 3-அடி தூரததுககொன்றாக விதை போட்டால் 67 மரமிருக்கும. இப்படி அந்த நிலத்தில் மொததம் 1,340-மரமாகிறது. 10-வருஷ காலம் அப்படியே வளரவிட வேண்டும. 10-வது வருஷத்தில் 1-வது, 11-வது வரிசைகளிலுள்ள மரங்களை வேருககு ஹானியுண்டாகாதபடி வெட்டவேண்டும். 11-வது வருஷத்தில 2, 12 வரிசைகளிலுள்ள மரங்களையும், 12-வது வருஷத்தில 3, 13 வரிசைகளிலுள்ள மரங்களையும இப்படி வருஷவாரி வெட்டிக்கொள்ளவேண்டும். இப்படி மரம வெட்டுவதால் ஒவ்வொரு வருஷமும் ஸாகுபடியில் பததிலொருபங்கையே நாம எடுததுக்கொள்கிறோம. ஒருமுறை வெட்டப்பட்ட மரமானது மறுபடியும 10-வருஷம வளர்ந்த பிறகே வெட்டப்படுகிறது. வருஷமொன றுக்கு 134-மரத்தை விறகுக்காக வெட்டிககொள்ளலாம. மரமொன்றுக்கு 8 மணங்கு விறகு கிடைக்கும. அதாவது வருஷவாரியில 200-அடி சதுரம விஸதீரணமான பூமியில் 1,072 மணங்கு விறகு கிடைக்கும். தறகால விலை ரீதிக்கு 536 ரூபா அகப்படும. விறகேயல்லாமல், கொருக்காய்ப்புளி விதைக்கும் க்ராககியிருக்கிறது. இந்தவிதை மணங்கு ஒன்றுக்கு ரூபா 40-க்கு விற்கும. இநத விதை ஒரே நிதானமாய் வருஷாவருஷமிருக்காது. மரமொன்றுக்கு சராசரி 5 சேர் விதையாக 134 மரத்துககு 670 சேராகிறது. கொறுக்காய்ப்புளி வாங்கித் தின்கிறவாகளு மிருககிறபடியால் இதிலும பணம கிடைக்கும. விறகு வெட்டக்கூலி, வண்டிச்சத்தம,விதைசேர்த்தல், முதலிய பல காரியங்களுக்குப் பிடிக்கும செலவுகளுககெலலாம வரும்படியில் பாதியைக கழித்துவிட்டாலும் 600 ரூபா தடையிலலாமல கிட்டும. பயிா செய்யப்பிடிக்கும் செலவைக் கணக்கிட்டுப்பார்ப்போம். வரிசைக்கு ஒரு சேர விதம 20 வரிசைகளுக்கு 20 சேர்விதைகள் வேண்டும. இதறகு 20 ரூபாயாயிற்று. முதலிரந்து வருஷஙகள் மரத்துக்கு நீரபாய்ச்ச வேண்டும். ஆறுவது வருஷததிலிருந்து மழைஜலமே போதும. கிணறுவெட்டி அதிலிருந்து வருஷத்துககு நாலு முறை ஜலம் பாய்சசினால். போதும். ஜலம்பாய்ச்சுகிற செலவு முறைக்கு 4-ரூபா விதம, 5 வருஷங்களுக்கு 5×4×4=80 ரூபாயாகும். காவல்காரனுக்கு மாதம் 6 ரூபா சம்பளவிதம், 10 வருஷஙகளுக்கு இவன் சம்பளம ரூபா 6×12×10=720 ரூபா ஆகிறது. 10-வருஷத்துக்கு நிலத்திலிருந்து யாதொரு வரும்படியுமில்லாததால் அதையும் கணககுப்போட்டுப பாாக்கவேண்டும். ஏகருககு வருஷமொனறுக்கு 7 ரூபா விதம 10 வருஷததுக்கு 70 ரூபா தீரவையாகிறது. எலலா செலவுகளும் கூடி 10 வருஷஙகளுக்கு 70+20+720+80=890 ரூபா ஆகும். இதற்கு நூற்றுககு ஒரு வட்டி விதம் பததுவருஷத்துக்கு ரூபா 106-12-0. வருஷ வரும்படியாகிய 600-ரூபாயில் இதைக் கழித்துவிட்டால, ரூபா 496-4-0 மிகுகிறது. இது ஏகருககு வருஷ வரும்படி. இதற்கு எருச்செலவு ஒன்றுமில்லை, விவஸாய ரஸாயன சாஸத்ர ஞானமும் வேண்டியதில்லை. மழையில்லாது போவதினால் நஷ்டமுண்டாகாது. நாம மேலே போட்ட வரவு செலவுக் கணக்கு திட்டமானதல்ல. ஆயினும் பொதுவாய் இவ்வளவு ஆதாயமிருக்கிறதென்பதாய்த் தெரிகிறது. வுளப்பமில்லாத நிலங்களில வேறெந்தப் பயிராவது செய்வதால் இவ்வளவு லாபம் வருமா? ஏராளமாக நிலங்களையுடைய மிராசுதாாகள், ஜமீனதாாகள் இவ்விஷயததில் கவனம் செலுததுவார்களென்று நம்புகிறோம்.

நூல் நிலையம், சென்னை - 600090.

FECUNDITY IN FOWLS

கோழிகளின் முட்டையிடும் தன்மை.

முட்டையிடும் தன்மை கோழிக்குக்கோழி வித்யாஸப்படுகிறது. சில கோழிகள் முட்டைகள் அதிகமாயும் சில கோழிகள் குறைவாயும் இடுகின்றன. இந்த முட்டையிடும் தன்மையைப் பற்றி ஒரு விவசாய சாஸ்த்ரி ஸமீபத்தில் சில ஆராய்ச்சிகள் செய்தார். முட்டையிடும் தன்மை பெண் பறவையிலிருந்து அதன் குஞ்சுகளுக்குப் போகாமல் பெரும்பாலும் ஆண்பறவை மூலமாக குஞ்சுகளுக்குப் போகிறது என்று அந்த ஆராய்ச்சிகளால் தெரிய வருகிறது. ஆகையால் முட்டையிடு பெட்டைகளைத் தெரிந்தெடுப்பது போலவே சாவல்களையும் தெரிந்தெடுக்க வேண்டும். இப்படி ஆண் பறவையையும் பெண் பறவையையும் நல்ல ஜாதிகளாகத் தெரிந்தெடுத்தால் தான் இவைகளுக்குப் பிறக்கும் குஞ்சுகளுக்கு அதிகமாக முட்டையிடும் தன்மை இருக்கும். இல்லாவிட்டால் அதிகமுட்டையிடும் என்று எதிர்பார்ப்பது முடியாது.

இந்த ஆராய்ச்சிகள் செய்வதற்கு அந்த ஸாஸ்த்ரி மாரிகாலத்தில கோழிகள் முட்டையிடுவதை கவனித்து வந்தாராம். ஏனென்றால் இந்தக் காலத்தில்தான் கோழிகளின் முட்டையிடும் தன்மை ரொம்பவும் வித்யாஸப் படுகிறது. அவர் பெட்டைகளை மூன்று விதமாய்ப் பிரித்தார். முதலாவது, மாரிகாலத்தில் ஒரு முட்டைகூட இடாதவை; இரண்டாவது, முப்பது முட்டைக்குக் குறைவாய் இடுபவை; மூன்றாவது முப்பதுக்கு அதிகமாக முட்டையிடும் பெட்டைகள்.

அவர் செய்த ஆராய்ச்சிகளில் பின்வரும் விஷயங்கள் தெரியவந்தன. ரொம்ப முட்டைகள் இடும் பெட்டைகளை சில சாவல்களோடு சேரவிட்டதில் அவைகளுக்குப் பிறந்த குஞ்சுகள் அவைகளின் தாய்களுக்குள்ள அதிக முட்டையிடும் தன்மையை அடையவில்லையாம். அதாவது இந்தக் குஞ்சுகள் பெரியவையானபோது குறைவாகவே முட்டையிட்டன. முப்பதும் முப்பதுக்கு மேல்பட்ட முட்டைகளும் இடும் பெட்டைகளை வேறு சில சாவல்களோடு சேரவிட்டதில் சில ஸமயம் அவைகளுக்குப் பிறந்த குஞ்சுகள் எல்லாம் அதிகமுட்டையிட்டன. சில ஸமயம் குஞ்சுகளில் சில அதிகமுட்டையும் சில குறைவான முட்டைகளும் இட்டன.

இன்னும் ரொம்பக் குறைந்த முட்டைகள் இடுகிற அல்லது முட்டையே இடாத பெட்டைகளுடன் சில சாவல்களைச் சேரவிட்டதில அந்தப் பெட்டைகளுக்குப் பிறந்த குஞ்சுகள் எல்லாம் பெரியனவான போது, முப்பதும் அதற்கு மேற்பட்ட முட்டைகளும் இட்டனவாம். இந்தவிஷயங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு பின்வரும் அனுபவத்துக்கு ஒத்த விஷயங்களை அந்த சாஸ்த்ரி தெரிவிக்கிறார்.

அதிக முட்டைகளிடும் பெட்டைக் கோழிகள் கொடுக்கும் சேவலை நமக்கு ரொம்பவும் அவச்யமாக வேண்டியிருப்பது. அதற்கு அதிக முட்டையிடும் பெட்டைக் கோழியொன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறக்கும் சாவல்களின் மூலமாக அந்தச் சாவல்களுக்குப் பிறக்கும் பெட்டைகளுக்கு அதிக முட்டையிடும் தன்மை ஏற்படும். ஆனால் தெரிந்தெடுத்த பெட்டைக்குப் பிறக்கும் சாவல்கள் எல்லாவற்றிற்கும் உயர்ந்த குணம் இருக்குமென்று சொல்ல முடியாது. ஆனால் அதற்குப் பிறக்கும் சாவல்களெல்லாவற்றிற்கும் இந்த குணமிருந்தால், அதாவது அவைகள் எந்த விதமான பெட்டைகளுடன் சேர்ந்தாலும் அவைகளுக்குப் பிறக்கும் பெட்டைகள் அதிக முட்டையிடுமானால், அந்தச் சாவல் குஞ்சு

கள் எந்தச் சாவலுக்குப் பிறந்தனவோ அந்தச் சாவல் தான் நமக்கு வேண்டியது ஆனால் பிறந்த சாவல் குஞ்சுகளில் சிலவற்றிற்கு இந்த குணம் இருந்து, சிலவற்றிற்கு இல்லாமலிருந்தால் ஒவ்வொரு சாவலையும் தனித்தனியே பெட்டைகளோடு சேரவிட்டு அதன் குணம் இன்னதென்று பரீக்ஷித்துப்பார்க்க வேண்டும். இவைகளை முட்டையொன்றுமே யிடாத பெட்டைகளுடன் சேரவிடுவது நல்லது. ஏனென்றால் சாவல் ரொம்ப உயர்ந்த ஜாதியாயிராவிட்டால், ரொம்ப குறைவாக முட்டையிடும் பெட்டைகளோடு சேரவிட்டால் அவைகளுக்குப் பிறக்கும் பெட்டைகள் அதிக முட்டையிடுவதில்லை.

COCOANUT BEETLE.

தென்னம் வண்டு.

இது விஷயமாய் 'கமத்தொழில் விளக்கத்தில், ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டு தினுஸு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்ற பனை தினுஸுகளையும் பிடித்து அவைகளுக்கு மிகக் கெடுதி யுண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்றுக்கு தமிழில் தென்னம் வண்டென்றும் மலையாளத்தில் செள்ளுவென்றும் பெயர். அது தலையில் ஒரு கொம்புள்ள கருப்பு நிறமுடைய ஒரு பெரியவண்டு. அது குருத்து ஓலைகளையும் மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னை மரங்களைத்தான இவ்வண்டுகள் அதிகம் நாசமாக்குகின்றன. இவைகளால் வயதான மரங்களுக்கு அதிகக் கெடுதி கிடையாது.

இவைகள் பட்டுப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டையிடுகின்றன. முட்டைகளிலிருந்து புழுக்கள் உண்டாகி வெளிவந்து அழுகும வஸ்துக்களைத் தின்று பெரியனவாகி நாளாவட்டத்தில் வண்டுகளாக மாறுகின்றன.

இன்னொரு ஜாதிவண்டுக்கு செவ்வண்டு என்று பெயர். இது முன் சொன்ன கறுப்பு வண்டைவிட சிறியது. இதற்கு நீண்டுவளைந்த மூக்கு உண்டு. இது மரங்களின் உச்சியில் தென்னம் வண்டாவது மரம் ஏறுகிறவர்களாவது செய்த வெட்டுகள்பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இந்த முட்டைகளிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சி மரத்தைத் துளைத்து மரத்தை அழித்துவிடும். இந்தப் புழுக்கள் நார் முதலியவைகளைக்கொண்டு கூடு கட்டி அதிலிருந்து, ஏறக்குறைய இரண்டு வார காலத்துக்குள் உருவம் மாறி வண்டுகளாகின்றன.

இந்த வண்டுகளின் கெடுதிகளைப் போக்க சில உபாயங்கள் இருக்கின்றன.

1. தென்னம் வண்டை மரங்களிலிருந்து லேசாய் ஒரு இரும்பு ஊசிகொண்டு எடுத்துவிடலாம்.

2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினால் தடவி மண்கொண்டு மூடுவதுடன் மரமேறுபவர்கள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டைவைத்த பின மரங்களை இவைகளின் பாதையிலிருந்து லேசாய் விடுவிக்க முடியாது.

3. பொடிமணலும் உப்பும் ஸமபாகம் கலந்து ஒரு வர்ஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம் வண்டைத் துரத்திவிட ஹேதுவுண்டு.

4. செவ்வண்டினால் பிடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா. ஆகையால் அவைகளைத் தாமஸமில்லாமல் வெட்டிவிட வேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கி விடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்

னால் வண்டுகளாகமாறி புது மரங்களை நாசமாக்கும்.

5. ஒரு தோப்பில் பட்டுப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டி யுடைத்துக் காயப்போடவேண்டும். அப்படிக் கில்லாமல் அவைகளை அழுகவிடவே கூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம் வண்டு ரொம்பவும் விருத்தியாகும். தோட்டத்துக்குள் எவ்விதமான வஸ்துவும் அழுகிக்குவிய இடங்கொடுக்கக் கூடாது.

மேலே சொன்ன இரண்டுவித வண்டுகளால் ஏற்படும நாசம் ஒன்றை ஒன்று பொருத்ததாயிருக்கிறது. தென்னம் வண்டு நன்றாயிருக்கும் உச்சிமரங்களில் துளைகளையுண்டாக்கி செவ்வண்டு அதில் வந்து சேர இடத்தை உண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் பட்டுப்போன மரங்கள் தென்னம்வண்டுகள் விருத்தியாக நல்ல வாஸஸ்தானமாகிறது. ஆகையால் மேற்சொன்னபடி ஜாக்ரதையோடு கவனம செலுத்தாவிட்டால் இவ்வண்டுகளால் பிடித்த தென்னம தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் நாசமாவதை தடுக்க முடியாமல் போகும்.

ASSESSMENT ON WELL - IMPROVEMENT

கிணறு வெட்டுவதால் உண்டாகும் லாபங்களின் மேல் தீர்வை.

சென்றமாஸம் ராஜ ப்ரதிநிதி சட்டஸபை கூடினபோது ஐக்ய மாகாணங்களின் ப்ரதிநிதியாகிய ஆனரபிள் ராஜா குஷால்பால் ஸிங் நிலஸெட்டில்மெண்ட் ஸம்பந்தமாக ஒரு தீர்மானங்கொண்டு வந்தார். அந்தத் தீர்மானமாவது.—

நிலஸ்வான்கள் தங்கள் ஸொந்தச்செலவில் கிணறு, குளம், கால்வாய், முதலிய பாசனங்கள் செய்துகொண்டு அவைகளால் லாபம் பெறுவார்களானால் அந்த லாபத்தின் பேரில் கவர்ன்மெண்டார் ரெவின்யூவுக்காக வரி விதிக்கக் கூடாது. அந்த லாபத்தை நிலஸ்வான்கள் சாச்வதமாக அனுபவிக்கவேண்டும்.

இதை ப்ரேரிக்கையில் ஆனரபிள் ராஜா குஷால்பால் ஸிங், விவஸாயப் பொருள்கள் அதிகமாக ஸாகுபடியாகும்படி செய்யவேண்டியது ரொமப அவச்யமென்றும், விவஸாயத்தில் சீர்திருத்தமேற்பட வேண்டியது அவச்யமென்றும், பெரிய பாசன வஸதிகள் ஏற்படுவதற்கு அநேக வருஷங்கள் செல்லுமென்றும், இப்போதுள்ள பாசன ஏற்பாட்டுக்கு அதிக செலவு ஏற்படாமலிருப்பதோடு சீக்ரம் லாபம் கொடுக்கக் கூடியதாயிருக்கிறதென்றும், பம்பாயிலும் சென்னையிலும் பாசன ஸௌகர்யங்களால் உண்டாகும் லாபத்துக்கு வரிபோடுவதில்லை யென்றும், அங்கே இருப்பதைப் போல் மற்ற மாகாணங்களிலும் ஏற்படவேண்டுமென்றும் சொன்னார். இன்னம், பாசன வேலைக் கமிஷன், பஞ்சங்களைப்பற்றிய கமிஷன், லார்ட் ரிபபன், ஸர் ஈவேர்ட் பெய்லி முதலியவர்களுடைய அபிப்ராயங்கள் தமது தீர்மானத்துக்கு ஸாதகமாக இருப்பதாகவும், தமது தீர்மானத்தில் கேட்டுக்கொண்டபடி குடிகளின் ஸொந்தச் செலவில் கட்டப்படும் பாசன வேலைகளால் ஏற்படுகிற லாபத்துக்கு வரி போடாமல் விட்டால் அதனால் கொஞ்சம் பண நஷ்டம கவர்ன்மெண்டுக்கு ஏற்படக்கூடும் என்றாலும், விவஸாய அபிவிருத்தி ஏற்பட்டு பஞ்சம் உண்டாவது குறைந்துபோய், அதனால் ஏற்படும செலவுகளும் நிலவரி நஷ்டங்களும இல்லாமல் போகுமாதலால் இப்படி பாசன வேலையால் உண்டாகும் லாபத்துக்கு வரி போடாததால் ஏற்படும் நஷ்டம் ஈடாகிப் போகுமென்றும், இப்படி ஸௌகாயம் செய்து கொடுக்காவிட்டால் விவஸாயிகள் தங்கள் நிலங்களில் கிணறுகள் வெட்ட அதிகமாக முன் வரமாட்டார்கள் என்றும், ஆகையால்

தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

ஆனரபிள் ஸர் எட்வர்ட் மாக்லாகன், தமது சொந்த அனுபவத்தில் வரியை உயர்த்துவார்கள் என்று பயந்து ஒரு விவஸாயியும் தமது நிலத்தைச் சீர்திருத்தாமலிருக்கவில்லை யென்றும், விவஸாயிகளுக்கு வேண்டிய உதவியைச் செய்ய கவர்ன்மெண்டார் தயாராயிருந்தாலும் சீர்திருத்தங்களால் உண்டாகும் லாபத்துக்கு வரியைத் தள்ளிவைக்கத் தயாராயில்லை யென்றும் சொன்னார்.

ஆனரெபிள் காஸிம் பஜார் மகாராஜா இந்தத் தீர்மானத்தைத் தாங்கிப் பேசுகையில் தேச முழுவதும் ஒரேவிதமாக ஸெட்டில்மெண்ட் செய்வது நல்லதெனறும், விவஸாயிகள் தங்களுடைய நிலங்களுக்குச செய்யும் சீர்திருத்தங்களால் உண்டாகும லாபத்தின்மேல் ஒரு ந்யாயமான அளவுக்குமேல் தீர்வை போடாமலிருக்க வேண்டியது அவச்ய மென்றும் சொன்னார்.

கவர்ன்மெண்டுக்காகப் பேசின ஸர ராபர்ட் கார்லைல் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப் பேசுகையில், இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் கவர்ன்மெண்டுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்படும் என்றும், இந்தியாவில் முன்னிருந்த எல்லா ராஜாங்கத்தாரும், சீர்திருத்தங்களால் உண்டாகும் லாபத்துக்கு வரி விதித்தேவந்திருக்கிறார்கள் என்றும், ஆகையால் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனறும் சொன்னார். தீர்மானம் கடைசியில் வோட்டுக்கு விட்டதில் நிறைவேறாமல் போயிற்று.

சென்னை ராஜதானியில் குளம கிணறுகள் வெட்டி நிலங்களில் அதிகமாஸூல் கிடைத்தால் அதற்கு தீர்வை விதிக்கிறதில்லை யென்று கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள் ஆனால் இது விஷயமாய் யாதொரு சட்டமும் கிடையாது, மற்றமாகாணங்களில் இருக்கும வழக்கததை ஒட்டி இந்த ராஜதானியிலும் அதிக வரிபோட யோசிக்கக்கூடுமாகையால் அதற்கு முன் அது விஷயமாக ஒருசட்டம் செய்யும்படி போராடி முன்ஜாக்ரதை செய்து கொள்ள வேண்டியது நிலஸ்வான்களின் கடமையாகும்.

CORIANDER.

கோத்துமல்லி.

கொத்துமல்லி 1 முதல் 2- அடி உயரமுள்ள ஒருபயிர், இதன் பூக்கள் கொத்து கொத்தாக மலரும். பூக்கள் வெண்மை நிறமானவை. விதைகள் உருண்டை வடிவமாயும் லேசில் இரண்டாகப் பிரியக் கூடியவையாயும் இருக்கின்றன. காய்கள் முற்றுமுன கெட்டவாஸனையுள்ளவை. நன்றாய் முற்றி உலர்ந்த பிறகு வாய்க்கு ருசியாயும், நல்ல வாஸனையாயும் இருக்கின்றன.

இதைப் பயிர செய்வதற்கு மழைக்காலமே ஏற்றது. மணல் கலந்த வண்டலிலும் கரிசலிலும் நன்றாய் வளரும். விதைத்த மூன்று நான்கு மாஸத்தில் மாஸூல் கிடைக்கும். இதற்கு இரண்டு தடவை களைபெடுக்கவேண்டும். நமது தேசததில் இந்த விதைகளை விதைக்கு முன் இரண்டு கைகளாலும் கசக்கி விதைகளை உடைத்தே விதைக்கிறார்கள். விதைத்து ஸுமார் மூனறு நாட்களுக்குள் விதைகள் முளைத்து விடுகின்றன. ஒரு மாஸததில் பயிர் காய்க்க ஆரம்பிக்கிறது. காய்கள்முற்றினபிறகு செடிகளைப்பிடுங்கி தடியால் அடித்தோ, மாடுகளைவிட்டு மிதிக்கச்செய்தோ, கொத்துமல்லியை யெடுத்துவெயிலில் நனறாயுலாத்திப் பிறகு பைகளில் போட்டுக் கட்டிவைக்கிறார்கள்.

ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் கொததுமல்லியை மணல் பாங்கான சரேஷ்டமான நிலத்தில பயிர்செய்கிறார்கள். ஒனறுகொன்று ஓரடி அகலமுள்ள உழவுச்சால்களில் விதையை விதைக்கிறார்கள், அங்கே ஒரு ஏக்கருக்கு

15 ராத்தல் முதல் 20 ராத்தல் வரையில விதை வேண்டியிருக்கிறது. செடிகள் ஒன்றுக் கொன்று ஆறு அல்லது எட்டு அங்குல தூரமிருக்கும்படிக்கு விட்டு இடையிலுள்ள செடிகளைப்பிடுங்கி விடுகிறார்கள். வஸந்த காலத்தில்களை அதிகமாகாமலிருக்கும்படி நிலத்தைக் கொத்திவிடுவார்கள். ஜூன் மாஸத்தில செடிகள் புஷ்பித்து ஆகஸட் மாஸத்தில் காய்கள் முற்றிப்போகின்றன. முற்றாத காய்கள் கெட்ட நாற்றமுள்ளவை யாகையால் அவைகள் நன்றாய் முற்றும் வரையில் விதையை எடுக்காமல் விட்டுவைக்கிறார்கள். மாஸூல் எடுக்கும்போது,முழுச்செடியையும பிடுங்கினுல் சேதம் ஏற்படு மாதலால் விதைகளுள்ள கிளைகளை மாத்ரம் நறுக்கி யெடுத்துப் பைகளில் போட்டுக் கொள்வது நல்லது. ஐரோப்பாவில கீழே துணிகள் விரித்து இநத உலர்ந்த கிளைகளைப் போட்டு மெதுவாய்த தடிகளால் தட்டி விதைகளைப் பிரித்தெடுக்கிறார்கள். நல்ல நிலத்தில ஒரு ஏகருககு சராசரி 25 ராத்தல் கொண்ட 77 மணங்கு மல்லி கிடைக்கும்.

கொத்துமல்லி இந்தியாவில் வெகுவாய் சமையலிலும, மருந்து வகைகளிலும், உபயோகப்படுகிறது. ஐரோப்பாவில் இதிலிருந்து ஒருவித எண்ணெய தயார செய்கிறார்கள். எண்ணெய் எடுதத பிறகு மீதியாயுள்ள பிண்ணாக்கு மாடுகளுக்கு தீனியாகிறது. அந்தப் பிண்ணாக்கில் நூற்றுககு 11 முதல 17 வரை ப்ரோடீன் என்னும் மாம்ஸம் வ்ருத்தி செய்யும் ஸததும், 11 முதல் 20 பாகம் தைல ஸத்தும் இருக்கின்றன.

SELECTING COCOANUT SEEDLINGS.

தென்னை நாற்றுத் தெரிந்தெடுத்தல்.

தென்னைநாற்று பாவ சரியான விதைகளை அங்கங்கேயுள்ள மரங்களில் நல்ல ஜாதியில் பார்த்து வாங்குவது நலமென்று 'கிருஷிகன்' சொல்லுகிறது. யாழ்ப்பாணத்து விதை மற்ற தினுஸுகளைவிட ச்லாக்யமென்றும், அதற்கடுத்தாற்போல் மலையாளம் விதை திறமென்றும் சொல்லுவது வாஸ்தவமானுலும் தற்காலம் தென்னை மரங்களை அணுகும் சில தொத்து வ்யாதிகளினுலும், காளான் ஸம்பந்தமான நோய்களினுலும் ஸம்பவிக்கும் ஏராளமான நஷ்டங்களை யோசிக்குமளவில், ஒருவர் தமது ஊர்களின் அருகாமையிலுள்ள நல்ல ஜாதி தென்னமரங்களிலிருந்து விதை பொறுக்கி உபயோகிப்பதே நலமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் ஷை தொத்து வ்யாதி சின்னங்கள் ஒருவேளை தென்னை நெற்றுகளிலேயே உள் ஊறி அப்பால் அந்நெற்றுக்கள் மரங்களாகும்போது அவைகளில் அவ்யாதிகள் பரவ இடமிருக்குமாகையால் அப்போது ஷை மரங்களால் ஏராளமான நஷ்டம் உண்டாகும்.

REASONS FOR DRAINING.

நிலங்களில் ஜலத்தை வடிப்பானேன்?

நன்செய் நிலங்களிலுள்ள ஜலத்தை வடிக்க வேணடியதவச்யமென்பதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. நன்செய் நிலத்தில் மண்ணிற்குள் காற்றுப்பரவுமபடிசெய்வது ரொம்ப முக்யம். இப்படிக் காற்றுப் பரவச்செய்வதற்கு ஜலத்தை வடியச்செய்ய வேண்டியது அவச்யமாகும். செடிகளின் வேர்கள் காறறை க்ரஹித்துக் கொள்ளுகின்றன. மேலும் ஆகாயத்திலுள்ள நைட்ரொஜினை மண்ணில் சேர்ப்பதற்கும் காற்றானது பூமிக்குள் பரவ வேண்டியது அவச்யமாகும. நிலத்தில் ஜலம் எப்போதும நின்று கொண்டிருந்தால் மேலே சொன்னபடி வேர் காறறை உட்கொள்ளவும், நைட்ரொஜனை மண்ணில் கலக்கவும் முடியாமல் போய் விடுமாதலால் அப்படிப்பட்ட நிலங்களில் ஜலத்தை வடிக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஜலம தானுக வடியக்கூடாமல் இருக்கும் நிலங்களில் ஓட்டினுல் செய்த குழாய்கள்

அமைத்து ஜலத்தை வடிக்க ஏற்பாடு செய்து பார்த்ததில் வயல்களின் மண்ணில் காற்று அதிகம் பரவி நிலத்தின் வளப்பம் அதிகமாயிற்றென்று தெரியவந்தது. குழாய்களால் வடியச் செய்வதால் நிலத்தில் இருக்கும் கனமான கெட்ட காற்றுகளும் குழாய்கள் வழியாய் வெளியேபோய் விடுகின்றன. வடிகால் வஸதியில்லாமல் நன்ருய் விளையாத நன்செய் நிலங்களில் இப்படிச் செய்து பார்ப்பது நல்லது.

MOTOR PLOUGHS.

மோட்டார் கலப்பைகள்.

ஸயாம தேசத்தில் விவஸாயிகள் மோட்டார் அதாவது யந்த்ர ஸகாயத்தால் இழுக்கப்படும் கலப்பைகளை உபயோகப்படுத்தி வருகிருர்கள். அங்கே உபயோகப்படும் மோட்டார்கள் ரொம்ப பழைய காலத்தவையாகிய ஆயில் எஞ்சின்களாம். பற்பல வேலைக்கு உதவும்படி எஞ்சின்களில் பற்பல ஸாதனங்கள் அமைத்திருக்கிருர்களாம். அவைகள் வேலைக்கு நன்ருய் உபயோகப்படுகின்றன. அவைகளால் தொந்தரவுகள் கிடையாவாம. நல்ல மோட்டார்கள் 15 குதிரைபலம் கொண்டவை. ஒரு நாளில் ரொமப களியாயிருக்கிற நிலத்தில் 2½ ஏக்கா விஸ்தீரணம் பூமியை 4 அங்குலம் ஆழம் உழுகின்றன. சிறிய வயல்களை பழைய முறைப்படி எருமையும காளைகளுங்கொண்டு உழுவதைவிட மோட்டார் எஞ்சின கலப்பைகளால் உழுவது அதிக செலவு பிடிப்பதில்லையாம். உழுவதற்கென்று செய்யப்பட்ட மோட்டார்களை உபயோகப்படுத்தினுல் இன்னம் செலவு குறையும் என்று சொல்லப்படுகிறது.

FORCING EARLY FRUITING.

சீக்ரம் காய்க்கும்படி செய்தல்.

பழச் செடிகளை சீக்ரம காய காய்க்கும்படி செய்வதற்கு ஒரு நல்ல முறையிருக்கிறது. இந்த முறையை ஒரு விவஸாயி 1904-ம் வருஷமுதல அனுஷ்டித்துப் பலனடைந்து வருகிருராம. அது எல்லா பழ மரங்களுக்கும் ஏற்றது. முறையும் மிகவும ஸுலபமானது. அவர் நல்ல வளர்ச்சியுள்ள ஜாதி மரங்களை தமது தோட்டத்தில பயிரிட்டு வளர்க்கிருர். புதிய தாய்ப் பயிரிடப்படும் பழக்கன்றுகள் வெளியில் நடத்தகுந்த ஸதிதியடைந்தவுடன் அவைகளை ஏற்கனவேயுள்ள மரங்களின் பக்கத்தில் நட்டு அவைகள் நன்ருய் வேரூன்றி வளர ஆரம்பித்தவுடன் அவைகளின் கிளைகளை பெரிய மரங்களின் கிளைகளோடு ஒட்டுக்கட்டி விடுகிருர். அவைகள் நன்ருய்ச் சேர்ந்து கொண்டவுடன பெரிய மரத்தின கிளைகளினுடைய மேல்பாகத்தை வெட்டி விடுகிருர். இதனுல் புதுச்செடி தன்னுடைய வேர்கள் மூலமாய் பூமியிலுள்ள ஆஹாரத்தை கரகித்து வளர்ந்து காய்க்க எவ்வளவு காலம் செல்லுமோ, அதைவிட ஒட்டுககட்டின மரத்தின ஸகாயத்தால் சீகரமாய்க் காய்க்க ஆரம்பிக்கிறது.

MANURE FOR CAMBODIA COTTON.

கம்போடியா பருத்திக்கு எரு.

நிலத்தை நன்ருய் உழுது ஆட்டுக்கிடை வைத்து கமபோடியா பருத்தி ஸாகுபடி செய்தாலும், அல்லது மீன எருவிட்டு பருத்தி ஸாகுபடி செய்தாலும், அல்லது வேப்பம் பிண்ணுக்கு முதலிய பிண்ணுக்கு திலுஸுகளையும் வைத்துப் பயிர்செய்தாலும நல்ல பலன் கொடுக்கும். ஏக்கா ஒன்றுக்கு 2000 முதல 3000 ஆடுகளுள்ள மந்தை போட்டால் போதுமானது. பிண்ணுக்கு, மீன முதலானவைகள் ஏக்கர் ஒன்றுக்கு 500 இராத்தல் போதுமானது.

CASUARINA AND COCOANUT.

சவுக்கும் தென்னையும்.

சவுக்கும தென்னையும் கலந்து பயிரிட்டால் தென்னைக்குக் கெடுதி நேரிடும்.

The Co-operative World.

கோவாபரேஷன் பகுதி.

MANAGEMENT OF RURAL SOCIETIES.

ரூரல் ஸங்கங்களின் நிர்வாகம்.

ஸமீபத்தில் ஸிம்லாவில் கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார்கள் கான்பரென்ஸ் கூடினபோது, மத்யமாகாணத்தைச் சேர்ந்த மிஸ்டர் எம். ஜி. தேசபாண்டே என்பவர் ஒரு வ்யாஸத்தில் ரூரல் ஸங்கங்களின் நிர்வாகத்தில் நேரும் ஸங்கடங்களைப்பற்றி விவரித்து எழுதியிருந்தார். அவர் அதில் குறிப்பிட்டிருந்ததாவது, கோவாபரேடிவ் ஸங்கங்களில் மெம்பராகச்சேரும் ஜனங்கள் ரொம்ப உயர்ந்த நிலைமையிலிருப்பவர்களல்ல. இந்தியாவிலுள்ள ஸாமான்ய ஜனங்கள் அநேகமாய் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் ரொம்ப முன்னேற்றம் அடையாமலிருக்கிறார்கள். தங்களுடைய பண்டைக்காலத்து வழக்கங்களை மாற்றுவதென்றால் அவர்கள் பின் வாங்குகிறார்கள். புதியவும் சீர்திருந்தியவும், சிரமத்தைக் குறைப்பனவுமான ஸாதனங்களை உபயோகிப்பதற்குங்கூட அவர்கள் பின் வாங்குகிறார்கள். இவைகளோடுகூட ஸாவ்கார்களுடைய தொந்தரவும் இருந்து வருகிறது. அவர்களுடைய நோக்கங்களுக்கும் ஜனங்களுடைய நோக்கங்களுக்கும் ஒற்றுமையே கிடையாது. கோவாபரேடிவ் ஸங்கங்களால் தங்களுக்குக் கெடுதி நேரிடுமென்று எண்ணி ஸாவ்கார்கள் ஏழைஜனங்கள் மனதில் இந்த கோவாபரேடிவ முயற்சியைப்பற்றி ஒரு கெட்ட எண்ணம் உண்டாக்கி வருகிறார்கள்.

இன்னும் க்ராமங்களில் ஜனங்களுக்குள் ஒற்றுமைக் குறைவும், கக்ஷிப்ரதிகக்ஷிகளும் இருந்து வருகின்றன. கடன் வாங்குகிறவர்கள் தங்களுக்கு எவ்வளவு கடன்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி விவரங்கள் சொல்ல ஸம்மதப்படுவதில்லை. பழைய கடன்களை யெல்லாம் தீர்க்கவோ ஏராளமான பணம் வேண்டியிருக்கும்.

ரயத்துகள் பொதுவாய் தான்யம் கடன் கொடுப்பவர்களிடம் கடன் வாங்குவது ஸகஜமாயிருக்கிறது. தான்யம் கடன் கொடுப்பவர்கள் பொதுவாய் பணம் கடன் கொடுப்பவர்களாகவே இருக்கிறார்கள். விவஸாயிகள் கூலியாட்களுக்குக் கொடுக்கும் கூலியைப்பணமாகக் கொடுக்காமல் தான்யமாகவே கொடுப்பதால், அவர்கள் தான்யம் கடன் வாங்க வேண்டியிருக்கிறது.

ரூரல் ஸங்கங்கள் விஷயமாக ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கும் சில ஸங்கடங்கள் நேருகின்றன. சில இடங்களில் ரூரல் பாங்கிகளின் மெம்பர்கள் தக்க மனிதர்களாகவும் பணக்காரர்களாகவும் இருப்பதில்லை. அவர்களிடம் பெருந் தொகைகளை நம்பிக் கொடுப்பதற்கில்லை. அவர்கள் வாங்கி வைத்துக்கொள்ள இஷ்டப்பட்டாலும், ஸெண்ட்ரல் பாங்கிகள் அவர்களை நம்பிப் பெருந்தொகைகளை அவர்களிடம் கொடுக்க இஷ்டப்படுவதில்லை. இப்படிப்பட்ட இடங்களில் ஸங்கங்களின் ஸெக்ரெடரிகள் ஷேர் ஹோல்டராக இருக்காதவர்களிடம் பணத்தை கொடுத்து வைக்க நேரிடுகிறது. இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் உதவி செய்ய முன் வரவேண்டும். ஸங்கங்களின் ஸெக்ரெடரிகள் தங்கள் கையிருப்புப் பணத்தை ஸர்க்கார் கஜானாவில் டெபாஸிட் செய்ய அநுமதி கொடுக்க வேண்டும்—என்றிப்படி மிஸ்டர் தேசபாண்டே அந்த வ்யாஸத்தில் தெரிவித்திருந்தார்.

அந்த வ்யாஸம் படிக்கப்பட்ட பிறகு, கான்ப ரென்ஸுக்கு வந்திருந்த மற்ற மெம்பர்கள் இது விஷயமாய்ப் பேசினர்கள்.

ஐக்ய மாகாணங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் சாட்டர்ஜி, அந்த மாகாணங்களில் ஒரு க்ராமத்தில் பல ஸங்கங்கள் இருந்தால் அந்த க்ராமத்திலிருக்கக்கூடிய கக்ஷிப்ரதிகக்ஷி கள் பலப்படுகின்றன என்றார். மத்ய மாகா ணங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் க்ராஸ்த் வெய்ட் தமது அனுபோகத்தில் ஒரு க்ராமத் தில் ஸங்கங்கள் அதிகமாக இருந்தால் கக்ஷி ப்ரதிகக்ஷிகள் ஏற்படாமலிருக்கின்றனவென்று தெரிவதாகச் சொன்னர். பேரார் மாகாணத் திலிருந்து வந்த ஒருவர் அந்த மாகாணத்தில் எந்த க்ராமத்திலாவது ஒன்றுக்குமேல் ஸங் கங்கள் இருந்தால் அவைகள் எல்லாம் ஒற்று மையாகவே நடந்து வந்தன வென்றார்.

ஸங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து பணம் கடன் வாங்கி மெம்பர்களுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிப் பேச்சு நடந்தது. மத்ய மாகாணங்களில் க்ராம பாங்கிகளின் மெம்பர் கள் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்குப்போய் பணம் கடன் வாங்கிவருவது வழக்கமாம். ஆனல் க்ராம பாங்கிகளின் டிரெக்டர்கள் தகுந்தவர் களாயிருந்தால் இப்படிப்போய் வாங்கி வர வேண்டிய கஷ்டம் கிடையாது. அங்கே ஸங் கங்களின் மெம்பர்களே யாராருக்கு இவ் வளவு கடன் கொடுக்கிறதென்று நிச்சயித்துக் கொள்ளுவார்களாம்.

ஐக்யமாகாணங்களில் ஸங்கங்களின் பஞ் சாயத்தார்கள் ஸெண்ட்ரல் பாங்கிக்குப்போய் பணம் கடன் வாங்கி வருகிறார்கள். பணத்தை மெம்பர்களுக்குக் கொடுக்கும்போது, ஸெக் ரெடரி, ட்ரெஷரருடன் ஸெண்ட்ரல் பாங்கியி லிருந்து ஒரு ஸிப்பந்தியும் வந்திருப்பார்.

சென்னையிலோ வென்றால், பணம் பஞ்சாய த்தாரிடம் ஒப்புவிக்கப்படுகிறது. சில ஸமயங் களில் பஞ்சாயத்தார்களே கடன்களில் பெரும் பாகத்தை எடுத்துக் கொள்ளுகிறதுண்டு. இத ஞல் பின்னல் கெடுதி நேரிடுகிறது. இதனல் இன்ஸ்பெக்டர்கள் ஸங்கங்களின் நடவடிக்கை களை நன்றாய் சோதிக்கவேண்டும் என்று ஏற் படுகிறது.

TANJORE CO-OPERATIVE CONFERENCE.

தஞ்சாவூர் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

சென்றமாஸம் தஞ்சாவூர் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் கூடினபோது பல தீர்மானங் கள் செய்யப்பட்டன அவைகளில் சில பின் வருமாறு:—

டிக்ரீயான கடனுக்கு வட்டி.

கடனைத் திருப்பிக் கொடாத மெம்பர்களின் மேல் ஸங்கங்கள் போடும் வ்யாஜ்யங்களில் டிக்ரீயான தேதிமுதல் பணம் வஸூலாகும் தேதி வரையில ஸங்கங்களின பை-லா-வில் உள் ள வட்டி விகிதத்தையே போடும்படிக்கும் இந்த விஷயத்தை கோர்ட்டாருக்கு உசித மென்று தோன்றுகிறபடி செய்யும்படி விட் டால் ஸங்கங்களுக்கு ரொம்ப கஷ்டங்கள் நேருவதால் அப்படி கோர்ட்டாரின் இஷ்டத் துக்கு விடாமல செய்யும்படிக்கும ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 24-வது ஸெக்ஷனை இந் தியா கவர்னமெண்டார் மாற்றவேண்டும்.

புது ஸங்கங்கள்.

இந்த ஜில்லாவில் (a) கோவாபரேடிவ் விவ ஸாய ஸங்கங்கள்; (b) கோவாபரேடிவ் பால் தயிர்ச்சாலை; (c) நெசவுகாரர்கள் ஸங்கம்; (d) கட்டிட ஸங்கங்கள்; (e) அரிசிமில்லுகள், வேர்க்கடலை ஸங்கங்கள், மொத்தமாய் நெல் ஸப்ளைசெய்யும் ஸங்கங்கள், எண்ணெய் மில்லு கள்; (f) கோவாபரேடிவ் கால் நடை இன்ஷூ ரென்ஸ ஸங்கங்கள்; (g) கோவாபரேடிவ் செயற்கை உரங்கள் செய்யும் ஸங்கங்கள் ஆகிய இவைகளை தகுந்த விடங்களில் ஸ்தா பித்து ஆதரிக்கவேண்டும்.

காலாகாலத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்தல்.

மெம்பர்கள் ஸங்கங்களுக்கு செலுத்த வேண்டியதாயிருந்தாலும் ஸரி, ஸங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கிக்குச் செலுத்துவதாயிருந்தாலும் ஸரி, கடனையும் வட்டியையும் காலாகாலத்தில் தவக்கமன்னியில் செலுத்தும்படி பஞ்சாயத்தார்கள் பார்த்துக்கொள்ள வேண்டியது அவச்யம்.

கோவாபரேடிவ் ஸங்கங்களும் எலிமெண்டரி கல்வியும்.

கோவாபரேடிவ் ஸங்கங்கள் எலிமெண்டரி ஸ்கூல்களின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு புது ஸ்கூல்கள் ஸ்தாபிக்க முயலவேண்டும்.

லோகல் ஃபோர்டுகள் தங்கள் ஆதீனத்தில் உள்ள சில பள்ளிக்கூடங்களை நன்றாய் நடந்து வரும் சில ஸங்கங்களின் மேற்பார்வையில் விட்டு வைக்கவேண்டும்.

க்ராம ஸுகாதாரம், க்ராமப் போக்குவரத்து ஆகிய இவைகளை சீர்திருத்த லோகல் போர்டுகள் கோவாபரேடிவ் ஸங்கங்களின் உதவியை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

GOVERNMENT AND CO-OPERATION.

கவர்ன்மெண்டும் கோவாபரேஷனும்.

ஸமீபத்தில் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் ஸிம்லாவில் நடந்தபோது ஸர் ராபர்ட் கார்லைல் கோவாபரேஷன்விஷயமாய் கவர்ன்மெண்டார் என்னென்ன காரியங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றிப் பேசினர். ஜனங்களுக்கு கோவாபரேடிவ் ஸங்கங்களில் நம்பிக்கையுண்டாகும்படி செய்வதும், ஸங்கங்கள் செவ்வையாய் நடந்து வரும்படி பார்த்துக்கொள்வதுமே கவர்ன்மெண்டின் வேலையாகும். ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளவேண்டுமென்பதுதான் கோவாபரேஷனின் முக்ய அம்சமாகும். கோவாபரேடிவ் ஸங்கங்கள் தாங்களே தங்கள் கார்யங்களை உதவியில்லாமல் நடத்திவரக் கூடியவைகளாயிருக்கும்போது அவைகள் கவர்ன்மெண்டின் உதவியை எதிர் பார்க்கும்படிக்கு யாதொரு கார்யமும் செய்யக்கூடாது. கவர்மெண்டார் கோவாபரேஷன் முயற்சி விஷயமாய் கவனமில்லாமலும், உபேக்ஷையாயும் இருக்கக்கூடுமென்று வைத்துக் கொண்டாலும், அதனால் கோவாபரேஷன் முயற்சிக்கு அதிக கெடுதல் ஏற்படாது. அந்த முயற்சி விஷயமாய் ரொம்ப அதிகமாய் தயவுகாட்டி வந்தால்தான் அதிகக்கெடுதல் ஏற்படும். ஆனால் கவர்ன்மெண்டார் ஒரு போதும் கோவாபரேஷன் விஷயமாக அச்ரத்தையாயும் உபேக்ஷையாயும் இருக்கமாட்டார்கள். உதவி அவசயம் வேண்டியிருக்கும்போது எந்த கவர்ன்மெண்டும் உதவிசெய்யப் பின் வாங்காது என்று சொன்னர்.

THE SOUTH CANARA CENTRAL CO-OPERATIVE BANK.

தென்கன்னடம் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி.

தென்கன்னடம் ஜில்லாவில் ஒரு ஜில்லா கோவாபரேடிவ் பாங்கி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதன மூலதனம் 50,000 ரூபாயாகும். பங்கு ஒன்றுக்கு 10-ரூபாயாக 5000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஆயிரம்பங்குகள் அந்த ஜில்லாவிலுள்ள கோவாபரேடிவ் ஸங்கங்கள் எடுத்துக்கொள்வதற்கென்று தனியாய எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த பாங்கியில் ஒரு விசேஷமென்ன வென்றால் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள இந்த பாங்கியில் பங்குகள் எடுத்துக்கொண்டு அதில் பணம் வட்டிக்குப் போடலாம். இதின் கணக்குகளை கவர்ன்மெண்ட ஆடிட்டர்கள் ஆடிட் செய்வார்கள். பாலன்ஸ் ஷீட்டை ஜில்லா கெஜட்டில் ப்ரசுரிப்பார்கள்.

இந்த பாங்கி சென்ற ஜனவரிமாஸம் 24-தேதி முன்று திறந்து வைக்கப்பட்டது.

23-ஸங்கங்கள் 91 பங்குகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஸாதாரண மெம்பர்கள் 763 பங்குகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

A DOUBT IN CO-OPERATIVE LAW.

கோவபாரேடிவ் சட்டத்தில் ஒரு ஸந்தேகம்.

கோவாபரேடிவ் ஸங்கங்களில் பஞ்சாயத்து மெம்பர்களால் மெம்பர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டு ஸங்கங்கள் நடந்து வருவது யாவரும் நன்கறிந்த விஷயம். பஞ்சாயத்தார் கொடுக்கும் கடன்களில் ஸங்கத்துக்கு ஏதாவது நஷ்ட கஷ்டங்கள் ஏற்பட்டால் அந்த கஷ்ட நஷ்டங்களுக்கு பஞ்சாயத்தார் பொறுப்பாளிகளா, அல்லது மெம்பர்களும சேர்ந்து பொறுப்பாளிகளா? பஞ்சாயத்தார் தான் பொறுப்பாளிகளென்று ஸமாதானம் சொல்லக்கூடுமாயினும பஞ்சாயத்தார மெம்பர்களால் ஏற்படுததப்பட்டவர்களே. பஞ்சாயத்தார் ஸ்திதி உள்ள ஒவ்வொருவரையும் மெம்பராகச் சேர்த்துக கொள்ளுகிறார்கள். ஒருவன் மெம்பராகச் சேருங்காலத்திலும் ஸங்கத்தில் கடன் வாங்கும்போதும் நல்ல நடத்தையுள்ளவனாகவிருக்கிறான். கடன் வாங்கியபிறகு அவன் நடவடிக்கை கெட்டு ஸங்கத்துக்கு நஷ்ட முண்டாக்கிவிட்டால் அந்த நஷ்டத்தை யார் பொறுப்பது என்று ஒரு கிருபா 'சுதேசமித்திரனில்' கேட்கிறார். அன்லிமிடெட் லையபிலிடி அதாவது மெம்பர்களின் பொறுப்புவரையறுக்கப்படாமல் இருக்கும் ஸங்கங்களில் மெம்பர்கள் எல்லாரும் நஷ்டத்துக்குப் பாத்யப் படவேண்டும்.

MADRAS PROVINCIAL CO-OPERATIVE UNION.

சென்னை ப்ரோவின்ஷ்யல் கோவாபரேடிவ் யூனியன்.

சென்ற வருஷம் மாசிமாஸத்து ஸஞ்சிகையில் சென்னை ப்ரொவின்ஷ்யல் கோவாபரேடிவ் யூனியன் என்று ஒரு ஸங்கம் ஏற்படுத்தப்படும் என்றும் அதன் நோக்கங்கள் இன்னவையென்றும் குறிப்பிட்டிருந்தோம். சென்ற மாஸம் சென்னையில் ப்ரொவின்ஷ்யல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடந்தபோது கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் அந்த யூனியன் ரெஜிஸ்டர் ஆகிவிட்டதென்றும், ஸங்கத்தை ஸ்தாபிப்பவர்கள் எப்பொழுது வேலையாரம்பிக்க இஷ்டப்படுவார்களோ அப்போது முதல் வேலை தொடங்கலா மென்றும் தெரிவித்தார்.

CO-OPERATIVE SOCIETIES IN TANJORE.

தஞ்சாவூரில் கோவபரேடிவ் ஸங்கங்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள கோவாபரேடிவ் ஸங்கங்களின் ஸங்க்யை 63. சென்ற வருஷத்தில மெம்பர்களின் ஸங்க்யை 3184-லிருந்து 5071-ஆக அதிகரித்திருந்தது.

நடை முதல் பணம் ரூ 2,05,426-லிருந்து 3,44,184-ஆக உயர்ந்தது. 3,19,666-ரூபாய் மொத்தம் மதிப்புள்ள 3,643-கடன்கள் அந்த வருஷம் கொடுக்கப்பட்டிருந்தன. ரிஸர்வு பண்டிலிருந்த மொத்தப்பணம் 8,500 ரூபாயாகும். ஸங்கங்களில் அநேகம் நன்றாய் நடைபெற்று வந்தன.

NEW TYPES OF SOCIETIES.

புது மாதிரியான ஸங்கங்கள்.

பம்பாய் ராஜதானியில் 29-கரும்புத்தோட்டக் காரர்களின் கோவாபரேடிவ் ஸங்கங்களும், 2-எரு வாங்கி விற்கும் ஸங்கங்களும், 12-விதை ஸப்ளை செய்யும் ஸங்கங்களும, மலிவான நூல் ஸப்ளை செய்யவும், நெய்த துணிகளை வாங்கி விற்பதற்கும் 24 - நெசவுக்காரர்கள் ஸங்கங்களும் இருக்கின்றன.

The Commercial World.

வ்யாபாரப் பகுதி.

PACKING AND TRANSPORT OF FRUITS.

பழங்களைக்கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவது.

சென்ற நவம்பர் மாஸம் விவஸாய டிபார்ட்மெண்டார் செய்து பரீக்ஷித்த பழக்கூடைகளைப்பற்றியும், த்ராக்ஷைப்பழப் பெட்டியைப் பற்றியும் எழுதியிருந்தோம். இன்னம், அநேக வித பழங்கள் அனுப்புவதற்கு "க்ரேட்" என்றுசொல்லப்படும்,பக்கங்களில்ஜன்னல்கள் போல் திறந்துள்ள ஒருவிதப்பெட்டி செய்து உபயோகித்துப் பார்த்ததில் இதுவும் ச்லாக்யமான ஏற்பாடு என்று தெரியவந்தது. இதன் விவரத்தைப்படத்தில் பார்க்கலாம். இந்தப் பெட்டி 24 அங்குலம் நீளம், 16 அங்குலம் அகலம், $13\frac{1}{2}$ அங்குலம் உயரம் உள்ளது. $5\frac{3}{4}$ சேர் நிறையுள்ளது. இது பெட்டி போன்ற கிண்ணங்கள் 24 கொள்ளும். ஒரு அடுக்குக்கு 6 கிண்ணங்கள் வீதம் 4 அடுக்குகளாக அவைகளை இந்தப்பெட்டியில் வைக்க வேண்டும். ஒரு கிண்ணத்தில் ஸாதாரணமாய் 4 பழம் கொள்ளும். ஒரு அடுக்கில் ஆறு



'க்ரேட்' என்னும் பழப்பெட்டி

கிண்ணங்கள் வைத்தால் அவைகள் ஸரியாக அசைந்து கொடுக்காமல் இருக்கும். மெல்லிய நீண்ட மரச்சட்டத்தால் செய்த ஒரு தட்டியை அடுக்குகளுக்கு இடையில் வைக்கவேண்டும். தட்டியில் குறுக்குச்சட்டங்கள் இருப்பதால் கிண்ணங்கள் அசையாமல் இருக்கின்றன. பெட்டியின்மேல் மெல்லிய பலகைகளை போட்டு மூடி ஆணியடித்து விட்டு பெட்டியைச் சுற்றிலும் கம்பியால் சுற்றி ஈயத்தால் ஸீல்வைத்து விடவேண்டும். இவைகளில் பழங்களை வைத்துப் பாக் செய்வதில் முன் சொன்னபடியே பாக் செய்யவேண்டும். பழங்களை மெல்லிய கடுதாசியில் சுற்றி வைப்பதால் அவைகள் உஷ்ணத்தால் அதிகம் கெடுதலடைவதில்லை. மேலும் பழங்கள் ரொம்பப் பழுக்காமல் காக்கப்படுகின்றன. இதனால் அவைகள் வெகுகாலம் கெடுதலடையாமல் இருக்கும். இந்தப்பெட்டிகளில் உள்ளகிண்ணங்களில் ஒரு வித பழங்களேயன்றி பலவிதப் பழங்களையும் வைத்து அனுப்பலாம். விற்கும்போதும் பழங்களைக் கிண்ணங்கிண்ணங்களாக விற்கலாம். கிண்ணத்தின் விலையையும் பழத்தோடுசேர்த்து வாங்கிவிடவேண்டும். பழங்களை அடிக்கடி வெளியில் எடுத்துவைக்க வேண்டியதில்லை. கின்

ணங்களும் பார்வைக்கு லக்ஷணமாக இருக்கின்றன. அவைகளைப் பழங்களுடனேயே கடைகளில் பரப்பி வைக்கலாம்.

பழங்கள் அனுப்புவதற்காகப் பரீக்ஷைசெய்து பார்த்த ஸாதனங்களில் சில நல்லவைகளாயில்லையென்று டிபார்ட்மெண்டார் சொல்லுகிறபடியால் அவைகளைப்பற்றி இங்குகுறிக்கவில்லை. மேலே விவரித்த ஸாதனங்களில் முதலில்சொன்ன மூங்கில் கூடைகள் நமது நாட்டிலேயே செய்துகொள்ளக்கூடியவை. மற்ற த்ராக்ஷைப் பழப்பெட்டிகளும், மூன்றுவதாக விவரித்த கின்னங்கள் அமைத்த பெட்டிகளும் இப்போது சீமையிலிருந்து வருகின்றன. 12 டஜன் த்ராக்ஷைப்பழப்பெட்டிகள் க்ளாஸ்கோவில் 15 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. இவைகளை இந்தியாவுக்குக் கொண்டுவர ஏழெட்டு ரூபாய் போலாகும். ஆகவே ஒரு பெட்டி ஸுமார் 2½ அணுவாகிறது. கிண்ணங்களமைந்த பெட்டி க்ளாஸ்கோவில் டஜன் 5 ரூ 10 அணு ஆகிறது. இதற்கும் இங்கு வரவழைக்க 100-க்கு 55 பங்கு செலவாகும். ஆகவே ஒவ்வொரு பெட்டியும் இவ்விடத்தில் முக்கால் ரூபாய்க்கு அடங்கும். தனிக்கிண்ணங்கள் ஒரு க்ரோஸ் அதாவது 12 டஜன் இவ்விடத்தில் 6 ரூபாயாகும். ஆகவே ஒவ்வொரு கிண்ணமும் முக்காலணுவாகும். ஆனால் இவைகளையெல்லாம் பெருந்தொகைக்கு வரவழைத்து வந்தால் இவைகளின் விலை குறையலாம். இவைகளைப்போல் இந்தியாவில் செய்தால் விலை இன்னம் குறையலாமென்று நாம் எண்ணுகிறோம். சணப்பம் நார் அயோத்தியில் ப்ரெஸ் செய்த கட்டுகளாக மணங்கு 4 ரூபாய் வீதம் விற்கிறது.

வ்யாபாரிகள் பழங்களை லாபகரமாக விற்பதற்காக அவர்களுக்கு சில ஸௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டும். முதலாவது அவர்களுக்குப் பழங்கள் சில்லரையில் எவ்வளவுக்கு விலைபோகின்றன வென்று 'அபிஷியல்' விலை ஜாப்தாக்கள் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இந்த விலை ஜாப்தாக்கள் முக்ய பட்டணங்களில் மார்க்கெட் ஸூபரின்டெண்டெண்டுகளால் ப்ரசுக்கப்படுகின்றன. இவைகள் வெளியூரிலுள்ள வ்யாபாரிகளுக்குத் தெரிந்தால் அவர்கள் தங்களுடைய பட்டணத்து ஏஜெண்டுகளிடம் ஏமாந்து போகாமல் ஜாக்ரதையாக இருக்கமுடியும். மார்க்கெட்டுகளில் பழங்களை ஏலம் போடுவது மார்க்கெட்டு ஸூபரின்டெண்டெண்டுகளின் மேல் பார்வையில் நடக்க வேண்டும். பழங்களை ஏலத்தில் கேட்கும் வ்யாபாரிகள் ஒன்றுசேர்ந்து கொண்டு பழத்தின் விலையை ரொம்பக்குறைத்துக்கேட்டால் பழக்காரர்கள் தங்கள் சரக்குகளை விற்காமல் எடுத்துக்கொண்டு போகத் தயாராயிருக்கவேண்டும். இந்த முறைகளை கல்கத்தாவில் அனுஸரித்ததில் ஸௌகர்யமாக இருந்தது.

அநேக ரெயில்வேக்களில் ஒரேமனிதருக்கு அநேக பார்ஸல்கள் அனுப்பினாலும ஒவ்வொரு பார்ஸலையும் தனித்தனியாக நிறுத்துச் சார்ஜ்செய்கிறார்கள். இவைகளை ஒருமிக்க நிறுத்து சார்ஜ் செய்தால் வ்யாபாரிகளுக்கு ஸௌகர்யமாயிருக்கும். ஒவ்வொன்றும் 28 சேர் கொண்ட பத்து பழப் பார்ஸல்களை அனுப்பும் போது ஒவ்வொரு பெட்டியையும தனியாக நிறுத்து 28 சேர் இருந்தாலும் 30 சேருக்குள்ள சார்ஜைக் கேட்கிறார்கள். அப்படிக்கில்லாமல் இவைகளை மொத்தமாக நிறுத்து 280 சேர் அதாவது 7 மணங்குக்கு சார்ஜ் செய்ய வேண்டும். இந்தியாவில் சில ரெயில்வே கம்பெனிகள்தான் இந்த ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கின்றன.

PRICE OF RICE.

அரிசியின் விலை.

இந்தியாவில் சென்ற வருஷம் நெல் விஸ்தீரணத்தில் நூற்றுக்கு 3 பாகம் குறைவாக ஸாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது வழக்கம்போல் பயிரிடப்படும் விஸ்தீரணத்தில் ஸுமார் 22-லக்ஷம் ஏக்கர் நிலம் ஸாகுபடியாகவில்லை. இப்படி ஸாகுபடியான நிலம் குறைவாயிருந்ததோடு பம்பாய் பேஹார், ஒரிஸா, ஐக்யமாகாணங்கள் ஆகிய இவ்விடங்களில் மழைக்குறைவாலும், வங்காளத்தில் வெள்ளத்தாலும் நெற்பயிர் ரொமப சேதமடைந்து போய் விட்டது. இதர நாடுகளில் நெல் விளைச்சல் எப்படி யிருக்கிறதென்று பார்ப்போம். அவ்விடங்களில் மாஸுல் குறைந்து போனால், இந்தியாவிலுள்ள அரிசி அவ்விடங்களுக்குப் போய்விடக்கூடும்.

ஆனால் சில ஸமயங்களில் பர்மாவிலிருந்து மற்ற இநதியத் துறைமுகங்களுக்கு அரிசி வந்திறங்குவதுண்டு. இந்த வருஷம் பர்மாவிலிருந்து 22-லக்ஷம்டன் அரிசி ஏற்றுமதியாகலாம். ஆனால் சில வருஷங்களாக ஜப்பானியர் பர்மா அரிசியை ஏராளமாக வாங்கிவருகிறார்கள். ஜப்பானில் இப்போது 3-லக்ஷம் டன் அரிசி குறைவு பட்டிருந்தாலும் ஜப்பானுக்கு ஸொந்தமான கொரியாவில் 2½ லக்ஷம டன் அரிசி அதிகமாக ஸாகுபடியாகும்.

அரிசி தங்களுக்கு அதிகம் வேண்டியிருக்குமென்று ஜப்பானியர் கொரியாவில் நெல ஸாகுபடி விஷயமாக ரொம்ப ஊக்கம் பாராட்டி வருகிறார்கள். ஆகையால் இவ்வருஷம் பர்மா அரிசிக்கு ஜப்பானில் அதிக க்ராக்கி ஏற்படாதென்று பயோனீர் பத்ரிகை சொல்லுகிறது.

அமெரிக்காவிலுள்ள ஐக்ய மாகாணங்களில் ஒரு லக்ஷம் டன் அரிசி குறைவுபடுமாம். ஆனால் பர்மாவுக்குக் கிழக்கேயுள்ள ஸெய்கனிலிருந்து ஒரு லக்ஷம் டன் அரிசி அதிகமாக வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாகலாம். ஆகையால் மேல் சொன்னவைகளை கவனித்தால் இந்த வருஷம் அரிசி விலை ஏறி விடும் என்று நினைக்க இது வரைக்கும் காரணமொன்றும் ஏற்படவில்லை யென்று பயோனீர் பத்ரிகை அபிப்ராயப்படுகிறது.

NEUTRALIZING THE PUNGENCY OF GINGER.

இஞ்சியின் காரத்தை மாற்றுதல்.

இஞ்சி தேகத்துக்கு மிகவும நல்லதென்று அதை அநேகர் சாப்பாட்டுடன் உபயோகிக்கிறார்கள். சுக்கும் மருந்து வகைகளில் வெகுவாய் உபயோகிக்கப்படுகிறது. சுககு வெல்லமென்று ஜீரணத்துக்காக ஒரு மருந்தும் தயார்செய்து ஜனங்கள் சாப்பிடுகிறார்கள். இஞ்சியிலும் சுக்கிலும் காரம் அதிகமாயிருப்பதால் அதை அதிகம் உபயோகப்படுத்துவது கஷ்டமாயிருக்கிறது. சீனாவில் ஜனங்கள் இஞ்சியிலுள்ளகாரத்தைப் போக்கி தகுந்த விதமாய்த் தயாரிதது வெளி நாடுகளுக்கு ஏராளமாய் அனுப்பிவருகிறாகள்.

இஞ்சியை நனறாய்க் கழுவி அதன் மேல் தோலைச் சுரண்டி எடுத்துவிட்டு முள்கரண்டிகளால்இஞ்சியில் குத்தி த்வாரம் செய்துகொள்கிறார்கள். பிறகு அவைகளை அரிசி கழுவின ஜலத்தில் அதாவது கழுநீரில் அலம்பி யெடுத்துக் கொள்கிறார்கள். நல்ல வெள்ளைச் சர்க்கரையில் தயார் செயத பாகில அவைகளைப் போட்டு இரண்டுமணி நேரம் காய்ச்ச வேண்டும். இப்படி மூன்று நான்கு தட்வை காய்ச்சின பிறகு இஞ்சியில் பாகு நன்றாய் ஊறியிருக்கும். பிறகு அவைகளை ஸீஸாக்களிலோ, ஜாடிகளிலோ போட்டு நிரப்பி இஞ்சியின் மேல் சர்க்கரைப் பாகை ஸீஸா நிறைய ஊற்றி மூடி விடவேண்டும். இதற்குச சர்க்கரைப் பாகு இஞ்சி அதாவது ஸிரப் இஞ்சியென்று பெயர். இஞ்சி உலர்ந்திருக்க வேண்டுமானால்

சர்க்கரைப்பாகில் போட்டுக் காய்ச்சின பிறகு பாகை நன்றாய் வடியவிட்டு உலரும்படி செய்கிறார்கள். பிறகு மூங்கில் தட்டுகளில் சர்க்கரையைப்போட்டு சாக்கரைமேல் இஞ்சியைக் கொட்டிப் புரட்டுகிறார்கள். சாக்கரையானது இஞ்சியை மூடிக்கொள்ளுகிறது.

இஞ்சியில் இரண்டு விதமுண்டு. ரொம்ப இளசாகவுள்ளதும காரமில்லாததுமான முளைகள் ஒருவிதம். இது ரொம்ப உயர்ந்ததாம். நாருள்ளதும் ரொம்ப காரமானதுமான கிழங்கு இனொன்று திணுஸாகும். இது முதலில் சொன்ன திணுஸுக்கு அடுத்தபடி தான்.

AN INDUSTRIAL DEPOT AT BANGALORE.

பங்களூரில் ஒரு கைத்தொழில் ஸாமான்கள் டெப்போ.

மைஸூர் தொழிலாளிகள் செய்யும் ஸாமான்களை ப்ரபலமாகத்தெரியும்படி செய்வதற்காகவும், ஷை தொழிலாளிகள் தற்காலம் ஜனங்களுக்கு என்னென்னவிதமான ஸாமான்கள் வேண்டுமெனபதை யறிந்து, தங்களுடைய ஸாமான்களை அதற்கிணங்க செய்வதற்கு ஸௌகர்யம் உண்டாக்குவதற்காகவும் ஒரு கைத்தொழில் டெபோ ஏற்படுத்தவேண்டுமென்று மைஸூர் கைத்தொழில் வ்யாபாரக் கமிட்டி கவர்ன்மெண்டுக்கு ஒரு ப்ரேரணை செய்தது. கவர்ன்மெண்டார் அந்த ப்ரேரணையை ஏற்றுக்கொண்டு பங்களூரில் ஒரு டெபோ ஏற்படுத்தும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள்.

WATERING OF COTTON.

பருத்தியில் ஜலம் சேர்ப்பது.

இந்தியாவில் பல பருத்தி வ்யாபாரிகள் தாங்கள் விற்பனைசெய்யும் பருத்தியில் தகுந்த விதமாய் ஜலத்தைச்சேர்த்து பருத்தியை ஈரமாக்கி அதன் நிறையை அதிகரிக்கச் செய்வது ஸகஜமாயிருந்து வருகிறது. இப்படிப் பருத்தியை ஸாமர்த்யமாய் ஈரமாக்கி நிறையை அதிகப்படுத்துவதற்காகவென்றே பருத்தி ப்ரதேசங்களில் தக்க யந்த்ரங்களை உபயோகித்து வருகிறார்கள். உபயோகிக்கும் ஜலம் எப்போதும் சுத்தமாயிருப்பதில்லை. இப்படிச்செய்வது பலவிடங்களில் பஹிரங்கமாயும் நடந்து வருகிறது. இந்தக் குறையை நீக்குவதற்காக இந்தியா கவர்ன்மெண்டாரைச் சட்டம் ஏற்படுத்த முடியுமா என்று இந்தியா மந்த்ரி கேட்கப் போகிறாராம். இப்படிப்பட்ட மோசத்தைத் தடுக்க ஒரு சட்டம் ஏற்படுத்தினால் பருத்தி வாங்குகிறவர்களுக்கு ரொம்பவும் நன்மையுண்டாகுமென்பதில் ஸந்தேகமில்லை.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற நவம்பர்மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 26 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

1	பாங்கிக் கம்பெனி.	...	ரூ. 50,000
1	இன்ஷூரென்ஸ் கம்பெனி	...	50,000
2	ரெயில்வேக்கள்	...	68,00,000
2	அச்சிட்டு ப்ரசுரம் செய்யுமகம்பெனிகள்	...	7,90,000
9	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலேசொன்னவை தவிர)	...	2463,200
2	மில்லுகளும ப்ரெஸுகளும்	...	3,50,000
½	தேயிலைக் கம்பெனிகள்	...	4,00,000
2	கிலக்டிரிக் கம்பெனிகள்	...	2,00,000
21		ஆக மொத்தம்	1,11,03,200

The Educational World.
வித்யாவிஷயப் பகுதி.

SHOOTING STARS.

BY
M. C. S. ANANTHA PADMANABHA RAU, M. A.

உதிர் நக்ஷத்ரங்கள்.

சில நக்ஷத்ரங்கள் ஆகாய மண்டலத்தில் பதிக்கப்பட்டவை போலவும், அம்மண்டலம் பூமியைச் சுற்றி தினம்தினம் கிழக்கிலிருந்து மேற்குப் பக்கமாக சுழலுவதுபோலவும் நமக்கு தென்படுகின்றன. இந்நக்ஷத்ரங்கள் சுழலுவதுபோல் தோன்றினும் மண்டலத்திலே இடம் விட்டு இடம் மாறுவதில்லை. இரவில் நக்ஷத்ர மண்டலத்தை கொஞ்சநேரம் கவனித்தவர்களும் நிலையாக நின்று ப்ரகாசிக்கும் நக்ஷத்ரங்களின் இடைஇடையே சில பளிச்சென்று ப்ரகாசித்து இடம் விட்டு இடம் பேர்ந்து ஓடுவதை கவனித்திருப்பார்கள். இவற்றில் சில அதிக தூரம் செல்வனவாகவும், சில அதிக ப்ரகாசம் உள்ளனவாகவும், சில நானாவர்ணங்கள் உடையனவாகவும், சில வெடித்து துளித்துளியாக சிதறுவனவாகவும், சில வெண்மையான கோலமிட்டாற் போன்ற கோடுகளுடன் தங்கள் மார்க்கங்களை காட்டி மறைவனவாகவும் காணப்படுகின்றன. இவற்றை "உதிர் நக்ஷத்ரங்கள்" என்றும், "ஆகாயக் கொள்ளிகள்" என்றும் சொல்லுகிறோம். இவற்றைக் கண்டவர்களுடைய மனதில் இவற்றின் வ்ருத்தாந்தத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் தோன்றுவது இயல்பே. பரலோகம் சென்றவர்களின் உயிர் கொஞ்ச காலம் ஆகாயத்தில் நக்ஷத்ரங்களாக ப்ரகாசிக்கின்றனவென்றும், குறிப்பிட்டகாலம் சென்றதும் பூமியில் புனர் ஜன்மம் எடுப்பதற்காக பூமியில் விழுகின்றனவென்றும், இவைகள் விழுவதை பார்த்தவர்கள் இந்த புதிய பிறவியில் என்ன கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்குமோ என்பதை எண்ணி மனவருத்தப்பட்டு, ஸ்வாமியைத்யானிக்கவேண்டுமென்றும் பக்திமான்கள் சொல்வதைப்பலர் கேட்டிருக்கலாம். விஷய சாஸ்த்ரங்களை ஆராய்ந்த வான சாஸ்த்ரிகளின் அபிப்ராயத்தை இப்போது விவரிப்போம்.

இவை எவ்விடமிருந்து வருகின்றன? எங்கே செல்கின்றன? இவற்றின் பரிமாணம் என்ன? எவ்வளவு தூரத்தில் தென்படுகின்றன? வேகமென்ன? ஸங்கயை என்ன? இவைபோன்ற கேள்விகள் பார்ப்பவர் மனதில் தோன்றுவது ஸாதாரணம். இக்கேள்விகளுக்கு விடையளிக்க இங்கே முயல்வோம்.

சில ஸமயங்களில் அடுத்து அடுத்து ஏராளமாகவும், சில காலங்களில் விட்டுவிட்டு கொஞ்சமாகவும் காணப்பட்டாலும், உதிர் நக்ஷத்ரங்கள் தோன்றாத இரவு இல்லையென்று சொல்லலாம். சில மெதுவாக ஆகாயத்தில் உலாவும்போது அவற்றின் மார்க்கத்தை நன்கு குறிப்பிடலாம். சில அதிசீக்ரமாக மின்னலைப் போல் பாய்ந்து மறைகின்றன. சில மேல்நோக்கியும் சில கீழ்நோக்கியும் சில ஒரே மட்டமாகவும் பாய்கின்றன. நக்ஷத்ரமண்டலத்தில் உள்ள நக்ஷத்ரங்களில் காணும் ஒழுங்கில் ஒன்றும் இவற்றில் எளிதில் தோன்றுவதில்லை.

நக்ஷத்ரங்களின் பெயர்களையும் இடங்களையும் அறிந்துள்ள வானசாஸ்த்ரிகளில்சிலர் உதிர் நக்ஷத்ரங்கள் தோன்றுமிடங்களையும், மறையும் இடங்களையும் நக்ஷத்ர படத்தில் கண்டு அவற்றின் வழியைக் குறித்துப் பார்த்ததில், ஒரு ஸமயத்தில் காணும் உதிர் நக்ஷத்திரங்களெல்லாம் ஒருமத்யஸ்தானத்திலிருந்தே, திருவிழாக்

காலங்களில் நாம் காணும் புதை பாணங்களைப் போல, 1-வது படத்தில் காட்டியபடி, நாலா பக்கமும் பாய்ந்தோடுகின்றனவென்றும்,வெவ்



I-படம்.

வேறு தினங்களில் காணும் நக்ஷத்ரங்கள் வெவ்வேறு மையத்திலிருந்து புறப்படுகின்றன வென்றும், இங்கும் அங்கும் தோன்றும் சில பெரிய உதிர் நக்ஷத்ரங்கள் ஒரு கூட்டத்தையும் சேராமல் தனியே தோன்றுகின்றனவென்றும் கண்டிருக்கிறார்கள், நவம்பர் 14,16 தேதிகளில் தோன்றும் உதிர் நக்ஷத்ரங்களெல்லாம் 'மக' நக்ஷத்ரத்தை அடுத்த இடத்திலிருந்து புறப்படுவதாகத் தோன்றுகின்றன. டிஸம்பர் 6-7 தேதிகளில் உதிரும் நக்ஷத்ரங்களெல்லாம் பரணி நக்ஷத்ரத்தின் பக்கத்திலிருந்து புறப்படுவதாகத் தோன்றுகின்றன.

இவற்றில் சில பூமியில் விழுகின்றன; சில கண்ணுக்குத் தென்பட்டு உருகிக்காற்றுகி எரிந்து போகின்றன; சில நசித்து போகாமல் தெரிந்து மறைகின்றன. பூமியில் அகப்பட்டவைகளெல்லாம் இரும்புத் துண்டங்களாகவாவது, இரும்பு கலந்த கல்துண்டங்களாகவாவது இருக்கின்றன. இவற்றின்மேல் பாகங்கள் உருகி ஆறினவைபோல வழவழப்பாயிருக்கின்றன. அகப்பட்டவையின் பரிமாணம் ஒரேமாதிரி இல்லை. சிறிய கற்கள் முதல் ஒரு டன் எடையுள்ளவைகள் வரையில் அகப்பட்டிருக்கின்றன. இவைகளை 'செத்த காலேஜ்' என்று சொல்லும் ம்யூஸியம்களில் வைத்திருக்கக்காணலாம்.

அதிக கும்பலாகக் காணும் உதிர் நக்ஷத்ரங்களெல்லாம பூமி மட்டத்திலிருந்து 75-மைல் உயரத்தில் ஆகாய மண்டலத்தில் தோன்றி, சாய்வாக 40, 50 மைல் தூரம்சென்று 50மைல் உயரத்தில் மறைந்துபோவதாக கணக்கிட்டிருக்கிறார்கள். இவைகள் ஒன்றேனும் பூமியை அடைவதில்லையாம். இவைகள் இரும்பு, கல் முதலியவற்றால் ஆனவைகளே யென்றும், வெவ்வேறு பரிமாணமுடையன வென்றும், ஆகாயத்தில் வேகமாகச்செல்லும்போது உரைவதால் உஷ்ணம் அதிகரித்து, ப்ரகாசிக்கின்றனவென்றும், நமது ஆகாய மண்டலத்தைத் தாண்டியதும் உஷ்ணம் தணிந்து மறைகின்றன என்றும் சொல்லுகிறார்கள்.

இக்கற்களும் தூள்களும் கும்பல் கும்பலாக எங்கும் விரைவாகப் பறந்து கொண்டிருக்கின்றனவென்றும், பூமியும் க்ரஹங்களும் ஸூர்யனை சுற்றுவதுபோல் ஸூர்யனை தங்கள் தங்கள் கதியில் சுற்றுகின்றனவென்றும், (2-வது படத்தைப்பார்க்க)பூமியின் மார்க்கமும் இவற்



றின் மார்க்கமும் ஸந்திக்கும் காலத்தில், பூமி

யைச்சுற்றிலுமுள்ள ஆகாய மண்டலத்திற்புகுந்தவைகள் தான் நமது கண்ணுக்குத் தென படுகின்றனவென்றும், மார்க்கமும் ஸந்திக்கு கற்கும்பல்களும் பூமியும் ஒரேஸமயத்தில்ஸந்திக்கும் இடத்திற்கு வருமாயின், வானமீன்கள் (உதிர்நக்ஷத்ரங்கள்) ஏராளமாக உதிரும் காட்சி காணலாமென்றும் வானசாஸ்த்ரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இம்மாதிரி 33½-வர்ஷத்திற்கு ஒரு முறை நவம்பர்மீ 14-16-தேதிகளில் ஒரு நக்ஷத்ர பாணவேடிக்கைத் தெரிகிறதாம். 1866-வருஷம் நடந்தது அதிக வியக்கத்தக்கதாயும், ஆகாயத்தில் நக்ஷத்ரங்களில் பாக்கி ஏதேனும் நிற்குமோ என்று ஸந்தேகப்படும்படியாக இருந்ததாயும் பார்த்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். 1899-வர்ஷம் நடந்தது நமக்கு நன்ருய் புலப்படவில்லை. பகற்காலத்தில்நடந்ததாகவும் ரஷ்யாதேசத்தில் நன்ருகத் தெரிந்ததாகவும் நாம் வாசித்தோம். க்ரஹணம் முதலியவைகளை முன்னமே கணித்து வைப்பது போல், இம்மாதிரி நக்ஷத்ரங்கள் உதிரும் காலங்களை கணக்கிட்டு அந்த ஸமயத்தில் கவனித்து சாஸ்த்ரத்தை உறுதிசெய்கிறார்கள். நவம்பர் மீ 14,16-தேதிகளில் விடியற்காலையில் வருஷா வருஷம் நக்ஷத்ரங்கள் உதிருவதைக் காணலாம். ஆனல் 33-வருஷத்திற்கு ஒருதடவை தான் ஏராளமாக உதிரும் காட்சிதென்படும். நக்ஷத்ர மண்டலத்தில் நமது பூமியின் வழி அதிக சிறியது என்பதையும், பூமியின் ஸமீபத்தில் வந்த நக்ஷத்ரங்கள் தான் புலப்படுகின்றன வென்பதையும், பூமி சுற்றிக் கொண்டே இருக்கிறதென்பதையும் எண்ணும்போது, நமது கண்ணுக்குப் புலப்படாமல் ஸஞ்சரிக்கும் கற்களின் ஸங்க்யை எவ்வளவு என்று நம்மால் நினைக்க முடியுமோ?

எம். வி. எஸ் அநந்தபத்மநாப ராவ்.

EYESIGHT IN SCHOOL BOYS.

பள்ளிக்கூடப் பையன்களின் பார்வை.

சிறுவர்களுடைய தேகம் வளர்ந்து வருங் காலத்தில் கண்களை ஸரியானபடி உபயோகிக்காததனுல்தான் பெரும்பாலும் கண்கள் பார்வைக் குறைவு அடைகின்றன. கண்களின் பார்வைக்குறைவு விஷயமாய் சில இடங்களில் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் பின்வரும் விஷயங்கள் வெளியாயின.

(1) ஆறுவயஸுக் குள்பட்டவர்களுக்குள் பார்வைக் குறைவு ரொம்ப அபூர்வமாய்த்தான் இருந்தது. (2) பள்ளிக்கூடங்களில் வகுப்பு உயர உயர மாணவர்களின் பார்வை குறைவடைந்து கொண்டேவந்தது. இந்த ஒரு வ்யாதி தான் பெரிய மாணவர்களிடம் அதிகமாயும் சிறிய மாணவர்களிடம் குறைவாயும் இருந்து வந்தது. (3) பிள்ளைகள் இலக்கிய ஸம்பந்தமான வேலை, அதாவது, புஸ்தகங்கள் வாசிப்பது, எவ்வளவுக்கு அதிககாலம் செய்கிறார்களோ, அதற்கேற்றபடி பிள்ளைகளின் கண்பார்வையும் ரொம்ப குறைவாயிருக்கது (4) பள்ளிக்கூடங்களில் வெளிச்சம் நன்ருயிருந்தால்பிள்ளைகளின் கண்பார்வை நன்ருயும், வெளிச்சம் குறைவாயிருந்தால் கண்பார்வைரொம்ப மட்டமாகவும் இருந்தது.

கல்விமுறை கெடுதலாயிருப்பதனுல்தான் பிள்ளைகளின் கண்கள் கெடுதலடைகின்றன என்பதை அறிந்துகொண்டு, அநேக அதிகாரிகள் 12-வயஸுக்குக் குறைந்த மாணவர்கள் உபயோகிக்கும் புஸ்தகங்கள் இன்ன விதமாயிருக்கவேண்டுமென்பதைப்பற்றி விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளைப் பற்றி சென்றவருஷத்து ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில் சிறிது குறிப்பிட்டிருக்கிறோம். அந்த விதிகள் ஸங்க்ரகமாகப்பின்வருமாறு:—

பாடப் புஸ்தகங்களில் உபயோகிக்கும் கடிதாசி போதுமானவளவு தளமானதாயிருக்க

வேண்டும். எழுத்துகள் பெரியவையாயும்தெளிவாயும்இருக்கவேண்டும். வரிகளுக்கிடையில் தகுந்த அளவு இடம் விட்டிருக்கவேண்டும். புஸ்தகங்களிலுள்ள கடிதங்கள வெண்மையாகவாவது, சிறிது மஞ்சள் நிறமாகவாவது இருக்கவேண்டும். கருப்புமையில் அச்சிட்டிருக்கவேண்டும். இதனால் வேறு வர்ணக் கடுதாசிகளில் வேறு மைகளால் சில மாணவர்கள் எழுதுவது கெடுதல் என்று ஏற்படுகிறது. ரொம்ப பளபளப்பான கடுதாசி உதவாது. தற்காலம் ஒவ்வொரு பாடத்துக்கும் வித்யாதிகாரிகள் அநேக புஸ்தகங்கள் தகுதியானவை என்று சொல்லி வருவதால் உபாத்யாயர்கள் இந்த விதிகளுக்கு ஒத்திருக்கும் புஸ்தகங்களையே பையனகள் வாங்கி உபயோகிக்கும்படி செய்யவேண்டும்.

PHYSICAL CULTURE IN SCHOOLS.

பள்ளிக்கூடங்களில் தேகப் பயிற்சி.

பள்ளிக்கூடங்களில் தேகப் பயிற்சியைப் பரவச்செய்வது விஷயமாய் சிலகாலம் ஆராய்ச்சிசெய்து கொண்டிருந்த மிஸ்டர் ரென் என்பவரை தேகப் பயிற்சிக்காக ஒருபுஸ்தகம் எழுதும்படிக்கும், அந்தப் புஸ்தகத்தில் அவர் தெரிவிக்கும் பயிற்சிகளை அனுபவத்தில் உபயோகிக்கும்படி ஒரு வகுப்பு ஏற்படுத்திஅவைகளைக் கற்பிக்கவும், பம்பாய் கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் நியமித்திருந்தார்கள். சென்ற அக்டோபர் மாஸத்தில் பூனாவில் பல பள்ளிக்கூடங்களிலிருந்து உபாத்யாயர்கள் வந்து கூடியிருந்தபோது அவர்களுக்கு மிஸ்டர் ரென் தேகப் பயிற்சிக்கு வேண்டிய எல்லா அப்யாஸங்களையும் கற்றுக்கொடுத்தார்.

அவர் விவரிததிருக்கும் தேகப்பயிற்சி ஏற்பாட்டில் நுரையீரல, குடல், ஈரல் ஆகிய இவைகளுக்கு பலம் உண்டாக்கக்கூடிய அப்யாஸங்களும், ரக்த ஓட்டம் அதிகரிக்கச்செயய தேகத்தை தேய்க்கும் அப்யாஸங்களும், பெரிய தசைநார்கள் பலமடைந்து வருவதற்கேற்ற அப்யாஸங்களும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவருடைய ஏற்பாட்டின் முக்யநோக்கம் தேகப் பயிற்சி செய்பவர்களுக்கு தேகலாகம் ஏற்படும்படி செய்வதேயொழிய தசைநார்கள் பருத்துக்காட்ட வேண்டு மென்பதல்லவாம். மேலும் வாரத்தில் இரண்டொரு நாள் வெகு நேரம தேகப்பயிற்சி செய்யாமல் தினந்தோறும் சில நிமிஷங்கள் அப்யஸித்து வந்தால் போதும என்னும்படி இந்தப் புது தேகப் பயிற்சி ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ருதபம், நுரையீரல், உணவை ஜீர்ணம் செய்வதற்கு உதவும் குடல் முதலிய உறுப்புக்கள் பலமடைந்து நோயற்றிருந்தால் தசைநாகளும் பலமுள்ளனவாயும் வ்யாதியற்றும் இருக்கும் என்று மிஸ்டர் ரென் சொல்லுகிறார். அவர் தேகப்பயிற்சியைப்பற்றி உபாத்யாயாகளுக்கு உதவக்கூடிய ஒரு புஸ்தகம் சீக்ரம் வெளியிடப்போகிறாராம்.

A TRAINING SCHOOL IN MADRAS.

சென்னையில் ஒரு ட்ரெய்னிங் ஸ்கூல்.

மார்ச் மாஸம முதல் தேதியிலிருந்து இரண்டு வருஷத்திற்கு சென்னையில் உபாத்யாயர்களுக்காக கவான்மெண்ட் போதனா முறை பாடசாலையொன்று ஸ்தாபிக்கவேண்டுமென்று வித்யா இலாகா டிரெக்டர் செய்த சிபார்சை சென்னை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

GRANTS FOR SCHOOL GARDENS.

பாடசாலைத் தோட்டங்களுக்காக க்ராண்டுகள்.

ஜில்லா போர்டுகளின் ஆதீனத்திலுள்ள எலிமெண்டெரி பாடசாலைகளின் தோட்டங்களை வ்ருத்திசெய்வதற்காக கவர்ன்மெண்டார் 20,000-ரூபாய் க்ராண்டு கொடுப்பதாகத் தீர்மானித் திருக்கிறார்கள். தோட்டவேலைக்கு வேண்டிய கருவிகள, கிணறுவெட்டுதல் அலலது பழுதுபார்த்தல், காமபௌண்டு சுவர்கள் எழுப்புதல், விதைகள், செடிகள், உரங்கள் முதலியவைகள் வாங்குதல், ஆகிய இவைகளுக்கு மேற்படி பணத்தை ஜில்வா போர்டுகள் உபயோகிக்கவேண்டுமாம்.

The Legal World.

வ்யவஹாரப் பகுதி.

ENCROACHMENT IN A COMMON LAND.

பொது நிலத்தில் ஆக்ரமிப்பது.

இரண்டாம வாதி வீட்டுக்கும் ப்ரதிவாதி வீட்டுக்கும் நடுவில் ஒரு சந்து இருக்கிறது. இந்தச் சந்தின் வழியாகத்தான் முதலாவது வாதிதனது வீட்டுக்குப்போகவேண்டும். இந்தச்சந்தையொட்டினாற்போல் 3-அடி அகலமுள்ள ஒரு துண்டு நிலம இருக்கிறது. சந்தும் துண்டு நிலமும் முதலாவது வாதிக்கும் ப்ரதிவாதிக்கும் பொதுவாக இருந்து வருகிறது. ப்ரதிவாதி ஒரு வீடு கட்டினதில் அந்த வீட்டின் ஒரு பாகம இந்த இருவருக்கும் பொதுவாயுள்ள நிலத்தில் ஆக்ரமித்திருக்கிறது. ஆக்ரமிக்கும் இந்த பாகம் இரண்டடி சதுரமுள்ளது. மேலும் ப்ரதிவாதி தனது சுவரில உள்ள ஒரு கதவு நிலைக்கு ஒரு படிக்கட்டும கட்டி யிருக்கிறார். இந்தப்படிக்கட்டு பொது ஸொத்தில் 3-அடி ஆக்ரமித்திருக்கிறது. இப்படிக் கட்டுவதை வாதி ஆக்ஷேபித்தும் ப்ரதிவாதி அதை கவனிக்காமல் கட்டி விட்டார். வாதிகள் போட்ட வ்யாஜ்யங்களில், ப்ரதிவாதி வசமிருந்த பொது நிலம் தங்களுக்கே ஸொந்தமெனறும், ப்ரதிவாதி கட்டி யிருந்த கட்டிடத்தில், பொது நிலத்தில் ஆக்ரமித்திருந்த பாகத்தையும் படிக்கட்டையும் அப்புறப் படுத்திவிட இஞ்ஜங்க்ஷன் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். வழக்குகளை விசாரித்த ஸப்ஜட்ஜ், துண்டு நிலத்தையும் சந்தையும் சேர்த்து பார்ட்டிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தென் வடலில் 5 அடி 10 அங்குலமும, கிழமேலில் 39 அடியுமிருக்கும்படியாக, பிரித்துக்கொடுத்து விடலா மென்றும், அப்படிப் பிரித்தால், ப்ரதிவாதி ஆக்ரமித் திருக்கும் துண்டு நிலமிருக்கும் பாகத்தை ப்ரதிவாதிக்கே கொடுத்து விடலாமென்றும சொன்னார். மேலும், பொது ஸொத்தை பாகம் செய்ய வ்யாஜ்யம் போட்டும் நிவர்த்தி செய்து கொள்ள முடியாத அவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு விட்டதென்று வாதிகள் காட்டவில்லை யென்று சொல்லி வ்யாஜ்யத்தைத் தள்ளி விட்டார். அதன் மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. ஜட்ஜுகள் பின் வருமாறு அபிப்ராயப்பட்டார்கள். அந்தச்சந்து வழியாகத்தான் முதலாவது வாதி தமது வீட்டுக்குப் போகவேண்டும். அந்தச் சந்தை பாகம்செய்து அதன் அகலத்தைப்பாதிக்குக் குறைத்து விட்டால் முதல் வாதி தமது வீட்டுக்குப்போவது ரொமப ஸௌகர்யக் குறைவாக இருக்கும். மேலும் 1-வது வாதி பொது நிலத்தின் வழியாக தமது வீட்டுக்குப்போய் வந்த பாத்யதையை அவர் இழக்கவேண்டியதாகிறது.

உண்மையில, ஒவ்வொரு பார்ட்டிக்கும் இந்த ஸொத்தைப் பொதுவில் அநுபவிக்க பாத்யதை யிருப்பதோடு, அந்த நிலம் முழுவதையுமே அநுபவித்து அதனவழியாக தமது வீடுகளுக்குப் போவதற்கும் பாத்யதை யிருக்கிறது. பொது நிலத்தை பாகம் செய்ய வ்யாஜ்யம் போடட்டும் என்று சொல்வதானது அவர்களுக்குள்ள இந்த பாத்யதையைப் போக்கி விடுவதாகிறது.

ப்ரதிவாதி ஆக்ரமித்திருக்கும் சிறிய நிலத்துண்டானது 1-வது வாதியினுடைய வீட்டுத் தாழ்வாரத்தின் ஒரு பாகமாகும். ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பாகம இரண்டடி சதுரமே யிருப்பதால் அதனால எற்படும அஸௌகர்யம ரொம்ப அதிகமல்ல. அதற்குபதிலாக அதே

அளவுள்ள வேறு ஒரு துண்டு நிலத்தை வாதிக்குக்கொடுத்து விடலாம். ஆனால் பொது நிலத்தை பாகம் செய்தால வாதிகளுக்குப் போக்கு வரவுக்கு ரொம்பக் கெடுதலாகும். ஆகையால் வாதிகளுக்கு இஞ்ஜங்க்ஷனுவது நஷ்டத்துக்கு ஈடாவது கொடுத்து ந்யாயம் பெறும்படி செய்யவேண்டும். எப்படிச்செய்வது ரொம்ப ஸௌகர்யமான தென்பதைக் கவனிக்கும் போது, முதலாவது வாதிக்கு 20 ரூபாய் நஷ்டத்துக்காகக் கொடுத்தால் போதும் என்று தோன்றுகிறது. ப்ரதிவாதி ஆக்ரமித்திருக்கும் 2 அடி சதுரமுள்ள துண்டு நிலம் ப்ரதிவாதிக்கும் 1-வது வாதிக்கும பொதுவான நிலமாக இருக்கும்.

1914 லா வீக்லி 166.

MAINTENANCE.
ஜீவனும்சம்.

ஒரு ஹிந்து மனைவியை அவளுடைய புருஷன் கொடுமையாக நடத்தி அவளை வீட்டை விட்டுத் துரத்திவிட்டான். புருஷன் இரண்டாவது மனைவியாக ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தான். முதல் மனைவி க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடு 488-வது ஸெக்ஷன்படி, தனக்கு ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட்டினிடம் மனுப்போட்டாள். புருஷன், முதல் மனைவி கெட்ட நடத்தையுள்ளவளென்று குற்றஞ்சாட்டினன். அவளுடைய நடத்தையைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு பஞ்சாயத்து கூட்டப்பட்டது. அவள் பஞ்சாயத்தார் விசாரிகக ஆஜராக வேண்டுமென்று அவளுக்குத் தெரிவித்தும் ஆஜராகவில்லை. அதனுல் அவளைப் பஞ்சாயத்தார்கள் ஜாதியிலிருந்து விலக்கி விட்டார்கள்.

மாஜிஸ்ட்ரேட்டோ முதல் மனைவி கற்பழிந்தவள் என ருசுவாகவில்லை யென்றுசொல்லி, அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்கும்படி தீர்ப்புச்செய்துவிட்டார். அதன்மேல் புருஷன் மாஜிஸ்ட்ரேட்டினுடைய ஆர்டரை மாற்றும்படி சென்னை ஹைகோர்ட்டுக்கு மனுப்போட்டார்.

ஜாதியிலிருந்து விலக்கப்பட்ட ஒரு மனைவி தனது நடத்தையினுல் அவளுடைய புருஷன் அவளுடன் சேர்ந்து வஸிக்க முடியாமல் செய்து கொண்டால் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்கவேண்டியதில்லை யென்றும், இந்தக் கேஸில் மனைவி ஜாதியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் புருஷன் பக்கம் வாதிக்கப்பட்டது. கெட்ட நடத்தைக்காக மனைவியை ஜாதியிலிருந்து விலக்கவில்லை யென்றும், புருஷன் பக்கம வாதிக்கப் படுவதை ஏற்றுக்கொண்டால் மனைவி சட்டத்தின் உதவியை நாடினதற்காக அவளைத் தண்டித்ததாகும் என்றும் மனைவி பக்கம் வாதிக்கப்பட்டது.

ஜட்ஜுகள் பின் வருமாறு தீர்ப்புச் செய்தார்கள்.

"மனைவியின் நடத்தையைப்பற்றி விசாரிப்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு பஞ்சாயத்தின் முன்னிலையில் அவள் வந்து ஆஜராகாததனுல், அவளை ஜாதியிலிருந்து விலக்கி யிருக்கிறார்கள் என்றும், ஆகையால் அதுவே அவளுக்குத் தனியாக ஜீவனும்சம் கொடுக்கக்கூடாதென்பதற்கு ஒரு தகுந்த காரணமாகும் என்றும வாதிக்கப்படுகிறது. இந்த விஷயம் மாஜிஸ்ட்ரேட்டின் முன்னுல் வாதிக்கப்படவில்லை. இந்த கேஸில் நடந்திருக்கிறபடி மனைவியை ஜாதியிலிருந்து விலக்கினது ஜீவனும்சம் கொடுக்காமலிருப்பதற்கு ஒரு ஆதாரமாகாது.

1914 லா வீக்லி-156.

UNREGISTERED LETTER AS EVIDENCE.
ரெஜிஸ்டர் செய்யப்படாத வர்த்தமானம் ஸாக்ஷ்யமாவது.

வாதி ஒரு வீட்டை ப்ரதிவாதிக்கு சுத்தக்ரயசாஸனம் செய்ததாக ஒரு பதரம் எழுதிக்

கொடுத்தார். அப்படி எழுதின அந்த தினத்தில் அந்த வீடு ப்ரதிவாதிக்கு போக்யம் வைக்கப்பட்டிருந்ததாக இருவரும் ஒரு வாத்தமானம் செய்து கொண்டார்கள். வீடு ப்ரதிவாதி வசம் வந்துவிட்டது. வாதி அந்த வீட்டை விற்க எண்ணவில்லை யென்றும், போக்யம் வைப்பதாகத்தான் எண்ணியிருந்தாரென்றும், ஸொத்துக்குள்ள பாத்யதை ஒருபோதும் ப்ரதிவாதிக்கு போகவில்லை யென்றும், ப்ரதிவாதி வீட்டைத் தமது வசத்தில வைத்திருப்பதற்கு அவருக்கு அதிகாரமில்லை யென்றும் சொல்லி, வாதி வ்யாஜ்யம போட்டார். வாதி ப்ரதிவாதியினிடமிருந்து வீட்டுக்காக வாங்கியிருக்கக்கூடிய தொகையை ப்ரதிவாதியினிடம் கொடுத்துவிட்டு வீட்டை ப்ரதிவாதி வசமிருந்து பெறவேண்டுமென்று ஸப் ஜட்ஜ். தீர்ப்புச்செய்தார். இந்தத் தீர்ப்புக்கு மேல் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில், ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம, போக்யத்திற்கு ஆதாரமாக ரெஜிஸ்டராகாத ஒரு வர்த்தமானத்தை உபயோகிக்கவாவது, வர்த்தமானத்தில் கண்டிருக்கும நிபந்தனைகளின்படி நடக்கவேண்டுமென்று கட்டாயப் படுத்தவாவது முடியாதென்றும், ஆனால் ப்ரதிவாதி வீட்டை எப்படித் தன்வசம் அடைந்தார் என்பதைக் காட்ட மாத்ரம் அந்த வர்த்தமானத்தை ஆதாரமாகக் கொள்ளலாமென்றும அபிப்ராயப்பட்டார். ஜஸ்டிஸ் மில்லர், ப்ரதிவாதி வீட்டை எப்படி யடைந்தார் என்பதைக் காட்டுவதற்குக்கூட அந்த வாத்தமானம ஆதாரமாகாது என்று அபிப்ராயப்பட்டார். ஜட்ஜ் அப்துல் ரஹீமின் தீர்ப்பின் மேல் மறுபடியும லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல் செய்யப்பட்டது. ஜட்ஜுகள் பின் வருமாறு தீர்ப்புச்செய்தார்கள்.

வாதி போக்ய வர்த்தமானத்தை ஆதாரமாக்கொண்டு வீடு தனக்குச் சேரவேண்டுமென்று சொன்னால், வீடு போக்யம் வைக்கப்பட்டதென்று காட்டுவதற்கு ரெஜிஸ்டர் செய்யாத கடிதம் ஒரு ஆதாரமாகாதென்று சொல்லவேண்டும். சாஸன பத்ரத்தின்படி வீட்டின் பாத்யதை ப்ரதிவாதிக்கு மாறவில்லை யென்று சொல்லி, வீடு வாதிவசம சேரவேண்டுமென்றால், ரெஜிஸ்டராகாத வாத்தமானம் எழுதப்படாம லிருந்தால் க்ரயபத்ரம நிலத்தின்மேலுள்ள பாத்யதையை எப்படி பாதிக்குமோ, அப்படிக்கு ரெஜிஸ்டராகாத வர்த்தமானம் ஒன்று இருப்பதால க்ரயபத்ரம் பாதிக்கவில்லையென்று வாதி காட்டவேண்டும். ஸ்தாவர ஸொத்து ஸம்பந்தமான ஒரு நடவடிக்கையில் ரெஜிஸ்டராகாத ஒரு கடிதம் ஆதாரமாகக் காட்டப்படுகிறது. அந்தக்கடிதம் ரெஜிஸ்டராகாததால் அதை ஆதாரமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதாவது வீடு ப்ரதிவாதிக்கு ஸொந்தமாகும்.

1914-லா வீக்லி. 156.

ACQUISITION OF PROPERTY IN A OINT FAMILY.

அவிபக்த குடும்பத்தில் ஸொத்து வாங்குதல்.

அவிபக்த ஹிந்து குடும்பத்திலுள்ள ஒரு இளைய பாகஸ்தர் பேரால் ஒரு ஸொத்து வாங்கப்பட்டிருந்தது. அந்த ஸொத்தை அந்த பாகஸ்தர் தமது ஸொந்தத்திலேயே விலைக்கு வாங்கினாரா, அதாவது அது அவருடைய ஸொந்த ஸம்பாதித்யமா என்று கேள்வி யுண்டானால், ஸொத்தை வாங்குவதற்குக் கொடுத்த பணம் எங்கிருந்து வந்தது என்று பார்க்கவேண்டும. அந்த இளைய பாகஸ்தருக்கு தனியாக நிதி யிருக்கிறதென்றாவது, அல்லது அவர் தமது ஸொந்தப்பணத்தைக்கொண்டு அந்த ஸொத்தை வாங்கினாரென்றாவது சொல்வதற்கு ஸாக்ஷ்யமில்லாமலிருந்தால், அந்த ஸொத்தானது அந்த இளையபாகஸ்தரின் பெயரில்

அந்தக் குடும்பத்தின் தலைவரால் வாங்கப்பட்ட தென்று கண்டிப்பாய்ச் சொல்லி விடவேண்டும்; அந்த ஸொத்து இளைய பாகஸ்தரின் ஸொந்த ஸமபாத்யமாகாது.

19 கல்கத்தா லா ஜர்னல் 129.

VAKALATNAMA.

வக்காலத்து நாமா.

ஒரு ப்ளீடரின் பெயர் பார்ட்டி எழுதிக்கொடுத்த வக்காலத்து நாமாவில் எழுதப்படாமலிருந்தால், அப்படி எழுதாமல் விட்டது கைப்பிசகாயிருந்தாலுங்கூட, அந்த ப்ளீடர் க்ரமப்படி நியமிக்கப்பட்ட ப்ளீடராகமாட்டார். அவரால் கொடுக்கப்பட்ட ஒரு அப்பீலானது தருந்தபடி கொடுக்கப்பட்டதாகாது. கேஸில் நடவடிக்கைகள் பல நடந்துவந்து, அது வரையில் யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லாமலிருந்ததனாலேயே ஸரியானபடி வக்காலத்து நாமா எழுதி நியமிக்கப்படாத வக்கீல் பார்ட்டிக்காக ஆஜராகலாமென்பதில்லை. கேஸின் எந்த பாகத்திலும் அப்படிப்பட்ட வக்கீல் ஆஜராவதை ஆக்ஷேபிக்கலாம்.

11 அல்லகபாத் லா ஜானல் 458.

EX-PARTE DECREE.

எக்ஸ்பார்டி டிக்ரீ.

எக்ஸ்பார்ட்டி டிக்ரீயான ஒரு வ்யாஜ்யத்தில் வாதிக்கு நோட்டீஸ் கொடுத்தபிறகு தான் எக்ஸ்பார்ட்டி டிக்ரீயை மாற்றலாம். அப்படி வாதிக்கு நோட்டீஸ் கொடுக்காமலிருந்து, வாதி நேரில் ஆஜராக இருக்கும்போது, அந்த டிக்ரீயை மாற்றினதாக ஒரு ஆர்டர் போட்டால், அப்படிச்செய்தது சட்டத்துக்கு விரோதமானது. அப்படிப்போட்ட ஆர்டரை ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 115-வது ஸெக்ஷன்படி ரத்து செய்து விடலாம்.

எக்ஸ்பார்ட்டி டிக்ரீயை ரத்து செய்யும் ஒரு ஆர்டரில் அப்படி ரத்து செய்வதற்குக் காரணங்களையுங் குறிப்பிட வேண்டும்.

34 ம. லா ஜர்னல் 1913.

PROPERTY OF A LUNATIC.

பைத்யம் பிடித்தவருடைய ஸொத்து.

ஒரு பைத்யம் பிடித்தவர் அவரால் ஸ்வீகாரம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் ஒருவருடன் வஸித்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பைத்யம் பிடித்தவருடைய ஸொத்துக்கு ஒரு கார்டியனை நியமிக்க வேண்டுமென்று 1858-ம் வருஷத்து பைத்யம் பிடித்தவர்களுக்கான சட்டத்தின்படி ஒரு மனுப் போட்டால், அது செல்லாது.

APPLICATION BY A PAUPER.

ஒரு பாபர் செய்துகொள்ளும் மனு.

ஒரு பாபர் மனுதாரன் பாபராகப் போடும் ஒரு வ்யாஜ்யத்தில், தான் போடும் மனுவின் ஷெடூலில் தனனுடைய ஸொத்தின் ஒரு சிறிய பாகத்தைச் சேர்க்காமலிருந்தாலும், அப்படி ஷெடூலில் சேர்க்காமலிருந்தது மனுதாரன் பாபராக இருக்கிறானென்னும் விஷயத்தை பாதிக்காவிட்டாலுங்கூட, அந்தமனு செல்லாததாகும்.

PURCHASE MONEY.

க்ரயப் பணம்.

ஒரு ஜமீன்தாரி ஸொத்தானது சில மைனர்களுக்கு விற்கப்பட்டது. பிற்பாடு மூன்றாம் பார்ட்டிகள் ஸொத்தை வாங்கினவர்களுக்கு ஸொத்தின்மேல் பாத்யதையில்லை யென்று வ்யாஜ்யம் போட்டதில் வாங்கினவர்கள் ஸொத்தைவிட வேண்டியதாய்விட்டது. அப்படியானால் ஸொத்தை வாங்கினவர்களுக்கு விற்றவர்களிடமிருந்து ஸொத்துக்கு க்ரயமாகக் கொடுத்த தொகையைப்பெற பாத்யமுண்டு.

இ. லா. ரி. 33 அல்லகபாத் 370.

ADOPTION.

ஸ்வீகாரம்.

ஹிந்துலாவின்படி அத்தையின் மகனை ஸ்வீகாரம் செய்வது செல்லும்.

15. ப. லா. ரி. 824.

The Sanitary World.

ஸுகாதாரப் பகுதி.

HOW THE PLAGUE GERMS ENTER THE BODY.

ப்ளேக் க்ருமிகள் தேகத்தில் ப்ரவேசிக்கும் விதம்.

மிஸ்டர் எஸ். சந்த்ரசேகரர் "நமது சிறிய சத்ருக்கள்" என்னும் புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்.

நாம் குடிக்கும் ஜலத்தில் ப்ளேக் க்ருமிகள் இருக்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். இந்த க்ருமிகள் பெருகுவதற்கு அனுஸரணையான சரீரமுள்ள ஒருவன் அந்த ஜலத்தைக் குடித்தால் இவைகளில் அநேகம் அவன் குடலுக்குள் சென்று அங்கு வ்ருத்தியாகி ப்ளேக் வ்யாதியை உண்டு பண்ணுகின்றன. இவ்விதமாக ஓரிடத்தில் நோய் ஆரம்பித்தபின், நோயாளியின் மலம், மூத்ரம், வாந்தி முதலியவற்றின் மூலமாய் இந்த க்ருமிகள் வெளிப்படுகின்றன. நோயாளியின் ஸமீபத்திலுள்ள வஸ்த்ரங்கள், படுக்கை, பாத்ரங்கள் ஆகிய இவைகளில் அவனுடைய மலமூத்ர அழுக்குகள் தெறித்து அவை அசுத்தமாகின்றன. அவற்றைத் தண்ணீரில் சுத்தி செய்யும்போது அவைகளிலுள்ள க்ருமிகள் தண்ணீரில் சேருகின்றன. நோயாளியின் வீட்டில் பழகும் பந்துக்கள், வேலைக்காரர்கள் முதலானவர்கள் அவனுடைய படுக்கையையும் பாத்ரங்களையும் தொட்டிருக்கக்கூடும். அவர்கள் குளம், ஏரி, நதி, முதலியவற்றிற்குப் போகும்போது, அந்த ஜலங்களில் அவர்கள் மூலமாய் க்ருமிகள் வந்து சேரக்கூடும். அவ்விதம் அசுத்தமான ஜலத்தை அல்லது போஜனத்தை உட்கொள்ளுகிறவர்களுக்கு வ்யாதி தொத்திக்கொள்ளும். இவ்வித நோயாளியின் மலம், மூத்ரம், வாந்தி முதலியவை தரையில் சிந்தி பூமிக்குள் செல்லக்கூடும். அந்த பூமியில் மழை பெய்தாலும், வேறு விதமாய் ஜலம் சொரிந்தாலும் அந்தப் பூமியின் கீழுள்ள ஊற்றுநீர் கெட்டு அதன் பக்கத்திலுள்ள கிணறுகளையும் குட்டைகளையும் கெடுக்கக்கூடும். அந்த ஜலத்தைக் குடிப்பவர்களுக்கு அந்தந்த நோயுண்டாகுமென்பது நிச்சயம்.

ப்ளேக் வியாதியுள்ள ஒருவன் தானிருக்கும் அறையில் வாந்தி எடுக்கிறான்; அல்லது எச்சிலை உமிழ்கிறான். அது காய்ந்து விடுகிறது. காற்று அதை அறைமுழுவதும் வ்யாபிக்கச் செய்கிறது. விஷக்ருமிகள் வ்யாபிக்கக்கூடிய சரீரத்தையுடைய ஒருவன் அந்த விஷக்காற்றை ச்வாஸிக்கிறான். அது அவனுடைய நுரையீரலில் (Lungs) ப்ளேக் க்ருமிகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அவை அங்கே பலுகிப் பெருகி ப்ளேக் நோயை உண்டுபண்ணுகின்றன.

நமது சிறிய சத்ருக்களில் ஒன்றாகிய ஓர்வித ஈ எலியின் ரத்தத்தைக் குடித்து ஜீவிக்கிறது. ஒரு எலிக்கு ப்ளேக் நோய் கண்டிருந்தால் அதன் ரத்தத்தைக் குடிக்கும் ஈயானது அதிலுள்ள ப்ளேக் விஷக்ருமியையும் உட்கொள்கிறது. சிறிது நேரத்துக்குப்பின், அந்த ஈயானது அகஸ்மாத்தாய் ப்ளேக் நோய் அணுகக்கூடிய ஒருவனுடைய சரீரத்தில் ரத்தங்குடிக்க உட்கார்ந்தால், அவனுக்கும் ப்ளேக் நோயுண்டாகி அவன் மடிந்து போகிறான். கொசுக்கடியைப் போலவே ப்ளேக் க்ருமியையுடைய ஓர் மூட்டைப் பூச்சி மனிதனைக் கடித்தால், உடனே சொறிகிறான். அப்போது தேகத்தில் காயமுண்டாகிறது. இந்தக் காயத்தின் வழியாக ப்ளேக் பூச்சிகள் தேகத்தில் ப்ரவேசிக்கின்றன. ப்ளேக்

வ்யாதியினால் செத்துப்போன எலியின்பேரில் அநேக க்ருமிகளிருக்கின்றன. இந்த எலியைக் கையினால் தொட்டாலும், அல்லது அதன் காற்றுவாடை பட்டாலும் இந்தப் பூச்சிகள் மனித தேகத்தில் புகுந்து விடுகின்றன. சுருங்கச்சொல்லில், இக்கொடிய வ்யாதியால் மனிதர்கள் மட்டும் மடிகிறார்களென்று சொல்வதற்கில்லை. மற்றும் எலி, சுண்டெலி, பெருக்கான், குரங்கு, பூனை, நாய் முதலிய பிராணிகளும் சாகின்றன. எலிக்குமட்டும் இந்தவ்யாதி வெகு சீக்ரத்தில் தொத்துகிறதென்று பரீக்ஷையினால் வெளியாயிற்று.

4. இன்னும், காய்கனிகள், புல்பூண்டு, செடி கொடிகள் முதலியவைகளிலும் ஓர் வகை விஷக்ருமிகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவ்வகைக் கீரைகளையும், காய்கனிகளையும், கிழங்குகளையும் உட்கொள்ளும் மனிதர்களுக்கு அநந்த நோய்களுண்டாகு மென்பதற்கையமில்லை. உதாரணமாக வட இந்தியாவிலுள்ள வெற்றிலையின் மேல் ஒருவிதப் புழுக்கள் காணப்படுகின்றனவாம். அப்புழுவைத் தெரியாமல் வெற்றிலையோடு சேர்த்துச் சாப்பிட்டு விடுவார்களானால் ப்ளேக் நோய் அவர்களிடம் பரவிவிடுவதாய்ச் சொல்லப்படுகிறது.

5. பட்டு வஸ்த்ரம், கம்பளித்துணி, நூல் வஸ்த்ரம், சாக்குத்துணி இவைகளில் இக்ருமிகள் ஒருவாரம் வரையில் சாகாமலிருக்கின்றன. சீதோஷ்ணங்கள் ஸம அளவுடையனவாய் இருந்தால்; மனுஷர் உடுத்திக்கொள்ளும் துணிகளில் ஒரு மாஸம் இரண்டு மாஸங்கூட அவை சாகாமலிருக்கின்றன. தான்யங்களில் அவை இரண்டு வாரங்கள் வரையில் சாகிறதில்லை. உப்புத்தண்ணீரில் அவை வளர்ந்து வ்ருத்தியடைகின்றன. காற்றோட்டமில்லாததும் இருண்டதும் ஈரமுள்ளதுமான வீடுகளில் அவை வ்ருத்தியடைகின்றன. ஆகையால் நெருக்கமான வீட்டிலுள்ள ஒருவனுக்கு ப்ளேக் நோய் கண்டவுடன், அவ்வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் அந்நோய் காணுவதும், ஜனநெருக்கமுள்ள ஊர்களில் ப்ளேக் வ்யாதி சீக்ரமாய்ப் பரவுகிறதும், ஒரு ஊரில் ப்ளேக் வ்யாதி உண்டாகி நின்றுவிட்டால் மறுபடியும் அதே ஊரில் ப்ளேக் வ்யாதி அடிக்கடி உண்டாவதும் மேற்கூறிய காரணங்களால்தான் நேருகின்றன. சுருங்கச் சொல்லில் நாம் ச்வாஸிக்கும் ஆகாயம், நாம் பருகும் பானங்கள், உண்ணும் உணவுகள், உடுக்கும் வஸ்த்ரங்கள், கொசு, மூட்டைப்பூச்சி முதலியவைகள் மூலமாகவே இக்கொடிய கொள்ளைநோய்க்ருமிகள் உள்சென்று வ்யாதி உண்டாகிறதென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

FLIES AND HEALTH.

ஈக்களும் தேகஸௌக்யமும்.

வ்யாதிகள் பரவுவதற்கு ஈக்கள் ரொம்ப ஸாதகமாயிருந்து வருகின்றன. இந்த விஷயத்தை ஜனங்கள் நன்றாய் அறிந்து கொண்டால் அவர்கள் தங்கள் வீடுகளில் ஈக்களின் தொந்தரவு இல்லாமல் பார்த்துக் கொள்ளக்கூடும். க்வான்மெண்டார் தாங்கள் ஸமீபத்தில் ப்ரசுரம் செய்திருக்கும் ஆர்டர் ஒன்றில் எல்லா டிபார்ட்மெண்டு உத்யோகஸ்தர்களும், வீடுகளிலும் வீட்டைச் சுற்றிலும் குப்பை செத்தைகள் இருந்தால், அவைகளில் ஈக்கள் வந்து தங்கி வ்ருத்தியாகக் கூடுமென்றும், ஆகையால் குப்பை செத்தைகளை அப்புறப்படுத்தி ஈக்கள் வ்ருத்தியாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் ஜனங்களுக்குக் கற்பிக்க முயலவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஈக்களின் கால்களில் நுட்பமான மயிர்கள் இருக்கின்றன. ஈக்கள் அசுத்தங்களின்மேல் உட்கார்ந்தால் அவைகளில் இருக்கக்கூடிய க்ருமிகள் கால்களில் உள்ள மயிர்களில் ஒட்டிக்கொள்ளுகின்றன. ஈக்கள் மறுபடியும் ஆகாராதிகளில் தங்கினால் ஆகாராதிகளிலும் க்ருமிகள் சேர்ந்து போகின்

றன. மேலும் தொத்து வ்யாதி ஸம்பந்தமான மலங்களின் மேல் உட்காரும் ஈக்கள் மறுபடியும் ஆகாராதிகளில் உட்கார்ந்தால் என்ன கெடுதிகள் நேரிடக்கூடும் என்பது யாவருக்கும் தெரிந்தது. ஈக்களால் பல வ்யாதிகள் ஓரிடத்திலிருந்து மற்ற விடங்களுக்குப் பரவுகின்றனவென்று தெரியவருகிறது. ஈக்கள் வ்ருத்தியாவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவையாவன:—

(1) வீடுகளுக்குப் பக்கத்தில் எருக்களைக் குவித்துப் போட்டு வைப்பது.

(2) வீடுகளிலாவது, வீடுகளுக்குப் பக்கத்திலாவது ம்ருகங்களைக் கட்டிவைப்பது.

(3) பொதுக்கக்கூஸுகளும் வீடுகளிலுள்ள கக்கூஸுகளும் சரியானபடி கட்டப்படாமலிருப்பது; அவைகளைத் தகுந்தபடி காலாகாலத்தில் சுத்தம செய்யாமலிருப்பது.

(4) சாக்கடை ஜலம் தேங்கிநிற்பது; சாக்கடைகளை சரியாய்க் கட்டாதது; சாக்கடைகளை அடிக்கடி சுத்தம் செய்யாமலிருப்பது.

(5) தெருவில் குப்பைகளை அடிக்கடி அப்புறப்படுத்தாமல் அப்படியே விட்டு விடுவது; வீட்டின் கொல்லைப்புறத்தில் வீட்டுக்குப்பைகளைக் கொட்டிவைப்பது.

(6) வீடுகளிலும் கடைகளிலும் ஆகாராதிகள், பால் முதலியவைகளில் ஈக்கள் வந்து தங்கும்படி அவைகளைத்திறந்து வைத்திருப்பது; இந்த விஷயங்களில் ஜனங்கள் ரொம்பவும் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

புதிதான சாணம், மலம், அழுகின பதார்த்தங்கள் ஆகிய இவைகளில் ஈக்கள் முட்டையிடுகின்றன. இவைகளை ஏழுநாட்களுக்குள் புதைத்தோ, எரித்தோ விட்டால் அம்முட்டைகளிலிருந்து ஈக்கள் வெளிப்படுவதில்லை. இப்படிச்செய்வது ஸாத்யப்படாவிட்டால் குறைந்தது 7-நாட்களுக்கு ஒரு தடவையாவது குப்பை செத்தைகளை வீடுகளுக்கு ஒரு மைலுக்கு அப்பால் கொண்டு போய் விடுவது நல்லது.

SNAKE BITE CURE.

பாம்புக் கடிக்குச் சிகித்ஸை.

பாம்புக் கடிக்கு இரண்டுவித பரிகாரம் உண்டு.

1. பாம்பு கடித்தவுடன் தாமஸிக்காமல் கோழியைக்கொண்டுவந்து கடித்த வாயில் அக்கோழியின் கழுத்திலுடைய மாம்ஸ பாகத்தை அழுத்திப் பிடித்தால் கோழி இறந்து போகும். இவ்விதமாக ஐந்து அல்லது ஆறு கோழிகளை இறக்கச் செய்தால் விஷம் முழுவதும் இறங்கிப் போய்விடும்.

2. கடித்தவுடனே கடிவாய்க்குமேல் அழுத்திக்கட்டிவிட வேண்டும். விஷத்தினால் ப்ரஜ்ஞை கெட்டவனுக்கு அரை பாட்டில் எலுமிச்சம் பழச்சாறு கொடுக்கவேண்டும். கடித்த வாயை கத்தியால் கீறி ரத்தத்தை வெளிப்படுத்தி அட்டைகளை விடவேண்டும். விஷம் தலைமட்டும் கொண்டுபோய்விட்டால் தலை முதற்கொண்டு கால் வரையில் கடிவாய் நீங்கலாக மேற்சொன்ன சாற்றை விட்டு நன்றாய்த் தேய்க்கவேண்டும். தலையில் மட்டும் அந்தச் சாறு உலராமல் ஈரப்பசையிருக்கப் பார்த்து வரவேண்டும். விஷ நீரை அட்டைகள் வாங்காவிட்டாலும் சாறு விஷவேகத்தைக் குறைத்து விடும். கடிபட்டவனுக்கு தாங்கக்கூடாத எரிச்சலுண்டாகும். குடலைச் சுத்திசெய்ய 24 மணி நேரத்துக்குப்பிறகு சூரத்தாவாரையோடு உப்புக் கலந்து கொடுக்கவேண்டும். பிறகு வட்டத் துத்தியிலையும் அரிசிமாவும் கலந்து தேங்காய்ப்பால் விட்டுக் களியாக்கி கடி வாய்க்கு கட்டவேண்டும். 6-மணிநேரம் கழித்து மறுபடியொருதரம் இதேமாதிரி கட்டவேண்டும். மறுநாள் இரண்டு வேளை எலுமிச்சையிலை போட்டுக் காய்ச்சின வெந்நீரால் அவனுக்கு ஸ்நானம் செய்து வைக்கவேண்டும். மூன்றும் நாள் ஸுகம் அடைவானென்பதில் ஸந்தேகமில்லை. சீக்ரமாக ஜீரணத்துக்கு

வரக்கூடிய ஆகாரம் கொடுக்கவேண்டும், என்று ஒரு஥ஸிலோன் பத்ரிகை எழுதுகிறது.

ITINERATING DISPENSARIES.

சுற்றித்திரியும் மருந்துச் சாலைகள்.

சென்ற வருஷம் தைமாஸத்து ஸஞ்சிகையில் (46-ம் பக்கம்), ஊருராய்ப் போய் வ்யாதிஸ்தர்களுக்கு வைத்யம் செய்து மருந்து கொடுக்கும் ஆஸபத்ரிகளைப்பற்றி ஒரு குறிப்பு எழுதியிருந்தோம். இந்த மருந்துச்சாலைகளை முன் இந்த ராஜதானியில் வைத்துப்பார்த்ததில், அவைகள் த்ருப்தியாய நடந்து வரவில்லையென்று தெரியவந்ததாகவும் குறித்திருந்தோம். இப்போது சென்னை கவர்ன்மெண்டார் கோதாவரி, காநூல், விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் சுற்றித்திரியும் மருந்துச்சாலைகள் ஸ்தாபிப்பதற்கு ஸம்மதித்து அந்த ஜில்லா போர்டுகள் ஒவ்வொன்றுக்கும் மருந்துச்சாலைகளுக்குப் பிடிக்கும் ஆரம்பச் செலவுக்காக 1000-ரூபாய் க்ராண்ட் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இந்த மருந்துச்சாலைகளை சீக்கிரம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டுகள் இவைகள் நன்றாய் நடந்து வருவதற்கு வேண்டிய ப்ரயத்தனங்கள் செய்ய வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் இந்த மருந்துச்சாலைகள் எவ்வெப்போது க்ராமங்களுக்குப்போகும் என்பதை முன்னுடியே ரெவின்யூ அதிகாரிகள் க்ராமங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், க்ராம அதிகாரிகள் இந்த மருந்துச்சாலைகளைச் சேர்ந்த ஸப் அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

ASTHMA AND PARROT.

ச்வாஸகாசமும் கிளியும்.

ஒரு காலத்தில் கிளி வளர்த்து வந்த ஒருவருக்கு ச்வாஸகாச உபத்ரவம் ஏற்பட்டிருந்தது. அவர் அந்த வ்யாதிக்கு என்ன சிகித்ஸை செய்யலாமென்று ஒரு வைத்யரைக் கேட்டார். அப்பொழுது வைத்யர், கிளியை விட்டு விட்டால் வ்யாதி நீங்கிவிடும் என்றார். உடனே அவ்யாதிஸ்தர் வைத்யர் உபதேசப்படிக்கு கிளியை விட்டு விட்டார். வியாதியும் உடனே நீங்கிவிட்டது. ஏதோ கிளியினிடத்திலுள்ள அற்பமான சில இறகுகள்தான் இவ்வித வ்யாதியினுடைய உத்பத்திக்குக் காரணமாய் இருந்திருக்கவேண்டுமென்று தெளிவாய்த் தெரிகிறது.

TO CURE HICCOUGH.

விக்கலைப் போக்க.

ஒரு கண்ணாடி டம்ளரில் தெளிவான குளிர்ந்த ஜலத்தை ஊற்றி ஒரு மேஜையின் மேல் வைக்கவும். பிறகு விக்கல் வந்திருப்பவரை அதன் பக்கத்தில் நிற்கச்சொல்லி பாத்ரத்தினுடைய அடிப்புறத்தின் மத்தியைப் பார்த்துக்கொண்டு வேறு ஒன்றிலும் கவனம் செலுத்தாமலிருக்கச சொல்லவும். இப்படிச்செய்தால் விக்கல் போய்விடுமாம். வேறு பல சிகித்ஸைகள் செய்தும் போகாத கொடிய விக்கல்களும் இந்த முறையால் போயிருக்கின்றனவாம்.

FREE MEDICAL AID TO ANIMALS.

ம்ருகங்களுக்கு தர்ம வைத்யம்.

சென்னை ஜீவஹிம்ஸை நிவாரண ஸங்கத்தாரால் சென்னை ஹாரிஸ் பாலத்து இறக்கத்து மூலையில் கோமளீச்வீரன் பேட்டை ஹாரிஸ் ரோடில் ஜானகிவிலாஸ் என்னுமிடத்தில் ம்ருகங்களுக்கு தர்மவைத்யசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஏழைகளினுடைய ப்ராணிகளுக்கும், எல்லா ஜனங்களுடைய கால் நடைகளுக்கும் இனாமாக வைத்யம் செய்யப்படும்.

The Boys' World.

பையன்கள் பகுதி.

HOW INSECTS FIGHT.

பூச்சிகள் சண்டை செய்யும் விதம்.

அநேக ம்ருகங்கள் ஸமயம் நேரும்போது சண்டை செய்வது போலவே, பூச்சிகளும் ஸமயம் நேர்ந்தால் சண்டை போடுவதுண்டு. அநேக பூச்சிகள் சண்டை செய்வதில் ரொம்ப ஸாமர்த்யமுள்ளவைகளாயிருப்பதோடு அவைகளுக்கு சண்டைக்கு வேண்டிய ரொம்ப ப்ரயோஜனமுள்ள கருவிகளும் அவைகளின் தேகத்தில் அமைந்திருக்கின்றன. அவைகளுக்கு பறபல தந்த்ரோபாயங்களும் நன்றாய்த் தெரியும். பூச்சிகளுக்குள் ஏற்படும் சண்டைகள் பொதுவாய் மூன்று வகைப்படும். முதலாவது, விரோதிகளினிடத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்காக சண்டை செய்தல். இன்னொன்று, ஆண்பூச்சி பெண் பூச்சியையடைய முயலுவதில் ஏற்படும் சண்டை. மூன்றாவது, வேண்டுமென்றே மற்ற ஜீவராசிகளுடன் சண்டை செய்வது.

சில பூச்சிகள் ஸதா சண்டை செய்வதிலேயே விருப்பம் கொண்டிருக்கின்றன. இவைகளில் மான்டிட் என்னும் ஒருவகைப் பூச்சி ரொம்ப கொடுமையுள்ளது. இவைகளின் முன்னங்கால்கள் வேறு பூச்சிகளைப் பிடித்துக் கொள்வதற்கென்றே ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் கொக்கிகள் போல வளைந்தும் முட்கள் உள்ளவைகளாயும் இருக்கின்றன. இவைகள் சண்டை போடுவதற்கும் ஏற்றவை. இரண்டு மான்டிட்டுகள் ஒன்றோடொன்று ஸமீபமாய் வந்து பார்த்து விட்டால், உடனே சண்டை போட ஆரம்பித்துவிடும். சண்டைபோடுவதென்றால் ஸாமான்யமாய் எது ஜயிக்கிறது, எது தோல்வியடைகிறது என்று மாத்ரம் ஏற்படாது. வேறு சில பூச்சிகள் சண்டைபோட்டால், தோல்வியடைந்தது உயிருடனாவது தப்பியோடும். ஆனால் மான்டிட் பூச்சிகளிலோ வென்றால், எது ஜயித்ததோ அது தோல்வியடைந்ததை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அதை மறுபடியும் விடாமல் உடனே தின்றுவிடுகிறது. இந்த மாதிரி சண்டை ஒன்றுக்கொன்று நேசமாயிராத மான்டிட் பூச்சிகளுக்குள்தான் ஏற்படுகிறதென்பதில்லை. ஆணும் பெண்ணுமாய் வாழ்ந்து வரும் மான்டிட் பூச்சிகளிலும் சில ஸமயம் சண்டையுண்டாவதுண்டு. பெண் பூச்சி ஆண் பூச்சியைவிட பெரியதாயும் பலசாலியாயும் இருப்பதால் ஆண் பூச்சியை ஸுலபமாய்த் தோற்கடித்து, பிறகு தனது 'கணவனை'த் தின்று விடுகிறது. இந்த மாதிரி சண்டைகள் செய்வதைத் தவிர வேறு விதத்தில் இந்தப் பூச்சிகள் தீங்கு செய்வதில்லையாம்.

பம்பாடியர் பீட்டில் என்று ஒரு வித வண்டு இருக்கிறது. இது மாம்ஸ பக்ஷணியாகும். இது வேறு சிறு பூச்சிகளைக் கொன்று தின்று ஜீவிக்கும். இந்த ஜாதி வண்டுகளில் பெரியவைகள் சிறியவைகளைக்கொன்று தின்பதுமுண்டு. பெரிய வண்டுகள் துரத்திவந்தால் சிறியவைகள் ஓடிப்போகின்றன. ஆனால் ஓடித்தான் தப்பிப் பிழைக்க வேண்டுமென்றிருந்தால், அநேகமாய் இந்த சிறிய வண்டுகள் இறந்து போகவேண்டியதுதான். அப்படியில்லாமல் இவைகளுக்குத் தப்பித்துக்கொள்வதற்கு ஒரு நல்லவழி ஏற்பட்டிருக்கிறது. அவைகள் தங்கள் வயிற்றிலிருந்து ஒருவித த்ராவகத்தைவேண்டும்போது வெளிப்படுத்தக்கூடும். இந்த த்ராவகம் காற்றில் பட்டவுடன் ஆவி

யாய்ப்போய் புகைபோலத் தோன்றுகிறது. அதே ஸமயத்தில் ஒருவித சத்தமும் உண்டாகிறது. இப்படிப் பலதரம் வேண்டுமானாலும் த்ராவகத்தை வெளிப்படுத்தக் கூடுமாம். இதனால் இவைகளைப் பிடிக்கவரும் வண்டுகள் இவைகளைப் பிடிக்கமுடியாமல் இருக்கின்றனவாம். இப்படி வேண்டும்போது த்ராவகத்தை வெளிப்படுத்திக் கொண்டே சீக்ரம் பெரிய வண்டு நுழைந்து பிடிக்கமுடியாதபடி கற்களின் அடியில் நுழைந்து விடுகின்றன. தென் அமெரிக்காவிலுள்ள சில பம்பார்டியர் வண்டுகள்வெளிப்படுத்தும் த்ராவகம் ரொம்பகாரமாயிருப்பதோடு, தோலின்மேல் பட்டால் தோல் வெந்து புண்ணாகிப் போகிறதாம்.

தேனீ, குளவி ஆகிய இந்த ஜாதிப் பூச்சிகளுக்கு விஷக்கொடுக்குகள் அமைந்திருக்கின்றன. இந்தக்கொடுக்குகள் பெண் பூச்சிகளுக்குத்தான் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளின் விஷக்கொடுக்கு பாமபுகளின் விஷக்கொடுக்குகள்போல் குழாயான ஊசியாயில்லாமல் பல பாகங்கள் அமைந்த கருவியாயிருக்கிறது.

தேனீக்கள் வண்டுகள் ஆகிய இவைகளுக்கு கொட்டுவதற்குக் கொடுக்குகள் இருப்பது போல், சிலவகை எறும்புகளுக்கும் விஷக்கொடுக்குகள் இருக்கின்றன. சில எறும்புகளுக்கு விஷப்பை இருந்தாலும கொடுக்குகள் இருப்பதில்லை. இவைகள் தங்களுடைய விரோதிகளை முதலில் கடித்து, பிறகு தங்களுடைய இடுப்பை வளைத்து வயிற்றிலுள்ள விஷப்பையிலிருந்து விஷத்தை வெளிப்படுத்திக் கடிவாயில் சேர்க்கின்றன. இந்தக கொடுக்குகள் இல்லாத எறும்புகளின் கூடுகளை விரோதி எறும்புகள் நாசம் செய்யவந்தால், அவைகளில் "வேலை செய்யும் எறும்புகள்" ஸௌகர்யமான இடத்திலிருந்து கொண்டு தங்களுடைய தேகத்திலிருந்து ஒருவித காரமான த்ராவகத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த த்ராவகம ஆவியாகமாறி விரோதிகளைத் தூரத்திவிடுகிறது. எறும்புகளுக்குள் நடக்கும் அநேக சண்டைகளில் ஒரு எறும்புக்காவது காயம் என்பது ஏற்படாமலே ஏதாவது ஒரு கக்ஷி ஜயித்துவிடுகிறதுண்டு.

மற்ற சிறு ஜீவராசிகளைவிட எறும்பு தான் ரொம்ப சண்டைபோடும் குணமுள்ளது." எறும்புகள் பக்கத்திலுள்ள வேறு எறும்புக் கூடுகளுக்குப்போய் அங்கேயிருக்கும் உணவுப் பொருள்களைக் கொள்ளை யடிப்பதுண்டு. சில ஜாதி எறும்புகள் அடிமை எறும்பு பிடிப்பதற்கென்றே வேறு கூடுகளுக்கு சண்டை செய்யப் போகின்றன. இவைகள் தங்களை விட சிறியவைகளான ஜாதிகளுடன்தான் சண்டை செய்கின்றன. சிறிய ஜாதி எறும்புகளின் கூடுகளில் உள்ள வயது சென்ற எறும்புகளைத் துரத்தி விட்டு, முட்டைகளையும் சிறு எறும்புகளையும் பிடித்துக்கொண்டு போகின்றன. இவைகள் பெரிய வையான பிறகு, தங்களைப் பிடித்துக்கொண்டுபோனவைகளுக்கு அடிமைகளாக வேலை செய்யவேண்டும. இந்த அடிமைகள் ரொம்ப உழைப்பாளிகளாகவும் கீழ்ப்படிந்து கொண்டும் இருக்கின்றன. இவைகள் இஷ்டம்போல் வெளியில் போய்வரக்கூடும் என்றாலும், ஒன்றும் தப்பியோடுவதே கிடையாது. சில எறும்புகள் இந்த அடிமைகளின் உதவியையே எதிர்பார்த்தவைகளாக இருக்கின்றனவாம். இவைகளுக்கு தீனி கொடுப்பதும் இவைகளை சுத்தம் செய்வதும், ஓரிடத்திலிருந்து மற்ற இடத்துக்குத் தூக்கிக்கொண்டு போவதும், இந்த அடிமை எறும்புகள் தான். எப்போதாவது இந்த சோம்பேறி எறும்புகளுக்கு அடிமை எறும்புகளின் உதவி இல்லாமல் போய்விட்டால் அவைகள் தீனி கூட எடுக்காமலிருநது இறந்து போகின்றனவாம்.

ஐரோப்பாவிலுள்ள ஒரு ஜாதி எறும்பில் பெண் எறும்பானது ஆண் எறும்போடு சில காலமிருந்தபிறகு வேறு ஜாதி எறும்புக்கூட்

டுக்குள் புகுந்து, அதிலுள்ள ராணி எறும்பைக் கொன்று விட்டு, தானே ராணியாகிறது. எப்படியோ அதிலுள்ள வேலை செய்யும் எறும்புகளை வசப்படுத்திக்கொள்ளுகிறது. வேலைசெய்யும் எறும்புகள் தங்களுடைய புது ராணியினிடம் ரொம்ப விசுவாஸம் வைத்து, அதற்கு வேண்டிய பணிவடைகள் செய்து வந்து, அதற்குப் பிறக்கும எறும்புகளை கவனத்துடன் போஷித்து வளர்க்கின்றன. இதற்குப் பிறகு வேலை செய்யும எறும்புகள் மாத்ரம் முட்டையிடாமல் அந்த ஜாதி க்ஷீணித்துப் போகின்றது. ராணி எறும்புக்குப் பிறந்த எறும்புகள் தங்கள் தாயைப்போலவே வேறு கூடுகளுக்குப் போய் அவைகளின் ராணி எறும்பைக் கொன்று அங்கு தங்குகின்றன. வேலைசெய்யும எறும்பு ஜாதிக்கு டெட்ராமோனியம் ஸீஸ்பிடம(Tetramonium Caespitum)என்றும், இவைகளின் கூட்டில் புகுந்த ராணி எறும்பு ஜாதிக்கு அனர்கேடஸ் அட்ராடுலஸ் (Anergates atratulus) என்றும் பெயர்.

ஒருபெண் பூச்சியை அடைவதற்காக ஆண் பூச்சிகள் ஒன்றுக்கொன்று சண்டையிடுவதுண்டு. 'ஸ்டாக் பீட்டில்'' எனனும வண்டுகள் ரொம்ப உக்ரமாய் ஒன்றோடொன்று சண்டையிடும். இவைகள் சண்டைபோடுவதை பலர் போட்டோ படம் பிடித்திருக்கிறார்கள். ஒரு ஸமயம ஒருவருடைய மேஜைமேல ஒரு படமெடுக்கும் (காமரா) யந்த்ரத்தின் எதிரே இரண்டு ஆண் 'ஸடாக் பீட்டில்' வண்டுகள் ஒரு பெண்வண்டை யடைவதற்காகச சண்டை போட்டுக்கொண்டிருநதனவாம. சண்டையில் ஜயித்த வண்டு பெண்வண்டை தனது வாயால் தூக்கிக் கொண்டு பத்ரமான இடத்துக்குப் போய்ச் சேர்ந்ததாம். சில ஆண்பூசசிகளுக்கு பெண் பூச்சிகளைப் பிடித்துககொண்டு போவதற்கென்றே ப்ரத்யேகமான அவயவங்கள் அமைந்திருக்கின்றன.

THE LARGEST BELLS OF THE WORLD.

உலகத்திலுள்ள மிகப் பெரிய மணிகள்.

உலகத்திலுள்ள மணிகளிலெல்லாம் மிகப் பெரியது ரஷ்யா தேசத்தில் மாஸ்கோ பட்டணத்தில் இருக்கிறது. அதற்கு "ஸார்காலோகல்" என்று பெயர். 1653-ம வருஷம் அந்த மணி செய்யப்பட்டதென்றுசொல்லுகிறார்கள். 1737-ம் வருஷத்தில் அந்த மணி வைக்கப்பட்டிருந்த கட்டிடம் நெருப்புக் கிரையாகவே, அந்த மணி கீழே விழுந்து விரிந்துபோயிற்று. அதனால் அது உபயோக மில்லாமற்போகவே, அதை வெகுகாலம் ஒருவரும் கவனிக்காமலிருந்தார்கள். பிறகு 1837-ம வருஷத்தில் அதை ஒரு கோவிலுக்குமேல் வைத்துக் கட்டினார்கள்.

அதற்கடுத்த படியாக, அதிகப் பெரியதாயுள்ள மணியும மாஸகோவில்தானிருக்கிறது. அதற்குப் "புதுமணி" என்று பெயர். 1817-ம் வருஷத்தில் அது வார்க்கப்பட்டது. பர்மாவில் ரங்கூனிலும் ஒரு பெரிய மணியிருக்கிறது. சீனாவிலுள்ள பெகிங்கில் 53-டன் நிறையுள்ள ஒரு பெரிய மணி இருக்கிறது.

பார்லிமெண்ட் கட்டிடத்தின்மேலுள்ள கடியாரத்தோடு சேர்ந்ததாய் ஒரு பெரிய மணி இருக்கிறது. அந்த மணி கொஞ்சங் கூட கரலந்தவறாமல் அடித்து வருகிறதாம. அது 11-டன் நிறைகொண்டது. உலகத்திலுள்ள சில பெரிய மணிகளின் விவரம் பின்வருமாறு:

	டன்.
"ஸார் காலோகல்", மாஸ்கோ ...	200
பர்மாவில் ரங்கூனிலுள்ள பெரிய மணி	125
மாஸ்கோ...லுள்ள "புது மணி" ...	125
பெகிங்கிலுள்ள பெரிய மணி ...	53
ரஷ்யாவில் நவகரோடிலிருக்கும் மணி ...	31
ஜர்மெனியைச் சேர்ந்த கலோனில் இருக்கும "கெய்ஸர் க்ளாக்" ...	26

ரஷ்யாவின் முக்யபட்டணமாகிய ஸெண்ட் பீடர்ஸ் பர்க்கிலிருக்கும் ஸெண்ட் ஐஸாக்ஸ கோவில் மணி ... 22
பாரிஸிலுள்ள நாட்டா டேம கோவில் மணி ... 18
வியன்னுவிலுள்ள மணி ... 18
ஆஸ்ட்ரியாவில ஆல்மட்ஸிலுள்ள மணி ... 18
லண்டனில் ஸெண்ட் பால்ஸ கோவிலின் மணி ... 17

USEFUL INSTRUCTION TO YOUNG STUDENTS.

சிறு மாணுக்கர்களுக்கு உபயோகப்படக் கூடிய சில நீதிகள்.

1. முட்டாள்களிலலாமற் போனல் கெட்ட ஸாமன்கள் எளிதில் விலைபோகா.

2. மனைவி, சாராயம், உன்னுடைய வாஸ க்ருஹம், இவைகளைப்பற்றி உயர்த்திப் பேசா தே.

3. மனிதனுக்கு இயற்கையாக வேண்டியது 5 மணி நேரத்தூக்கம; ஆனல் வழக்கமாகஏற் பட்டது 7 மணி; சோமபலால் 9 மணியாய் விடுகிறது; கெட்ட வழக்கங்களினல் 11 மணி தூக்கமும் ஏற்படும்.

4. ஆசையையும இருமலையும் மறைத்துவை க்கமுடியாது.

5. நாட்டுப்புறத்தாள் தன்னைச் சேர்ந்தவர் களின் மத்தியில் எப்பொழுதும் சிறந்தவள் தான். நற்குணமமைநத ப்ரபுக்கள் எவ்வி டத்திலும ப்ரபுக்கள் தான்.

6. மனிதாகள் எல்லாரும் ஒரே மாதிரி உற் பத்தியுள்ளவர்கள் தான; ஆனல் உடையினல் வேறு படுகிறார்கள்.

7. அதிக அழகு அதிக ஆபத்து.

8. தினந்தோறும் படிக்கப் போகும் முன் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால், வைத்யரைத்தேட வேண்டுவதில்லை.

9. அது வரும், இது வரும் என்ற வீண் எண்ணம் தான் மூடரின் ஆதாயம்.

10. பக்வமானவுடன் சாப்பிடும் பண்ட மும், பதினைந்து வயஸுப் பெண்ணும், முப் பது வயது ஸ்நேஹிதனும் முற்றிலும் இன் பத்தைக் கொடுப்பார்கள்.

11. ஊர் பிடிக்க வில்லை என்பது முட்டாள் களின் பேசசு.

12. அன்பே கடவுளின் குணதிசயங்களெ ன்று தெரிநது கொள்ள வேண்டும.

13. நாம் பேசுமபோது ஒவ்வொரு வாரத் தையையும் ஆலோசிததுப் பேசவேண்டும்.

14. நித்ய அநித்ய வஸது பேதம தெரிந்த வன், மண், பெண், பொன் எனற, இம் மூன் றிலும் ஆசை வைக்கமாட்டான்.

GOVERNORS AS ROAD REPAIRERS.

கவர்னர்கள் ரோடுகளை ரிபேர் செய்வது.

ஸமீபத்தில அமெரிக்கா ஐக்யமாகாணங் களில் ஒன்றாகிய மிஸ்ஸூரியில் ரோடுகள் நல்ல ஸ்திதியில இல்லையென்று அவைகளை ரிபேர் செய்வதறகாக ஜனங்கள் ஒன்றுகூடி வேலை செய்தார்கள். இவர்கள் யாதொருகூலியுமில்லா மலே உழைத்தார்கள். தினம் 50,000 முதல் 3-லக்ஷம் ஜனங்கள் வரையில் வேலை செய்தார் களாம். 6000க்கு மேல்பட்ட ஸ்த்ரீகள் பற் பல விதங்களில ரோடுகள் ரிபோ செய்வதற்கு உதவி புரிந்தார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால மிஸ்ஸூரி மாகாணத்து கவர் னராகிய மிஸ்டர் மேஜரும், கான்ஸாஸ மாகா ணத்து கவானர் மிஸடா ஹாட்ஜஸூம் ஜனங் கள் மனஸோடு வேலை செய்யவேண்டு மென்றும், பொதுக் கார்யமாகிய ரோடு ரிபேர் செய்யும வேலையைச் செய்வது இழி வான தல்லவென்றும் ஜனங்களுக்குக் காட்டி, அவர்களை உத்ஸாகப் படுத்தவேண்டி, தாங் களும் சேர்ந்து இரண்டு நாள் ரோடுகளை ரிபேர் செயதார்களாம். நமது தேசத்தில் சிறிய உத்யோகம் செய்கிறவர்கள் கல்லையும் மண்ணையும லகுவில் தொடுவார்களா?

The Ladies' World.
ஸ்த்ரீகள் பகுதி.

FEMALE EDUCATION AND ITS NECESSITY.

BY

T K. RAMABHADRA GHANAPATTIGAL.

பெண் கல்வியும் அதன் ஆவச்யகமும்.

பெண்களுக்குக் கல்வி அவசயம் கற்பிக்க வேண்டுமென்று படித்தவகுப்பாரும், அது கூடாதென்று படியாத வகுப்பாருமசொல்வதை யெல்லோரும் ஸர்வ ஸாதாரணமாய் அறிவார்கள். அது ஆவசயகமா, அல்லவா என்பதை இங்கு யுக்தியோடு சற்று ஆராய்வோம.

ஸ்த்ரீகள் தங்கள் வாழ்நாளில் மூன்று பர்வத்தையும் ஐந்து அந்தஸதையும் அடைகிறாகள். அப்பர்வங்களாவன:—விளையாடும் பர்வம், கல்வியொழுக்கங் கற்கும் பாவம், வ்யவஹாரங்களை ஒழுங்குபெற நடத்தும பர்வம், என்பவைகளே. பாவங்கள் மூனறினுள்ளடங்கும் அந்தஸதுகள் ஐந்தாவன:—குழந்தை, கன்னிகை, மனைவி, தாய், மாமி என்பவைகளே. இவைகளுக்குள், 'குழந்தை' எனனும் அந்தஸ்தை விளையாடும் பர்வத்திலும், 'கன்னிகை' யென்னும் அந்தஸ்தைக் கல்வி யொழுக்கங்கற்கும் பர்வத்திலும், 'மனைவி' 'தாய்' 'மாமி' என்னும் மூன்றந்தஸ்துகளையும் குடும்ப வ்யவஹாரங்களை நடத்தும் பர்வத்திலும் அடைகிறார்கள். அதாவது, தங்களுக்கு வகுக்கப்பட்டிருக்கும் மூன்றுபாவத்திலும் ஐந்துவிதமான உத்யோகத்தை வஹிககிறாகள். அவற்றுள் குழநதை யந்தஸது, தான் ஸம்ரக்ஷிக்கப்படுவதிலும விளையாடிததிரிவதிலும செல்கிறது; கன்னிகையந்தஸது, கல்வி ஒழுக்கம், கார்யமுறைமை, ஈச்வரபக்தி, நடை யுடை பாவனை முதலியவற்றை கற்பதில் கழிகிறது. தவிரவும், இவ்விரண்டு வகுப்புகளும தாய் தந்தையரால் அதிக கவனத்துடன் காக்கப்படவேண்டிய காலத்தில் வருவன. மனைவியென்னும் அந்தஸ்தானது, கணவனுடன் கூடி வாழ்ந்து தமமுடைய கன்யாப் பாவத்திற் கற்றுள்ள கலவி ஒழுக்கம முதலியவற்றால் கணவன், மாமன, மாமி, மைத்துனர், நாத்திமார், முதலியோரிடம் அவரவாக்கிணங்க நடக்கவேண்டிய மரியாதைக்ரமப்படி நடந்து குடும்ப வ்யவஹாரங்களில தேறவேணடிய காலத்தில் வருவது. தாய் என்னும் அநதஸது கன்யாபர்வததில, தான் கற்றுக்கொண்டு, மனைவிப் பருவத்தில் அப்யாஸித்துக்கொண்ட குடும்ப வ்யவஹாரங்களைத் தன்னிச்சையாய் நடத்துங்காலத்தில் வருவது; அதாவது, கணவன் முதலிய சுற்றத்தாாக்கு ஒழுஙகாய் நடந்து குடுமபததிற் கலஹம நேரா வண்ணம அவ்வோர் விஷயங்களையும் யுக்தியாகவும, தநத்ரமாகவும நடத்திக்கொண்டு வருவதோடு, மக்களைப் பெறுவதும், அவாகளை போஷித்துக் காப்பதும், அவாகளுக்குக் கல்வி, ஒழுக்கம், கைததொழில், ஈச்வரபக்தி, நடை, உடை, பாவனை முதலியவற்றைப் பயிற்றுவித்தலும், இவ்விஷயங்களை க்ரமமாய் நடப்பித்தலுமாம். கடைசியாகிய மாமி என்னும் அந்தஸ்தானது, தன் நாட்டுப்பெண் அவளுடைய தாய் வீட்டிலே கன்னிகை அந்தஸ்தில கறறுக்கொண்ட நலலொழுக்கஙகளை அப்யாஸப்படுத்தி வைத்தலும், அவளுடைய கணவன், மாமன், மாமி, மைத்துனா, நாத்தி முதலியோர்க்கு அவரவர்க்குரிய மரியாதை க்ரமப்படி நடந்து, அவளும் குடும்ப வ்யவஹாரங்களில் தேர்ச்சி யடைவதற்

கேற்ற விதங்களைக் கற்பிப்பதற்கான காலத்தில் வருவது.

ஆக இவ்வைநது பொறுப்பான உத்யோகங்களை கவனிக்கையில் ஸ்த்ரீகளாலேயே, ஈருலக வ்யவஹாரங்களும் சீர்பெற நடக்க வேண்டி யிருப்பதால், அவர்கள் எவ்வளவு புத்திசாதுர்ய முள்ளவர்களா யிருக்கவேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும். உலகத்தில் ஒரு உத்யோகத்தைவகிப்பதற்கு அதாவது மாஜிஸ்ட்ரேட்டோ, தாசில்தாரோ, கலெக்டரோ, ஜட்ஜோ, கவர்னரோ, இவைகளில் ஏதாவதொன்று, அல்லது வேறு எவ்விதத் தாழ்ந்த உத்யோகம் எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது கைத்தொழில் வர்த்தகம முதலிய மற்ற தொழில்களில் ஏதாவதொன்றை எடுத்துக்கொண்டாலு சரி, அதை சீர்பெற நடத்த வேண்டுமென்றால், எத்தனை காலம் கஷ்டப்பட்டுக் கற்று கல்வியில் தேர்ச்சியடைய வேண்டியதாயிருக்கிறது? கல்வியின்றி அவைகளை ஸாதனஞ்செய்வதறகு ஒரு போதும ஆகவே ஆகாதலலவா? அப்படிக்கிருக்க, ஈருலக வாழ்க்கைக்குரிய ஸகல வ்யவஹாரங்களையும் அடக்கியுள்ள ஐநது ப்ரதானமான பொறுப்புள்ள உத்யோகங்களை வகிகக வேண்டியவர்களாகிய ஸ்த்ரீகளுக்குக் கல்வி அவசயம் வேண்டு மென்பதற்கு இன்னும வேறு அத்தாட்சி வேண்டுமோ?

தீ: ஷேர். ராமபத்ர கனபாடிகள்.

JEWEL MANIA.

நகைப் பைத்யம்.

'மாதர் மனோரஞ்சினி'யின் ஸமீபத்து ஸஞ்சிகை யொன்றில் ஒரு நிருபர் நகைப் பைத்யத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

ஆடையாபரணங்களின் மேல் பெண்களுக்கு தேவதா ப்ரியம். நகைகள் அவாகளுக்கு அழகைக கொடுககின்றனவென்றாலும் அவை கேட்டைத் தருவதற்கும் காரணமாகின்றன. தம்மனதிற் கிசைந்த ஆபரணங்களை அணிய வேண்டுமெனறு பெண்கள் ஆசைப்படுவதால் அத்ருப்தியும் கலகமும் வீட்டில் ஏற்படுகின்றன. எதற்காக மேலும் மேலும் நகைகள் அணியவேண்டு மென்பதை அவர்கள்சிந்திப்பதில்லை. அயல்விட்டு சேஷம்மாள் அணிவதால் தானும் பூட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஒரே ந்யாயநதான் அவர்களுக்குத் தெரியும். தங்களுடைய ஸ்திதியையும், யோக்யதையையுங் கூட கவனிப்பதிலலை.

புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டது போல், ஏழைகளாயுள்ள பெண்கள் பணக்காரப் பெண்களைப் பாாத்துவிட்டு தாஙகளும அவாகளைப் போலிருக்கவேண்டு மெனறு நினைக்கும்போது அதனால் உண்டாகும் மனக்கலக்கமும அத்ருபதியும் பல. எவ்வகைப் பெண்களும் பாகயவதிகளானாலும, ஏழைகளானாலும், உயர்ந்த நகைகள் வேண்டு மென்று தங்கள கணவர்களை வற்புறுத்தி தலையணை மந்த்ரோபதேசம் செய்யாம லிருப்பதில்லை. கடன் பட்டாயினும நகை செய்து தரும்படி மன்றாடுகிறாாகள. அவாகள் மனம கோணக்கூடாதென்ற விச்வாஸததால் அவர்களுடைய புருஷாகள் நகைகளுக்காக கடன் பட்டு, பின்பு கடனை தீாகக வகையறியாமல் கையைப் பிசைவதை நாம் பார்க்கலாம். புருஷன் கஷ்டப்படும அந்த ஸமயம் நகைகள் பூணுவதால் நாயகியடையும் மகிழ்ச்சி எப்படி யிருக்குமோ தெரியாது!

சில பெண்கள் பழைய நகைகளை அழித்து புது மாதிரியான நகைகளைச் செயவதால், தட்டானுடைய சேதாரத், தங்கமும், தட்டான் கூலியும நஷ்டமே. பின்பு இன்னும் புது மாதிரியைப் பார்த்து அணிந்திருக்கும் நகையை மாற்றத் துணிகிறார்கள். இதனால் பண நஷ்டமும மனக்கலக்கமும் உண்டாகிறதே யொழிய வேறில்லை.

சிலபெண்கள் தங்களுக்கு ஸொந்த நகையில்லாவிட்டால் இரவல் நகையை அணிந்து கொண்டு விவாகங்களுக்கும் உத்ஸவங்களுக்கும் செல்கிறார்கள். பத்ரமாய் ஒப்புவிக்க வேண்டுமென்ற மனக்கலக்கத்தால் நகைமேலேயே கண்ணும் கருத்துமா யிருப்பதால் மனோரம்யம் அடைவதில்லை. ஏதாவதொன்றை இழந்தாலோ வீட்டிலுள்ள சாமான்களைத்தான் விற்றுக் கொடுக்கவேண்டி வரும்.

தற்காலத்தில் பெண்கள் முன்போல அதிக நகைகளை யணிவதில்லை யென்றும், பொறுக்கி யினுக்கான சில நகைகளைத்தான் அணிவதாயும் சொல்லிக்கொள்கிறார்கள். காதிற்கு வைரக்கமமலும், நாசிக்கு மின்னியும், கழுத்திற்கு காசுமாலை, கடியாரச் சங்கிலியும், கைக்குத் தங்கக்காப்பும் சங்கிலியுமாக சிட்டையாய் சில நகைகளை மட்டும் அணிகிறதாகப் பெருமை பாராட்டுகிறாகள். நகைகள் கணக்கில் குறைவானாலும மதிப்பில் நூறுமடங்கு அதிகமே.

பழைய சிவப்பென்று புதுசசிவப்பை வாங்கியும் வைரத்தை வாங்குவதில் மோசம்போயும் பொருளை இழந்தவர்கள்பலர். நகைகளைக் கள்ளர்களுக்குத்திருட்டுக்கொடுக்காதவர்களில்லை. நகையைக் காப்பாற்ற முயன்று காதையும் கையையும் கூந்தலையும் இழந்தவர்கள் சிலர் அகஸ்மாத்தாய் கைநழுவ விட்டு கண்பிதுங்கி நிற்பவர்கள்பலர்.

பெண்கள் அணியவேண்டிய உத்தம ஆபரணங்கள் சில உள. அவை கற்பும், கல்வியும், செல்வக் குழந்தைகளுமே. இவை மூன்று மிருந்தால் எவ்வகையாபரணமும் வேண்டியதில்லை,

CURING SLEEPLESSNESS IN YOUNG CHILDREN.

சிறு பிள்ளைகளின் தூக்கமில்லாமையை நிவர்த்திக்கும் வழி.

சில ஸமயம குழந்தைகளுக்குத் தூக்கம் வாராமைக்குக் காரணங்கள், அஜீர்ணம், பசி, உத்ஸாஹம், அதிகமாக வீட்டில் செய்யவேண்டிய பாட ஸம்பந்தமான வேலைகள், தனியாயிருப்பதாலும் இருட்டைப் பார்ப்பதாலும் உண்டாகும் பயம் முதலியவைகளே. அஜீர்ணம் இருந்தால் ஒரு கோப்பை தண்ணீரில் பைகார் பொனேட் அப் ஸோடா கொஞ்சம் கலந்து சாப்பிட்டு விட்டால், உடனே அஜீர்ணம் இருந்தவிடம் தெரியாமல் ஓடிப்போய்விடும். தித்திப்புப் பதார்த்தங்களையும, தேயிலை, காப்பி முதலிய சிறு குடல்களுக்கு தகாதவைகளையும் அடிக்கடி அதிமாக சாப்பிடுவதால்தான் அஜீர்ணம் உண்டாகிறது. ஒருகுழந்தைக்கு பசி அதிக மிருந்தால், தூங்குவதற்கு அரைமணி முந்தி சில பிஸ்கட் துண்டுகளும் ஒரு க்ளாஸ் உஷ்ணமான பாலும் கொடுத்தாலே போதுமானது. அல்லது வேறு ஏதாகிலும் லேசான ஆகாரம் கொடுத்தாலும் போதுமானது. பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதுள்ள பிள்ளைகள் ராச்சாப்பாட்டுக்குப் பிந்தியும் படுக்கைக்குப்போகு முந்தியும் படிப்புவேலை வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படிச செய்தால் மூளைகெட்டுப்போய் மறுநாள் செய்யவேண்டியதாக ஏற்படும் வேலைக்கு தொந்தரவு முண்டாகும். ஒரு குழந்தை இருட்டைக்கண்டு பயந்தால், அதறகு சிரிப்பு விளையாட்டுக்காட்டி அநுதாபப்பட்டு அதை மாற்றவேண்டும். பயப்படவேண்டியதற்குக்காரணமே யில்லையே, ஏன்பயப்பட வேண்டுமென்று அதற்கு ஆறுதல் சொல்வதுடன், அந்தக் குழந்தையிருக்கும் அறையில் ஒரு விளக்கும் வைத்திருக்க வேண்டும். ஆனால் அந்த விளக்கு நிழல் சுவரி

லாவது, கூரையிலாவது விழாமலிருக்கும் படிக்கும் பார்த்து வரவேண்டும். அறையின் கதவும் திறந்தேயிருக்க வேண்டும். ஏனெனில் குழந்தைக்கு வீட்டில் பேசும் சத்தம் எப்பொழுதும் காதில்விழுந்து கொண்டிருக்க வேண்டும்.

MARRIAGE AMONG THE JAPANESE.

ஜப்பானியர்களுக்குள் விவாகம்.

ஜப்பானில் கல்யாணமாகாமலிருக்கும் ஸ்த்ரீகள் ரொம்பக் குறைவாம். ஜப்பானியப் பெண்கள் பெரும்பாலும் 21-வது வயவில் கல்யாணம் செய்துகொள்கிறார்கள். புருஷர்களோ ஸாதாரணமாய் 26-வதுவயவில்தான் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். ஆனால் பால்ய விவாகமே கிடையாதென்பதில்லை. சில ஸமயங்களில் 15-வயஸுப்பிள்ளைக்கும் கல்யாணம் நடப்பதுண்டு. சென்ற வருஷத்தில் 4000-வாலிபர்கள் 17-வது வயவில் கல்யாணம் செய்து கொண்டார்கள். சென்ற வருஷம் கல்யாணம்செய்யப்பெற்ற ஸ்த்ரீகளில் 7000-பேருக்கு 16-வது வயதுநடந்துகொண்டிருந்தது. முப்பதாவது வயவில் கல்யாணம் செய்து கொண்ட ஸ்த்ரீகளின் தொகை 8000 ஆகும். அதேவயவில் கல்யாணம் செய்துகொண்ட ஆண்களின் தொகையோ 18,000. முப்பது வயஸுக்குமேல் கல்யாணம் செய்துகொள்பவர்களின் ஸங்க்யை குறைவாயிருக்கிறது. 40-வது வயவில் 3700 ஆண்களும் 1,600 ஸ்த்ரீகளும் கல்யாணம் செய்துகொண்டார்கள்.

ஸாதாரணமாய் புத்த ஸன்யாஸ மடங்களில் சேராத எல்லா ஜப்பானியர்களும் கல்யாணமான நிலைமையை அடைகிறார்கள் கிழ ப்ரம்மசாரிகளும் கிழட்டுக் கன்னிகைகளும் மேல் நாட்டில் மலிந்திருப்பதுபோல் ஜப்பானில் கிடையாதாம்.

COW'S MILK FOR CHILDREN.

குழந்தைகளுக்குப் பசும்பால்.

குழந்தைகளுக்குக் கொடுக்கும் பசும்பாலை அரைமணி நேரம் மெதுவாய் அடுப்பை எரிய விட்டு நன்றாய்க் காய்ச்சவேண்டும். பால் வாங்குவதற்கு ஒரு பாத்ரமும் அதைக் காய்ச்சுவதற்கு இன்னொரு பாத்ரமும் கூடாது. பால் வாங்கின பாத்ரத்தையே அடுப்பில் வைத்துக் காய்ச்சவேண்டும். பாலைக்காய்ச்சின பிறகு மூடியே வைத்திருக்கவேண்டும். திறந்து வைத்திருந்தால் ஆகாயத்திலுள்ள க்ருமிகள் பாலைக் கெடுத்து விடும்.

HONORING MISS TARA.

மிஸ்தாரவை கௌரவப்படுத்தல்.

சென்றமாஸ ஸஞ்சிகையில் ப்ரபல பலசாலியான மிஸ்தாராவின் அற்புதச் செயல்களைப் பற்றி எழுதியிருந்தோம். இந்த மாஸம் சென்னையிலுள்ள அபேத ஐக்யானந்த ஸ்த்ரீ ஸமாஜம் என்னும் ஸ்த்ரீ ஸங்கத்தார் மிஸ் தாராவுக்கு ஒரு விருந்துக் கச்சேரி வைத்து உபசரித்ததோடு, 7 - தேதியன்று அவருடைய பராக்ரமத்தைக் காட்டும் அற்புதச் செய்கைகளுக்காக அவருக்கு ஒரு தங்க மெடல் பரிசளித்தார்கள்.

A MEDICAL COLLEGE FOR WOMEN.

ஸ்த்ரீகளுக்கு ஒரு வைத்ய காலேஜ்.

ஸ்த்ரீகளை வைத்யவேலைக்குத் தயார் செய்வதற்காக டெல்லியில் ஒரு காலேஜ் ஏற்படுத்துவதைப்பற்றி யோசனைகள் செய்து முடிப்பதற்காக லேடி ஹார்டிஞ்ஜ் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார். டெல்லியில் காலேஜ் கட்டுவதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் 57-ஏகர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அடுத்த மார்ச்சு மாஸத்தில் லேடி ஹார்டிஞ்ஜ் அதன் அஸ்திவாரக்கல்லை நாட்டுவார் என்று சொல்லப்படுகிறது.

Biography.
ஜீவ்ய சரித்ரம்.

Dr. RABINDRA NATH TAGORE.
டாக்டர் ரபீந்த்ர நாத் டாகூர்.

டாக்டர் ரபீந்த்ர நாத் டாகூருக்கு நோபல் வெகுமதி யென்று ஒரு வெகுமதி ஸவீடன் கவர்ன்மெண்டால் கொடுக்கப்பட்டதாக சென்ற டிஸம்பர் மாஸத்து மாஸவாத்தமானப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். நோபல் வெகுமதிகள் டைனுமிட் எனனும் வெடி மருந்தைக் கண்டுபிடித்தவராகிய ஆல்ப்ரெட் பொன் ஹார்ட் நோபல் எனபவா ஏற்படுத்தி விட்டுப் போனவைகளாகும். அவர் இறந்து போனபோது அவருடைய ஸொத்து 3-கோடி ரூபாய் மதிப்புள்ளதாயிருநதது. அவா தமது உயிலில், அந்த ஸொத்தை தகுந்த இடத்தில் வட்டிக்குவிட்டு வரும வட்டியைக்கொண்டு வருஷந்தோறும 5 வெகுமதிகள் கொடுக்க வேண்டுமென்று கண்டிருநதார். பிஸிக்ஸ் அதாவது ப்ரக்ருதி சாஸ்த்ர ஸம்பநதமாய் நூதனமான விஷயங்களைக் கண்டு பிடித்தவருக்கு ஒரு வெகுமதியும், கெமிஸ்ட்ரி, அதாவது ரஸாயன சாஸ்த்ரத்தில் புதிய விஷயங்கள் கண்டு பிடித்தவருக்கு ஒரு வெகுமதியும், வைத்யம், தேகதத்வ சாஸ்த்ரம், ஆகிய இவைகளில ஏதாவது ஒன்றில் நூதன விஷயங்கள் கண்டு பிடிப்பவருககு ஒரு வெகுமதியும, இலக்கியத்தில் மிக ஸாமர்த்யமாய் எழுதுபவருக்கு ஒரு வெகுமதியும், உலகத்தில் ஸமாதானம் ஏற்படுவதற்காக ரொமபவும் பாடுபட்டிருப்பவருக்கு ஒரு வெகுமதியும, ஆகமொத்தம 5 வெகுமதிகள் ஒவ்வொரு வருஷமும் கொடுக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு வெகுமதியின மதிப்பு 1,20,000 ரூபாயாகும. நோபல தமது உயிலில் இன்ன ஜாதியைச சேர்நதவருக்குத் தான் வெகுமதி கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடவில்லை. ஆகவே, இவ்வெகுமதிகள் பல தேசத்தாருக்கும் கொடுக்கப் படுகின்றன. சென்ற வருஷத்து இலக்கியத்துக்கான வெகுமதி டாக்டர் ரபீந்த்ர நாத் டாகூருககுக் கொடுக்கப்பட்டது.

இலக்கியத்தில் மேல் நாட்டார் மெச்சும்படியாக அவ்வளவு திறமையுடன் எழுதும் டாக்டர் ரபீந்த்ர நாத டாகூரைப்பற்றிப் பலரும் அறிய விரும்புவாகளாதலால் அவருடைய ஜீவ்ய சரித்ரததைச சுருக்கி எழுதுகிறோம்.

ரபீந்த்ர நாத் டாகூர் பங்காளத்தில் ப்ரஸித்த பெற்றவராக இருந்த மகாரிஷி தேவேந்த்ர நாத் டாகூரின் புதல்வர். டாகூர் வம்சம் பங்காளத்தில் ரொம்ப க்யாதி பெற்றது. ரபீந்தரநாத் டாகூர் ஸுமார் 52-வருஷங்களுக்கு முன் பிறந்தார். சிறு பையனுயிருந்தபோது பள்ளிக்கூடம் போவதென்றால் அவருக்குப் பிடிக்காதாம. அவர் தாமாகவே வீட்டில கல்வி கற்றுப்பயின்று வந்தார். அவர் ஒரு காலேஜுக்குப போய் அங்கே கல்வி பயில்வதோடு ஸன்மார்க்கம் முதலியவைகளில் பயிலாவிட்டாலும், அவர் வீட்டிலே இருந்து கொண்டே தமது அறிவையும் ஆத்ம ஞானத்தையும ஸன்மார்க்க முறைகளையும் அபிவ்ருத்தி செய்துகொண்டு வந்தார். அவர் சிறுவராயிருந்தபோதே கவிகள் எழுதிவந்தார். ஆனுல் அவைகளை ஜனங்கள் கவனிக்க வில்லை. பிறகு இங்கலண்டுக்கு சட்டப் பரீக்ஷைக்குப் படிப்பதற்காகப் போனார். அங்கே போனதில் சட்டம் அவருக்குப் பிடிக்காமலிருந்ததால் சீக்ரம் திருமபி விட வேண்டிய தாயிற்று. திரும்பி வந்ததும மறுபடியும கவிகள் எழுதத் தொடங்கவே

அவர் பெயர் ப்ரவித்த மடையலாயிற்று. அவர் பல நாடகங்களும், நாவல்களும், தத்வ சாஸ்த்ர ஸம்பந்தமான க்ரந்தங்களும் எழுதியிருக்கிறார்.

அவருடைய கரந்தங்களை வாசிப்பவர்கள் அவர் வெறும் புஸ்தகப் பூச்சியாயும் வேதாந்தியாயும் இருப்பார் என்று எண்ணுவார்கள், ஆனால் அவர் அப்படியிராமல் உலக வ்யவஹாரத்தில் நன்றாகக் கலந்து வருகிறார். அவர் ரொம்ப தேசாபிமானம் உள்ளவர். அவர் போல்பூர் என்னுமிடத்தில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் வைத்து நடத்தி வருகிறார். அதில் ஸுமார் 200 மாணவர்கள் வாசித்து வருகிறார்கள். அவர்கள் எல்லாரும் திறந்த வெளியிலே யிருந்துதான் வாசிக்கிறார்களாம். ரவீந்த்ர நாத் டாகூர் தமது பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய உபாத்யாயர்கள் தமக்குப் பிடித்தவர்களாயிருக்கவேண்டு மென்று, தாமே உபாத்யாயர்களைப் பயிற்சி செய்வித்தார்

இந்தப் பள்ளிக்கூடத்தை இவர் ஏற்படுத்தினதின் நோக்கம் என்னவென்றால், இவர் சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்த போது, பள்ளிக்கூடத்துக்குப் போக மனம் கொள்ளாமல், தமது பூட்ஸுகளை ஜலத்தில் நனைத்துப் போட்டுக்கொண்டு அதனால் அஸௌக்யமாகி வீட்டிலேயே தங்கி விடுவாராம். தாம் பள்ளிக்கூடத்தில் வெறுப்புக்கொண்டதுபோல இக்காலத்திலும் பிள்ளைகள் வெறுப்புக் கொள்ளாமல் ப்ரியத்துடன் பள்ளிக்கூடத்துக்கு வந்து வாசிக்கும் பொருட்டு தக்க விதமாய் அவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் மேலே சொன்ன பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். அவர் பங்காளிபாஷையில் செய்திருந்த கவிகளை ஸமீபத்தில் இங்க்லீஷில் நல்ல வசன நடையில் மொழி பெயர்த்து ப்ரசுரித்ததில் ஐரோப்பா முழுவதும் அவருடைய க்யாதி பரவி அதனால் அவருக்கு நோபல் வெகுமதி கொடுக்கப் பட்டது. அவருடைய க்ரந்தங்களில் ரொம்பப் பெயர் போனது கீதாஞ்சலியாகும். இதல்லாமல், அவர் கார்டனர் (தோட்டக்காரன்), க்ரெஸன்ட் மூன் (இளம்பிறைச்சந்த்ரன்), மகாஷி தேவேந்த்ரநாத் டாகூரின் ஸ்வய சரித்ரம் (அதாவது தானே தனது சரித்ரத்தைச் சொலவது) ஆகிய இவைகளையும் எழுதியிருக்கிறார். இவைகளை யெல்லாம் அவர் இங்க்லீஷில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இவருடைய இலக்கிய ஸாமர்த்யத்தைக் கண்டு கல்கத்தா யூனிவர்ஸிட்டியாரும் இவருக்கு "இலக்கியத்தில் டாக்டர்" என்னும் பட்டத்தைக் கொடுத்தார்கள். அவர் ரொம்ப தேசாபிமானமும் ஜனாபிமானமும் உள்ளவரென்பது தென்னாப்ரிக்காவில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இந்தியர்களுக்கு ஆறுதலாக ஒரு ஸம்ஸ்க்ருத ச்லோகம் எழுதி ரெவரண்ட் மிஸ்டர் ஆண்ட்ரூஸினிடம் கொடுத்தனுப்பினார் என்பதனால் விளங்கும். (இதன் விவரத்தை சென்ற மாஸத்து ஸஞ்சிகை 49-ம் பக்கத்தில் காண்க.) அவருக்குக் கிடைத்த வெகுமதிப் பணமாகிய 1,20,000 ரூபாய் முழுமையையும் தமது பள்ளிக்கூடத்துக்கே கொடுத்து விட்டார். டாக்டர் டாகூர் ரொம்ப அடக்கமும், பொறுமையும், தன் மறுப்பும் உள்ளவர். அவர் ரொம்ப மதாபிமானம் கொண்டவர். அவர் வ்யாதியாய் இருக்கும்படி நேர்ந்தாலும் அதைப்பற்றி வருத்தம் கொள்ளாமலும், பிறரிடம் சொல்லி துக்கிக்காமலும் இருப்பாராம். அவர் ஜனங்களிடம் ரொம்ப விச்வாஸமும் தயையும் பாராட்டுபவர்.

டாக்டர் டாகூர் ரொம்ப அழகுவாய்ந்தவர். அவருக்கு ஸங்கீதத்தில் ரொம்ப ப்ரியம். சில ஸமயம் பாட உட்கார்ந்து விட்டால் காலை முதல் ராத்ரி வெகு நேரம் வரையில் பாடிக் கொண்டிருப்பாராம்.

டாக்டர் டாகூர் தேசத்தில் கல்வியைப் பரவச்செய்ய எண்ணங்கொண்டு மேல் நாடுகளில் சிலவற்றில் உள்ள "எடுகேஷனல் காலனீஸ்" என்று சொல்லப்படும வித்யாஸ்தாபனங்களை ஸ்தாபிக்க முயன்று கொண்டிருக்கிறார். "எடுகேஷனல் காலனீஸ்" ஏற்பாட்டில் பிள்ளைகள் படிக்கும்போதே, பிற்காலத்தில் அவாகளுக்கு உபயோகப்படும் தொழில்களைச் செய்யப்பழகி அந்த வேலைகளைச் செய்து அவைகளுக்குப் பெறவேண்டிய கூலியை படிப்புக்குச் சம்பளமாகக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் பிள்ளைகள் தஙகளுக்கு யாதொரு செலவு மிலலாமல் படிப்பும் தொழிலும் கற்றுக் கொள்கிறார்கள். பள்ளிக்கூடம் வைத்து நடத்துவதற்கும் அதிகப்பணமவேண்டியிருப்பதில்லை. இந்த ஏற்பாடு இந்தியாவில் நன்றாய் நடந்து வருமானால் இந்தியாவில் கல்வி யபிவிருத்தி ரொம்ப ஏற்படக்கூடும்.

Short Stories.

சிறு கதைகள்.

NICELY ESCAPED.

இனமாய்த் தப்பித்துக்கொண்டது.

ஒரு கொடுங்கோல் மன்னன் தனியாகப் புறப்பட்டு நகரத்திற்கு வெளியே போகும் பொழுது, ஒரு மரத்தினடியில் உட்கார்ந்திருந்த ஒருவனைப்பார்த்து, "அடே தம்பி, இந்த தேசத்து அரசனுடைய குணம் எப்படி? நீதியுள்ளவனா, நீதி இல்லாதவனா?" என்று கேட்டார். உடனே அவன் "ஐயா, இவ்வூர் அரசனைப்போல் கொடுமை செலுத்துகிறவன் வேறு ஒருவனும் இந்த பூலோகத்தில் இல்லை" எனவே, "என்னை உனக்குத்தெரியுமா?" என்று அரசன் கேட்டார். தெரியாதென்று பதில் சொன்னான். அப்பொழுது அரசன், "நான் தான் அரசன்" என்று சொன்னார். அதை கேட்டு அந்த மனிதன் நடுநடுங்கி "நான் யார், தங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான். அரசன் தெரியாது என்று சொல்ல, அவன், "ஐயா, நான் ஒரு வியாபாரியின் மகன், மாஸத்தில் மூன்று நாள் எனக்கு புத்தி ஸ்வாதீனத்தில் இருக்கிறதில்லை; அம்மூன்று நாட்களில் இன்றையதினம் ஒன்று" என்றான். அரசன் நகைத்து ஸம்பாஷணையை நிறுத்திச் சென்றான்.

A LIAR.

ஒரு பொய்யன்.

தெருவீதியில் சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணின் மேல் காதல் கொண்டு ஒருவன் அவளைப் பின் தொடர்ந்தான். அம்மாது அவனைப்பார்த்து "நீ ஏன் என் பின் வருகிறாய்" என்று கேட்டாள். அதற்கு அவன் "உன் அழகைப்பார்த்து மயங்கி காமவலையில் சிக்கினேன்." என்றான்.

"ஓஹோ! அப்படியா, என்னிலும் அழகான என் தங்கை அதோ கொஞ்சதூரம பின்னே வருகிறாள், அவளிடம் போ; அவள் உன் நேசத்திற்கு ஏற்ற பாத்ரம". என்றாள். இதைக் கேட்ட அவன் உடனே திரும்பிச்சற்று தூரம போய், அங்கே வந்து கொண்டிருந்த பெண் பிள்ளையைப்பார்த்து, மிகவும கோரமான வடிவமாய் இருந்தமையால் வெறுத்து, விரைவில் ஓடி மறுபடியும முன் சொன்னவளிடம் வந்து, "என் கண்ணே, நீ ஏன் எனக்குப் பொய்சொன்னாய்?" என்றான். அதற்கு அவள் "நீ பொய் சொன்னபடியால் நானும் பொய் சொன்னேனே தவிர வேறு இல்லை. ஏனெனில் யதார்த்தமாக என்பேரில் உனக்குப்ரியம் இருக்குமேயானால், மற்றொரு பெண்பிள்ளையை விரும்புவாயா? நீ

விரும்பிச் சென்றபடியால் நீ பொய்யன், ஆகையால் போ" வென்றாள். அவன் பதில் சொல்ல யாதொன்றும் தெரியாமல் திகைத்துச் சென்றான்.

A FOOLISH GROOM.

ஒரு அறிவில்லாக் குதிரைக்காரன்.

ஒரு குதிரை வீரன் ஒரு பட்டணத்திற்குப் போனபோது அங்கே திருடர்கள் அதிகம் என்று கேள்விப்பட்டு தன் குதிரைக்காரனைப் பார்த்து "இன்றைராத்ரி நம்முடைய குதிரையை நாம் காப்பாற்ற வேண்டியது முக்யமானதால், நீ தூங்கினால் நான் விழித்துக் கொண்டிருப்பேன், ஏனென்றால் உனனிடத்தில முற்றிலும் எனக்கு நம்பிக்கையில்லை" என்றான். அதற்குக் குதிரைக்காரன், "இது எங்கேயாகிலும உண்டா, யஜமானன் விழித்திருப்பதும் குதிரைக்காரன் தூங்குவதும? அப்படிச்செய்வது எனக்கு தர்மமல்லவே. நான் விழித்திருப்பேன், தாங்கள் கவலையற்றுத்தூங்குங்கள்" என்றான. சரி என்று அங்கீகரித்துத் தூங்கின யஜமானன் மூன்று மணி நேரம் கழித்து விழித்துக் கொண்டு "அடே, ஸேவகா, என்ன செய்கிறாய், விழித்திருக்கிறாயா" என்று கேட்க, அவன் "ஐயா, தண்ணீரின் பேரில் பூமியை விரிதது நிலைநிறுத்தின கடவுளின் மகிமையை த்யானித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான், "அடா, என்னடா த்யானம் இப்பொழுது? உன் த்யானத்தில் குதிரை போய்விடுமோ வென்று பயமடைகிறேன்," எனறார. "பயப்படவேண்டாம், நான் ஜாக்ரதையாக இருக்கிறேன்" என்றான், சரி என்று சொல்லி மறுபடியும் தூங்கின குதிரை வீரன் மறுபடி பாதி இரவில் விழித்து, "அடே ஸேவகா என்னசெய்கிறாய்" என்றார்? "ஐயா நான இப்பொழுது தூணில்லாமல் ஆகாயததை நிறுத்தியிருக்கும கடவுளின் பராக்ரமத்தைக் குறித்து த்யானித்துக் கொண்டிருக்கிறேன்" எனறான "அதெல்லாம் சரிதான். உன் தூக்கத்தைக்காட்டிலும த்யானம பெரிதாக யிருக்கிறதே; தயானததில் ஆழ்ந்த உன்னை, ஏமாற்றி குதிரை திருட்டு போய்விடுமோ எனறு ஸந்தேஹிக்கிறேன" என்றான். "ப்ரபுவே, ஸநதேஹம வேண்டாம். நான் விழித்திருக்கும் பொழுது திருடன் எப்படி வருவான்; ஸநதேகமறறு தூங்குங்கள்" என்றான், பிறகு படுத்துத்தூங்கின குதிரை வீரன் விடியற்காலத்தில் விழித்து "அடே குதிரைக்காரா, என்ன செய்கிறாய்?" என்றான். அதற்கு அவன், "ஐயா, திருடர்கள் வந்து குதிரையைக் கொண்டு போய் விட்டபடியால், நாளைபதினம் ஜேணம தூக்குவது என் தலையிலா? தங்கள் தலையிலா? என்று தீர்க்காலோசனையில் இருக்கிறேன்' எனறான்.

ARABIAN MERCHANTS AND THE KING.

அரசனும் அராபி வ்யாபாரிகளும்.

சில அரேபியா தேசத்து வ்யாபாரிகள் பாரஸீக அரசனிடத்துச் சென்று விற்பனைக்காக சில நேர்த்தியானக் குதிரைகளை காண்பித்தார்கள். அரசன் அதிக ப்ரியப்பட்டு அந்தக்குதிரைகளை வாங்கி அவாகள் கேட்டவிலைக்குமேல் இரண்டு லக்ஷம் ரூபாய்கள் கூடக் கொடுத்து, கூடிய சீக்ரத்தில் இன்னும் அநேக குதிரைகளைக் கொண்டுவரும்படி உத்தரவு செய்தான். அந்த வ்யாபாரிகள் சரி என்று சொல்லி திரும்பிச சென்றார்கள். பிறகு ஒரு நாள் குடியினால் போதை மேலிட்டு உத்ஸாகங்கொண்டு அரசன் மந்த்ரியைப் பார்த்து நம்முடைய ராஜ்யத்தில் உள்ள மூடர்களைக் கணக்கெடுக்கவேண்டுமென்றான். அதற்கு மந்த்ரி தான முன்னமேயே அந்தக்கணக் கெடுதது வைத்திருப்பதாகவும, அதன் வரிசை க்ரமத்தின் தலைப்பில் ஸந்நிதானத்தின் நாமத்தை எழுதி இருப்பதாகவும் சொன்னான். அதற்கு அரசன் ஏன அப்படி என்று கேட்க, மநத்ரி, "ப்ரபுவே, ஊர் பெயர் தெரியாத வ்யாபாரிகளினிடத்தில மற்றொருவருடைய ஜாமீனுமில்லாமலே இரண்டு லக்ஷம் ரூபாய்களைக் கொடுத்து குதிரைகளுக்கு அஞ்ஞாபனம் செய்திருக்கிறீர்களே; இதைப்பார்க்கிலும் அறிவீனம வேறு என்ன இருக்கிறது" என்றான். அரசன மந்த்ரியை நோக்கி "மந்த்ரீ, அந்த வ்யாபாரிகள் குதிரைகளைக் கொண்டுவந்து விடுவார்களே யானால் அப்பொழுது என்ன செய்கிறது?" என்று வினவ, மந்த்ரி, "ப்ரபோ மறுபடியும குதிரைகளுடன் இங்குவருமபடி அவ்வளவு புத்தியீனர்களாக அவர்களிருப்பார்களேயானால் அப்பொழுது அந்த ஜாப்தாவில் தங்களுடைய நாமம் இரண்டாவது ஸ்தானத்தில்தான் இருக்கும், அவர்களுடைய பெயர்களை முதலில் எழுதி விடுகிறேன்" என்றான்,

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

PATERNAL AFFECTION OF A RAT.

ஒரு எலிக்குத் தகப்பனிடத்திலிருந்த விச்வாஸம்.

ஒரு காலத்தில் வ்யாபாரச் சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்துக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்தது. அந்தக் கப்பலில் அநேகம் எலிகள் அதிலுள்ள பண்டங்களைத் தின்று கொழுத்து அதிகத் தொந்தரவு செய்தன. கப்பற்காரர்கள் அந்த எலிகளின் அக்ரமத்தை ஸஹிக்காமல் அவைகளை யெல்லாம் தொலைத்து விடவேண்டுமென்று தீர்மானித்தார்கள். கப்பல் துறைமுகம் வந்து சேர்ந்ததும் கப்பல் தலைவன் கந்தகத்தைக் கொளுத்தி புகை போட்டு எலிகளைப் பிடிக்கும்படி உத்தரவு செய்தான். அப்படிச் செய்யுங்காலத்தில் கந்தகப்புகையையும் உஷ்ணத்தையும் ஸஹிக்காமல் எலிகளெல்லாம் அங்குமிங்கும் ஓடி ஒளியத் தலைப்பட்டன. கப்பற்காரர்கள் வெளியில் வந்த எலிகளையெல்லாம் கொல்ல ஆரம்பித்தார்கள். முடிவில், ஒரு குருட்டுக்கிழ எலியை ஒரு சிறு எலியானது தன் முதுகின் மேல் ஏற்றிக்கொண்டு கப்பலின்மேல் தளத்தில் ஓடி வருவதை கப்பலிலுள்ளவர்கள் பார்த்து, அந்தக்கிழ எலி சிறு எலிக்கு தகப்பன் என்று எண்ணி, அதனிடத்தில் இரக்கப்பட்டு, எலிக்குக் கூட தகப்பனிடத்தில் என்ன நேசமிருக்கிறதென்று ஒருவருக்கொருவர் சொல்லி ஆச்சர்யப் பட்டார்கள். அந்தச் சிறு எலிக்கு இருந்த அறிவையும், தகப்பனிடத்திலுள்ள விச்வாஸத்தையும் பார்த்து ஒரு தீங்கும் செய்யாமல் அதையும் அதனுடைய வயது சென்ற தகப்பனையும் ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள். கேவலம் பகுத்தறிவில்லாத எலிகளுக்குக் கூட இவ்வளவு விசுவாஸமிருக்கும் போது மனிதர்கள் பெற்றோர்களிடத்தில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

A CURIOUS WILL

ஒரு விசித்ரமான உயில்.

மனிதர்கள் உயிரோடிருக்கும்போது தங்களுடைய சரீரத்தைப்பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளுவது ஆச்சரியமல்ல, இறந்த பின்பும் அதைப்பற்றிக் கவலை எடுத்துக் கொள்வதுதான் ஆச்சரியமாகும். கர்னல் மேஃப்யூ என்பவர் ஸமீபத்தில் இறந்து போனார். இறந்த பிறகு, தம்முடைய சரீரம் எவ்விதம் தகனம் செய்யப்பட வேண்டுமென்பதைப் பற்றிய விவரத்தை அவர் தம்முடைய உயிலில் எழுதியிருந்தார். இந்தியாவிலே ஸிந்து நாட்டில் தாம் இறக்கும்படி நேர்ந்தால், தம்முடைய சரீரத்தை தகனம் செய்ய வேண்டுமென்றும், 50 பவுண்டு விறகுக்குக் குறையாமல் சிதை அடுக்கி இரண்டு டின் கிரோஸினை ஊற்றித் தம் சரீரத்தை எரிக்கவேண்டுமென்றும், டின்பூர் என்னும் ஊரிலே ஸிந்து நதிக் கரையிலே மாலை ஆறு மணிக்குத் தம்முடைய சரீரத்தைக் காஷ்டத்தில் வைக்க வேண்டுமென்றும், தம்முடைய சரீரத்திற்கு வெண்மையான உடை உடுத்த வேண்டுமென்றும், காஷ்டத்தின் மேல் பச்சிலைகளையும் புஷ்பங்களையும் நிறையப் பரப்ப வேண்டுமென்றும், சரீரம் தகனமான பிறகு எலும்புகளையும் சாம்பல்களையும் ஸிந்து நதியின் ஜலத்தில் கரைத்துவிட வேண்டுமென்றும், கர்னல் மேஃப்யூ அந்த உயிலிலே எழுதி வைத்திருக்கிறார்.

CURIOSITIES.

வி நோ த ங் க ள்.

SWALLOWING LIVE FROGS.

உயிருள்ள தவளைகளை விழுங்குதல்.

ப்ரான்ஸிலுள்ள ஒரு ஸர்க்கஸில் ஒருவர் வெகு ஆச்சர்யமான கார்யங்களைச் செய்கிறாராம். அவர் ஒரே தடவையில் 3 படி முதல் 4½ படி வரையில் ஜலத்தைக்குடித்து பிறகு அதை நினைத்த மாத்ரத்தில் வெளிப்படுத்துகிறாராம். இன்னம், அவர் ஜலத்தைக்குடித்துவிட்டு 5 முதல் பத்து வரையில் உயிரோடிருக்கும் தவளைகளையுமவிழுங்கிவிடுகிறாராம்.சிறிது நேரம் அவைகள் அவருடைய குடலில் தங்கியிருநதபிறகு அவைகளை ஜலத்தோடு உயிரோடேயே வெளிப்படுத்துகிறாராம். அவர் செய்யும் இன்னொரு வேடிக்கையாவது; பத்துத் தவளைகளை விழுங்கிவிட்டு அவைகளோடு கூட பத்து "கோல்ட் பிஷ்" என்னும் மீன்களையும், விழுங்குவது. சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் அவைகளை வெளியில் கக்கிவிடுகிறார். அவைகள் குடலுக்குள் போனதில் யாதொரு கெடுதியும் அடைவதில்லையாம். தவளைகளும் மீன்களும் குடலுக்குள் இருக்கும்போது இரண்டு மின்ஸார (எலெக்ட்ரிக்) விளக்குகளையும் விழுங்கிவிட்டு, மீன்களும் தவளைகளும் ஜலத்தில் நீந்திக் கொண்டிருப்பதைக் காட்டுகிறாராம். அந்த ஸர்க்கஸகாரருக்கு நாட்டன் என்று பெயர். வயது முப்பத்தைந்தாகிறதாம். திடசாலியாம். குடலைத் தவிர மற்ற அவயவங்களெல்லாம் ஸாதாரணமாகவே இருக்கின்றனவாம். இவருடைய தகப்பனுருக்கும் பாட்டனுருக்கும் இப்பேர்ப்பட்ட விசித்ரமான குடல் இருந்தனவாம்.

TALKING DOGS.

பேசும் நாய்கள்.

ஜெர்மெனியிலுள்ள ஒரு ஸ்த்ரீயினிடம் ஒரு நாயிருக்கிறது. அதற்கு வாசிக்கவும் எழுதவும், எழுத்துக் கூட்டவும் முடியுமாம். அதன் கால்பாதங்களால் தட்டிக் காட்டி எண்ணவும் கூடுமாம். அந்த நாயின் பெயர் ரால்ப் என்று சொல்லப்படுகிறது. அந்த நாயை மூன்று ப்ரபல ப்ரொபஸர்கள் பரீக்ஷித்துப் பார்த்து அதற்கு மேற் சொன்ன குணங்கள் இருப்பது வாஸ்தவமென்று சொல்லுகிறார்கள். லார்ட் ஆவ்பரி யென்பவர் தம்மிடமுள்ள ஒரு நாய்க்கு 'ஜலம்,' 'வெளியே போ' என்பவை முதலான சில வார்த்தைகளை அட்டைகளில் எழுதிக் கற்றுக் கொடுத்திருந்தார். நாய்க்கு குடிக்க ஜலம் வேண்டியிருந்தால் அது 'ஜலம்' என்று எழுதப்பட்டிருந்த கார்டைக் கொண்டுவந்து கொடுக்கும். வெளியில் போகவேண்டுமானுல் 'வெளியில் போ' என்று எழுதியிருந்த கார்டையும், இப்படியே மற்ற கார்டுகளையும் கொண்டுவந்து காட்டும்.

ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க்கில் ஒரு பேசும் நாயிருக்கிறது. அதற்கு 75,000-ரூபாய் கொடுப்பதாகச்சொல்லியும் நாயின் ஸொந்தக்காரர் அதை விற்க ஸம்மதப்படவில்லையாம். அதைப் பல ம்ருகசாஸ்த்ரிகள் பரீக்ஷித்துப் பார்த்ததில் வாஸ்தவத்தில் அதற்கு அபார சக்தி யிருப்பதாகத் தெரிய வந்தது. அது அநேக ஜெர்மன் வார்த்தைகளை தெளிவாய் உச்சரிக்குமாம்.

MAN DEVOURED BY SERPENT.

பாம்பு மனிதனை விழுங்கினது.

சில நாள்களுக்கு முன்னுல் வடக்கே ரங்க்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் 20 அடி நீளமுள்ள ஒரு பெரிய பாம்பு ஒரு பெரிய மனிதனை விழுங்கி விட்டது. அதைச் சுட்டுக் கொன்று விட்டு அதன் வயிற்றைக் கிழித்து அதிலிருந்து இறந்தவனுடைய பிணத்தை வெளியிலெடுத்தார்கள்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

TEST FOR DRINKING WATER.
குடி ஜலத்தைப் பரீக்ஷிப்பது.

ஜலம் குடிப்பதற் கேற்றதா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க சில நல்லவழிகள் இருக்கின்றன. எந்த இடத்து ஜலமாவது குடிப்பதற்கு ஏற்றதா இல்லையா என்று ஸந்தேகம் உண்டானால் ஒரு டம்ளரில் அந்த ஜலத்தை ஊற்றி அதில் கொஞ்சம் சர்க்கரையைப் போட்டு அப்படியே ரொம்பக் குளிர்ச்சியில்லாமல் கதகதப்பாயுள்ள இடத்தில் ஒரு ராத்ரிப்பொழுது வைத்திருக்கவேண்டும். மறுநாள் காலையில் ஜலம் கலங்கியிராமல் தெளிவாயிருந்தால் ஜலம் குடிக்கத் தக்கதாகும். அப்படிக் கின்றி கலங்கியிருந்தால் ஜலம் உபயோகமற்றதென்று தள்ளிவிடவேண்டும்.

பர்மாங்கனேட் அப் பொட்டாஷ் என்னும் மருந்தைக் கொண்டும் ஜலத்தைப் பரீக்ஷிக்கலாம். இந்த மருந்தை போதுமான அளவு ஜலத்தில் கலந்தால் ஜலம் இளஞ் சிவப்பாக மாறிவிடும். மருந்தைக் கலந்து அரைமணி நேரமான பிறகுகூட ஜலம் வர்ணம் மாறாமல் ஒரே இளஞ்சிவப்பா யிருந்தால் ஜலம் குடிக்கத் தகுந்ததாகும். ஜலம் கொஞ்சம் பழுப்புக்கலந்த சிவப்பாக மாறினால் ஜலம் குடிக்க உதவாது என்று தெரிந்து கொள்ளவேண்டும். இந்தப் பழுப்புகலந்த சிவப்புநிறம் அடியில் தங்கினபிறகு மறுபடியும் இன்னம் கொஞ்சம் மருந்தை ஜலத்தில் கலந்து ஜலத்தை இளஞ்சிவப்பாக மாற்றவும். இந்த இளஞ்சிவப்பு மாறாமலிருந்தால் அது குடிக்கத்தகுந்ததென்று தெரிந்து கொள்ளலாம். ஜலத்தைக் காய்ச்சுவதால் ஜலம் பொதுவாய் குடிக்கத் தகுந்ததாய் விடுகிறது. ஆனால் வாய்க்கு ருசியாயிருப்பதில்லை. குடிஜலத்தை முதலில் பாமாங்கனேட் அப் பொட்டாஷ் கலந்து சுத்தி செய்தால் அதிலுள்ள அழுக்கெல்லாம் அடியில் தங்கிவிடும். பிறகு காய்ச்சினால் ஜலம் வாய்க்கு ருசியாக இருக்கும்.

PRESERVING EGGS.
முட்டைகளை கெடாமல் வைத்திருக்க.

மூன்றுமாஸ காலம் முட்டைகளை கெடாமல் வைத்திருக்கப் பின்வரும்வழி உபயோகமானதென்று சொல்லப்படுகிறது. ஒரு பெட்டியில் கொஞ்சம் உப்பைப் பரப்பி, அதன்மேல முட்டைகளைப் பரப்பி, முட்டைகளின்மேல் உப்பைப்போட்டு மூடி, இப்படியாக முட்டையும் உப்புமாக பெட்டி முழுவதும் நிரப்பி விடவேண்டும். பெட்டியின் மூடியைப்போட்டு மூடி ஆணிபோட்டு முடுக்கி விடவேண்டும். வேண்டும் போது மூடியைத்திறந்து மேலாக உள்ள முட்டைகளை எடுத்துக்கொள்ளலாம். உபயோகிக்கும் உப்பு ஈரமாய் இருக்கக்கூடாது. பெட்டியிலுள்ள உப்பு முட்டையிலுள்ள ஈரத்தை க்ரகித்துக்கொள்ளுமாகையால் முட்டையிலுள்ள கரு சிறிது ஆட்டங்கொடுக்கும். இதனால் இதை விலைக்கு வாங்குகிறவர்கள் முட்டை கெடுதலடைந்திருக்கிறது என்று சொல்லி வாங்க விரும்ப மாட்டார்கள். மேல் சொன்னமுறை முட்டையை வீட்டு உபயோகத்துக்காக வெகுநாள் வைத்திருக்க வேண்டுமானால்தான் உபயோகப்படும்.

COOKING VESSELS
சமையல் பாத்ரங்கள்.

சமையல் வேலைகளில உதவும் இரும்புப் பாத்ரங்களையும் தகரப்பாத்ரங்களையும் நன்றாய் சுத்தம் செய்து துடைத்தபிறகு அவைகளை நன்றாய் எரிந்து கொண்டிருக்கும் அடுப்புக்கு எதிரே சிறிது நேரம் தலைகீழாய்க் கவிழ்த்து வைத்திருக்கவேண்டும். இதனால் அந்தப் பாத்ரங்கள் கொஞ்சங்கூட ஈரமில்லாமல் உலர்ந்துபோய் துருப்பிடிக்காமலிருக்கும்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

GOLD FLOWER.

பொன் மலர்.

மிஸ்டர் பி. வி. வ்யாஸராவ் எழுதுகிறார்:—செய்யுட்களில் பல விடங்களில் நல்ல வாஸனை பொன் மலர் நாற்றத்துக்கு ஒப்பிட்டு பாடப் பட்டிருக்கிறது. பொன் மலர் என்றால் தங்கத்தினால் செய்யப்பட்ட புஷ்பம் என்று அர்த்தம சொல்லுகிறார்கள். இது ரொமப ஆக்ஷேபணைக்கு இடமாயிருக்கிறது. ஏனெனில் பொன்னினால் செய்த மலா முதலான நகைகளுக்கு வாஸனையே கிடையாது. வாஸனை உள்ள பதாாததத்தை வாஸனையில்லாத உலோகத்தினால் செய்யப்பட்ட நகைக்கு ஒப்பிட்டு பாடல் பாடமாட்டாாகள். ஆதலால் பொன் மலர் என்பதற்கு அர்த்தம் தங்கத்தால் செய்த புஷ்பம் என்பதல்ல. பொன் மலர் எனறே அதிக வாஸனையுளள ஒரு புஷ்பம் இருக்க வேண்டும எனபதில ஸந்தேகமில்லை. இபபுஷ்பத்திற்கு வடமொழியில் ஸ்வர்ண புஷ்பம் எனறு பெயர். இங்க்லீஷில் கோல்ட் ப்ளவர் (Gold flower) என்று பெயர். இப்புஷ்பத்திலிருந்து செய்யப்பட்ட அத்தர் (Otto or Essence of goldflower) ஷாபபுகளில விற்பதாகத தெரிய வருகிறது. இது பாடசாலைகளின் உபாத்யாயாகள் கவனிக்கத் தக்கது.

THE LIFE OF HIS MAJESTY GEORGE V.

ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி சரித்ரம்.

இது பட்டுக் கோட்டை சிவ. மா. நாராயணஸ்வாமி செட்டியாரால் எழுதப்பட்டது. இதில் ஜார்ஜ் அரசரின இளமைப்பருவம் முதல தொடங்கி அவருடைய கல்யாணம, ப்ரின்ஸ் அப் வேல்ஸாக இருந்தது, ப்ரயாணம செயதது, மகுடாபிஷேகம், டெல்லி தாபார் முதலிய பல விஷயங்களைப் பற்றிச சொல்லியிருக்கிறது. சித்ர ஸஹிதமானது. இதன் விலை அணு 6. வேண்டுவோர், சிவ. மா. நாராயணஸ்வாமி செட்டியார், 24 99, ஜவுளி செட்டித் தெரு, தஞ்சாவூர் என்று எழுதிப் பெற்றுக கொளளவும்.

OUR SMALL ENEMIES.

நமது சிறிய சத்ருக்கள்.

இது ப்ளேக், காலரா, மலேரியா என்னும் விஷஜ்வரம், ஆகிய இவைகள் உண்டாவதற்குக் காரணங்கள், அவைகளின் குண விசேஷங்கள், அவைகளுக்கேற்ற பரிஹாரங்கள் ஆகிய இவைகளைப்பற்றிச் சொல்லும் நூலாகும். இதில் வ்யாதிகளைப் பரவசெய்யும் பாக்டீரியாக்கள் என்னும ஸூக்ஷ்ம க்ருமிகளைப்பற்றியும் கூறியிருக்கிறது. இது டாக்டர் எஸ். சந்த்ரசேகா எழுதியது. இதன் விலை 6 அணு. வேண்டுவோர், டாக்டா எஸ, சந்த்ரசேகா, கும்பகோணம் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

CHANAKYA SAHASAM OR CHANDRA GUPTA CHARITAM.

சாணக்ய ஸாஹஸம் அல்லது சந்த்ர குப்த சரிதம்.

இது சாணக்யர் என்ற பெயாபோன ராஜதந்த்ரி சநதரகுப்தனுககு உதவியாக இருந்து அவருக்கு ராஜ்யம் கிடைக்கும்படி செய்த ஸாஹஸங்களின வ்ருத்தாந்த மாகும். இது ஸ்ரீமதி வி. பாலம்மாள் எழுதியது. இது ஒரு கனனட நூலின் தமிழ் மொழிபெயர்ப் பாகும், இதன் நடை ஸுலபமாயும், நன்றாயும் இருக்கிறது. கதை வாசிக்க இனிமையாயிருக்கிறது. இது வேண்டுவோா, எம. கோபால க்ருஷ்ணய்யா, வித்யாபானு பத்ராதிபர், 802, கூட்ஸ்ஷெட் தெரு, மதுரை. என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும.

MISCELLANEOUS NEWS.
நானா ஸங்கதி.

THE IDEAL NEWSPAPER.
ச்ரேஷ்டமான பத்ரிகை.

ஸ்விட்ஸர்லண்ட் தேசத்திலுள்ள பத்ரிகாசிரியர்கள் ஸங்கத்தின் டெலிகேட்டுகள் ஸமீபத்தில் ஒரு பட்டணத்தில மீட்டிங் கூடின போது ச்ரேஷ்டமானதும் குற்றங் குறையில்லாததுமான பத்ரிகை இன்னவிதமாயிருக்க வேண்டுமென்பதைப்பற்றி சில தீர்மானங்கள் செய்தார்கள். அவர்கள் தீர்மானித்திருக்கிறதென்னவென்றால் பத்ரிகையானது ஜனங்களுடைய அறிவை வ்ருத்தி செய்வதற்காகவென்றே நடந்துவர வேண்டும். பத்ராதிபர்கள், (1) சரித்ரவிஷயமாய் உபயோகப்படாத கோர்ட்டு வர்த்தமானங்களை பத்ரிகையில ப்ரசுரிக்கக் கூடாது. (2) மனிதர்களைப் பற்றிய ஊர்வம்புகள், ஆச்சர்யம் கொடுக்கக்கூடிய ஸமாசாரங்களை (உதாரணமாக தற்கொலையைப் பற்றிய ஸமாசாரம்) ஆகிய இவைகளை விலக்கி விடவேண்டும். (3) ஸம்பவித்திருக்க முடியாதவைகள் என்று தோன்றுகிற ஸமாசாரங்கள் பத்ரிகையில் வெளிவரக்கூடாது. (4) ஏதாவது ஒரு கட்சிக்கு ஸாதகமாக வெளிவரும் ஸமாசாரங்களையும் விலக்கிவிடவேண்டும். இந்தச் சீர்திருத்தங்கள் அனுஷ்டானத்துக்கு வருவதன பொருட்டு, அறிவாளிகளான பொது ஜனங்கள் உதவிக்கு வரவேண்டுமென்றும், அவர்கள் மேலே சொன்ன நிபந்தனைகளுக்கு விரோதமாக நடக்கும் பத்ரிகைகளை வாங்கி ஆதரிக்கக் கூடாதென்றும் ஷை பத்ரிகா ஸங்கத்தார் தீர்மானம் செய்தார்கள். இப்படிப்பட்ட பத்ரிகையை நமது தேசத்திலுள்ள ஜனங்கள் ஒப்புக்கொள்ளுவார்களா?

DISTRICT OFFICERS AND RYOTS.
ஜில்லா அதிகாரிகளும் விவஸாயிகளும்.

ஜில்லா அதிகாரிகளாயுள்ள கலெக்டர்கள் தங்கள் ஜில்லாவில் சுற்றுப்ப்ரயாணஞ் செய்யும போது தங்கள் ஜில்லாவின் க்ஷேமலாபத்தைக் குறித்த விஷயங்களைக் குறித்து சௌகரியப்படும் இடங்களில் அந்த ஜில்லா விவஸாயிகளுடன் கலந்து பேசுவதனால் நன்மை விளையுமென்பதை கலெக்டர்களின் மனதில பதியும்படி செய்யவேண்டுமென்று போன நவம்பர் மாஸத்தில் நடந்த சென்னை சட்டஸபை மீட்டிங்கில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட, அதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டார்கள். இப்போது கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தை யனுஸரித்து கலெக்டர்களும் அவர்கள் கீழுள்ள உத்யோகஸ்தர்களும் நடக்கவேண்டுமென்று தாங்கள் விரும்புவதாக ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

THE ADVAITA CONFERENCE.
அத்வைத கான்பரேன்ஸ்.

காளஹஸ்தி அத்வைத கான்பரென்ஸின் ஒன்பதாவது கூட்டம் சென்ற டிஸெம்பர் மாஸம 28-தேதி முதல் 31-தேதி முடிய காளஹஸ்தியில் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வரூபானந்தேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிவாரு அக்ராஸனாதிபதியாயிருந்தார். ராஜதானியின் பல பாகங்களிலிருந்து அநேக பண்டிதர்கள் வந்திருந்தார்கள். ஸூத்ரபாஷ்யம், உபநிஷத்பாஷ்யம், அத்வைதஸித்தி, முதலியவைகளில் பரீக்ஷைகள் நடத்தப்பட்டன. பல பண்டிதர்கள் பாஷ்யங்களைப்பற்றிப் பல ப்ரஸங்கங்கள் செய்தார்கள். கடைசிநாளில் பண்டிதர்களுக்கு ஸன்மானங்கள் அளிக்கப்பட்டன.

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

ஜனவரிமீ 27-தேதி.

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ்.—விசாகப் பட்டணம் ஜில்லா ஸங்கம் இன்று விசாகப் பட்டணத்தில் கூடி அடுத்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் விசாகப்பட்டணத்தில் கூட வேண்டுமென்பதாக கேட்டுக் கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்தது.

மிஸ்ஸஸ் பெஸண்டின் கேஸ்.—மிஸ்டர் நாராயணய்யாவின் இரண்டு பிள்ளைகளையும் மிஸ்டர் நாராயணய்யாவிடம் விட்டு விடும்படி சென்னை ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பை நிறைவேற்றாமலிருக்கும்படி மிஸஸ் அனி பெஸண்ட் ப்ரிவி கௌன்ஸிலில் மனுப்போட்டுக் கொண்டதை ப்ரிவிகௌன்ஸிலின் ஜுடிஷ்யல் கமிட்டியார் ஏற்றுக்கொண்டு அப்படியே தீர்ப்பை நிறைவேற்றாமலிருக்கும்படி உத்தரவு செய்து விட்டார்கள்.

28-தேதி.

லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்.—இன்றைய தினம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடிற்று. மெம்பர்கள் கேட்ட பல கேள்விகளுக்கு கவர்ன்மெண்டார் பதில் சொன்னார்கள். வைத்தியர்களுடைய ரெஜிஸ்ட்ரேஷன் சட்டமும் இன்னும் சில சட்டங்களும் சில தீர்மானங்களும் ஆலோசிக்கப்பட்டன.

29-தேதி.

டாக்டர் ரபீந்த்ர நாத் டாகூர்.—வங்காளக் கவிசிரேஷ்டராகிய டாக்டர் ரபீந்த்ரநாத் டாகூருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நோபல் ப்ரைஸின் அறிகுறிப்பட்டயம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்து விட்டது. வங்காள கவர்னர் லார்ட் கார்மிகேல் இன்று கல்கத்தாவில் கவர்ன்மெண்ட் ஹௌஸில் ஒரு உல்லாஸக்கச்சேரி நடத்தி அந்தப் பட்டயத்தை டாக்டர் ரபீந்த்ரநாத் டாகூருக்குக் கொடுத்தார். (கொஞ்சகாலத்துக்கு முன்னால் கல்கத்தா யூனிவர்ஸிட்டியார் ரபீந்த்ரநாத் டாகூர் இலக்கியத்தில் அடைந்திருக்கும் தேர்ச்சியை உத்தேசித்து அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தார்கள்.)

ஒரு கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்:—ஐக்ய மாகாண ப்ரொவின்ஷ்யல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் இன்று லக்நௌவில் கூடிற்று. அதைத்திறந்து வைத்துப் பேசிய ஐக்யமாகாண லெப்டினெண்ட் கவர்னர் கோவாபரேஷன் முயற்சி ரொம்பவும் துரிதமாகப் பரவிவருகிறதென்றும், பெரிய மிராசுதார்கள் அதிகமாக இந்த முயற்சியில் சேர்ந்தால் இந்த முயற்சி மிகவும் பலப்படும் என்றும் சொன்னார்.

31-தேதி.

ஒரு விருந்துக் கச்சேரி.—கொச்சியில் ப்ரபலஸ்தலஸ்வானாக உள்ள மிஸ்டர் பாலியத் கோவிந்த வலிய அச்சன் இன்றையதினம் கொச்சி திவான் மிஸ்டர் எ. ஆர். பானர்ஜிக்கு ஒரு விருந்துக் கச்சேரி வைத்து உபசரித்தார்.

பிப்ரவரிமீ 3-தேதி.

இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்.—இன்றையதினம் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் டெல்லியில் கூடிற்று. அநேக மெம்பர்கள் கௌன்ஸிலுக்கு வரவில்லை. மெம்பர்கள் கேட்ட கேள்விகளுக்கு கவர்ன்மெண்டார் பின்வரும் பதில்கள் சொன்னார்கள். புதிதாகக் கட்டப்படும் டெல்லிக்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதை கவர்ன்மெண்டார் தெரிவிப்பதற்கு முடியாதாம். கனடாவி

துள்ள இந்தியரின குறைகளைப்பற்றி கவர்ன்மெண்டார் கவனித்து வருகிறார்கள், ப்ரிட்டிஷ் யூனிவர்ஸிட்டிகளில் இந்தியர்கள் சேர்ந்து கொள்வதில் கஷ்டப்படுவதைப்பற்றி கவர்ன்மெண்டார் கவனித்து வந்தாலும் தற்போது ஒன்றும் செய்யத்தயாராயில்லை.

உடன் கட்டை ஏறுதல்.—கல்கத்தாவுக்கு ஸமீபத்திலுள்ள உத்தரபாரா என்னும் ஊரில் நாராயணதாஸ் சட்டர்ஜி என்பவர் காலரா வாய்க்கிடந்து இறந்து போனார். அவருடைய மனைவிக்கு ஸுமார் 42 வயதிருக்கும். அவள் தனது புருஷன் இறந்து போனதை யறிந்தும் தனது அறையை விட்டு வெளியில் போய் அவருடைய சட்டை யொன்றைப் போட்டுக் கொண்டு கையில் பகவத்கீதா புஸ்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு தன் தலை மயிரில் நெருப்பை வைத்துக்கொண்டாள். அவளுடைய பந்துக்களும் மற்றவர்களும் சீக்ரம் ஓடி வந்து அவளுடைய தேகத்தில் ஜலத்தைக் கொட்டியணைத்தும் அவள் நாலு மணி நேரத்துக்குள் இறந்து போனாள். அவளைப் புருஷனோடு காஷ்டத்தில் வைத்து தகனம் செய்தார்கள்.

புதுக்கோட்டை ராஜா.—இன்றையதினம் ஹிஸ் ஹைனஸ் புதுக்கோட்டை ராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. அவருக்கு ஒரு உபசார பத்ரம் வாசித்துக் கொடுத்தார்கள். ராஜா தக்கவிதமாய்ப் பதில் சொன்னார்.

4-தேதி.

தென்னாப்ரிக்காவுக்குக் கப்பல் போக்குவரத்து.—அடுத்த மார்ச்சு மாஸம் 10-தேதி முதல் கொண்டு கல்கத்தாவிலிருந்து தென்னாப்ரிக்காவுக்கு மாஸாமாஸம் கப்பல் போக்கு வரத்து நடத்தப்படும். தற்போது 2 பெரிய கப்பல்துள் கல்கத்தாவுக்கு வந்திருக்கின்றன, கப்பல்கள் வழியில் கொழும்பு, டர்பன், கேப்டவுன் ஆகிய இந்த இடங்களில் தங்கும்.

5-தேதி.

வடமேற்கு மாகாணங்களில் கொள்ளை.—வடமேற்கு மாகாணங்களில் அப்தர் ரஹமான் கெல்ஸ் என்னும் கொள்ளைக்காரன் பல விடங்களில் கொள்ளை யடித்து வருவதை யறிந்த ராணுவத்தார் இரண்டொரு நாள்களுக்கு முன் சில துருப்புகளையனுப்பி அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும தாக்கினார்கள். வெகு நேரம் சண்டை போட்ட பிறகு கொள்ளைக்காரர்கள் பின்வாங்கி ஓடினார்கள். அவர்களில் இரண்டு பேரும், இந்திய சிப்பாய்களில் இரண்டு பேரும் சண்டையில் கொல்லப்பட்டார்கள்.

போலீஸ் உத்யோகஸ்தர்களுக்கு மெடல்:—இன்றையதினம் எச். இ. கவர்னர் சென்னையில் சில போலீஸ் உத்யோகஸ்தர்களுக்கு மெடல்களும் ஸர்டிபிகேட்டுகளும் கொடுத்தார்.

6-தேதி.

ஒரு பெங்காலிப் பெண்ணின் தற்கொலை.—வரதக்ஷணையால் நேர்ந்த ஒரு கொடிய தற்கொலை ஸம்பவம் இன்று அந்த தற்கொலை ஸம்பந்தமாக நடந்த விசாரணையில் வெளியாயிற்று. சில நாட்களுக்கு முன்னால் 14-வயஸுள்ள ஒரு பெங்காலிப் பெண்ணை அவளுடைய தகப்பனார் ஒரு மாணவனுக்கு 2000 ரூபாய் வரதக்ஷணை கொடுத்துக் கல்யாணம் செய்வதாக ஏற்பாடு செய்து அந்தப் பணத்துக்காக தமது வீட்டை ஒற்றி வைக்க யோசனை செய்திருந்தார். அந்தப்பெண் வீட்டை ஒற்றி வைக்கக் கூடாதென்று ஆக்ஷேபித்தாளாம். தனது தந்தைக்கு நேர்ந்துள்ள பணகஷ்டம் தன்னால் தான் ஏற்பட்டதென்று அறிந்து மனம் வருந்தின அந்தப்பெண் சில நாட்களுக்குமுன் ஒரு ராத்ரி எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தபோது தனது வஸ்த்ரங்களில் நெருப்

புப் பற்றவைத்துக் கொண்டாள். இது வீட்டிலுள்ளாருக்குத் தெரிந்து சீக்ரம் நெருப்பை யவித்தும் அவளுடைய தேகம் அநேக இடங்களில் வெந்துபோயிற்று. அவளை ஹாஸ்பிடலுக்குக் கொண்டுபோய் வைத்யம் பார்த்தும் குணப்படாமல் இறந்து போய் விட்டாள்.

8-தேதி.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—பப்ளிக்ஸர்விஸ் கமிஷன் மெம்பர்கள் இன்றையதினம் பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

9-தேதி.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—இன்றையதினம் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் பம்பாயில் விசாரணை செய்ய ஆரம்பித்தது.

10-தேதி.

ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர்.—ஆனரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு இடம் பாரி ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

11-தேதி.

கொழும்பில் ப்ளேக்.—கொழும்பில் ப்ளேக் வியாதி பரவியிருக்கிறது. ப்ளேக் வ்யாதிபிடித்திருக்கும் எலிகள் காணப்படுகின்றனவாம்.

14-தேதி.

லாகூரில் கொள்ளைகள்.—லாகூரில் கொள்ளைகள் அதிகமாக நடந்து வருகின்றன. சில நாட்களுக்கு முன் திருடர்கள் ஒரு ஸ்த்ரீயைக் கொலை செய்து அவளுடைய நகைகளையும் பணத்தையும் அடித்துக் கொண்டு போய்விட்டார்கள். ஒரு பணக்கார ஹிந்து வீட்டில் ஒரு கொள்ளைக்கூட்டம்புகுந்து 5000-ரூபாய் பெறுமான நகைகளையும் பணத்தையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். போலீஸார் இரண்டுபேரைக் கைது செய்திருக்கிறார்கள்.

15-தேதி.

பம்பாயில் ஒரு தீ விபத்து.—பம்பாய்க்கு அருகிலுள்ள கொலாபாவில் நெருப்புப் பிடித்தது. கோருலதாஸ்கல்லியாண்ஜி பருத்தி ப்ரெஸ் முழுவதும் நாசமானதோடு, அந்த இடத்துக்குப் பக்கத்திலிருந்த ஏராளமான பருத்தியும் நாசமாய்விட்டது. நஷ்டம் ஏராளமாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

கவர்னரின் சுற்று ப்ரயாணம்.—இன்று ஸாயந்த்ரம் சென்னை கவர்னர் தென்ஜில்லாக்களில் சுற்றுப்ரயாணம் செய்யப் புறப்பட்டார்.

16-தேதி.

சென்னை கவர்னரின் சுற்று ப்ரயாணம்.—சென்னை கவர்னர் இன்று திண்டுக்கல்லுக்குப்போய்ச் சேர்ந்தார். முனிஸிபாலிடியாரால் ஒரு உபசார பத்ரம் வாசிக்கப்பட்டது. பிறகு முனிஸிபல் ஹாஸ்பிடலையும், ஸ்பென்ஸர் அண்ட் கம்பெனியின் சுருட்டு பாக்டரியையும் சில பள்ளிக்கூடங்களையும் பார்வையிட்டார். பிறகு ஸாயந்திரம் கொடைக்கானலுக்கு போய்ச் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஒரு உபசாரபத்ரம் வாசிக்கப்பட்டது. பிறகு கொடைக்கானலுக்கு ஜலம் ஸப்ளை செய்வதற்காக ஏற்பட்ட குழாய் மராமத்து வேலைகளைத் திறந்து வைத்தார்.

FOREIGN NEWS.

அந்ய நாட்டு ஸமாசாரங்கள்.

ஜனவரியீ 26-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—இன்று டர்பனில் ஒரு பெரிய மீட்டிங்கில் மிஸ்டர் காந்தியும் கவர்ன்மெண்டாரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கேட்டால் கமிஷன் இன்று டர்பனில் கூடிற்று. கவர்ன்மெண்டுக்காக ஒரு வக்கீல் வந்து ஆஜராயிருந்தார். இந்தியர் கூட்டம் ஸமாராயிருந்தாலும் இந்தியத் தலைவர்கள் ஒருவராவது கமிஷனைப் பார்க்கவரவில்லை.

ஒரு இந்தியராவது ஸாக்ஷ்யம் சொல்ல வரவில்லை.

27-தேதி.

ரேவரண்ட் மிஸ்டர் ஆண்ட்ரூஸ்.—தென்னாப்ரிக்கா இந்தியர்களின் நிலைமையைப்பற்றி விசாரிக்க தென்னாப்ரிக்காவுக்குச் சென்ற ரெவண்ட் மிஸ்டர் ஆண்ட்ரூஸ் தமது தாயார் இங்க்லண்டில் இறந்துபோய் விட்டதால் இங்க்லண்டுக்குப் போகப்போகிறார்.

29-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—நேட்டால் இந்தியன் காங்க்ரெஸ் ஸபையார் ஒரு மீட்டிங் கூடி நேட்டால் விசாரணைக் கமிஷனில் ஸாக்ஷ்யம் சொல்வதாகத் தீர்மானித்தார்கள்.

இன்றையதினம் நேட்டால் விசாரணைக் கமிஷனில் இந்தியா கவர்ன்மெண்டின் ப்ரதிநிதியாகப்போயிருந்த ஸர்பெஞ்ஜமின் ராபர்ட்ஸன் ஸாக்ஷ்யம் சொன்னார். ஒப்பந்தக் கூலிகள் ஒப்பந்தம் முடிந்தவுடன் தங்களுடைய ஊருக்குத் திரும்பிவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் 3-பவுன் வரி போடப்பட்டதாகவும், அந்த நோக்கம் தற்காலம் நிறைவேறாமலிருப்பதால் அந்த வரியைத்தள்ளிவிட வேண்டுமென்று இந்தியா கர்வன்மெண்டார் விரும்புவதாகவும் சொன்னார்.

30-தேதி.

சக்ரவர்த்தி தம்பதிகள்:—ஜார்ஜ் அரசரும் மேரிராணியாரும் ஏப்ரல்மாஸத்தில் பாரிஸுக்குப்போய் ப்ரெஞ்ச் ப்ரெஸிடெண்டைக்கண்டு கொள்வார்களென்று சொல்லப்படுகிறது.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—இன்றையதினம் தென்னாப்ரிக்காவின் கவர்னர் ஜெனரலாகிய லார்ட் க்ளாட்ஸ்டன் பார்லிமெண்டைத் திறந்துவைத்துப் பேசியபோது நேட்டால் விசாரணைக் கமிஷன் சீக்ரம் விசாரணை செய்து ரிபோர்ட்டை யனுப்பும் என்றும் அந்தக் கமிஷன் சொல்லும் ப்ரேரணைகளை அனுஸரித்து ஒருவித சாச்வதமான முடிவு செய்யலாகும் என்றும் சொன்னார்.

31-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—இன்றைய தினம் முதல் முதலாக ஒரு இந்தியர் நேட்டால் விசாரணைக் கமிஷனில் ஸாக்ஷ்யம்சொன்னார். அவர் நேட்டாலிலுள்ள ஸ்வதேசக் கான்ஸ்டபிள்கள் இந்தியர்களின் மீட்டிங்கு ஒன்றில் இந்தியர்களைத் தாக்கினதாகச் சொன்னார்.

பிப்ரவரி 1-தேதி.

ஆகாயக்கப்பலில் ப்ரயாணம்.—காரே என்னும் ப்ரெஞ்சுக்காரர் ஒரு ஆகாயக்கப்பலில் ஆறு ப்ரயாணிகளை ஏற்றிக் கொண்டு 6000 அடி உயரம் பறந்து சென்றார்.

2-தேதி.

க்ரீஸூம் துருக்கியும்.—ஈஜியன் தீவுகள் ஸம்பந்தமாக க்ரீஸுக்கும் துருக்கிக்கும் இருந்த தகரார்களைத் தீர்ப்பதற்காக இரண்டு தேசத்து தூதர்களும் பேச்சுத் தொடங்கியிருக்கிறார்கள்.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—இன்றைய தினம் ரெவரெண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸை உபசரிப்பதற்காகக்கூடின 1500 பேர்கொண்ட ஒரு மீட்டிங்கில், மிஸ்டர் காந்தியும் கவர்ன்மெண்டும் செய்துகொண்ட ஏற்பாட்டை அங்கீகரிப்பதாயும், நேட்டால் இந்தியன் காங்க்ரெஸ் செய்த தீர்மானத்தை ஆக்ஷேபிப்பதாயும் தீர்மானிக்கப்பட்டது.

4-தேதி.

இந்திய கப்பல்களில் கொள்ளை.—பாரஸீக வளைகுடாவில் பஸ்ராவுக்குப் பக்கத்தில்போய்க்கொண்டிருந்த இரண்டு இந்திய கப்பல்கள் கரையோரமாய் நங்கூரம் போட்டிருந்தபோது, சில கடல்கொள்ளைக்காரர்கள் ஆயுதங்களுடன் கப்பல்களில் புகுந்து கொள்ளையடித்தார்கள்.

அவர்களை எதிர்த்த ஒரு கப்பல் சிப்பந்தி சுட்டுக் கொல்லப்பட்டான். இன்னொருவனுக்கு ரொம்ப காயமாம். அவ்விடத்திலுள்ள ப்ரிட்டிஷ் கான்ஸல் என்னும் வ்யாபார துதர் இதன் விஷயமாக விசாரணை நடத்திவருகிறார். சில பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

5-தேதி.

ஸமாதான கான்பரென்ஸ்.—ஹாலண்ட் தேசத்திலுள்ள ஹேக் பட்டணத்தில் மூன்றாந் தடவையாக ஒரு ஸர்வதேச ஸமாதானக்கான்பரென்ஸ் கூட வேண்டுமென்று அமெரிக்க ஐக்ய மாகாணங்களின் ப்ரெஸிடெண்டாகிய வில்ஸன் எல்லா தேசங்களுக்கும் தெரிவித்திருக்கிறார்.

6-தேதி.

தென்னாப்ரிக்கா விசாரணைக் கமிஷன்.—தென்னாப்ரிக்கா விசாரணைக் கமிஷனில் இன்றைய தினம் நேட்டால் சர்க்கரை ஸங்கத்திலிருந்து வந்த ஒரு டெபுடேஷன், மூன்று பவுன் வரியைத் தள்ளக்கூடாதென்றும்தள்ளுவதாயிருந்தால் இந்தியர்கள் ஸ்வயேச்சையடைந்து கூலி வேலைக்கு அகப்பட மாட்டார்களாதலால், அவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும், ஷை ஸங்கம் அபிப்ராயப்படுவதாகச் சொன்னார்கள்.

அல்பானியா—பால்கன் நாடுகளில் ஒன்றாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்பானியா தேசத்துக்கு ராஜாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் வில்லியம் ராஜகுமாரர்தற்போது ஜெர்மனியில் இருப்பதால் அவரை அல்பானியாவுக்கு அழைத்து வருவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது.

8-தேதி.

தென்னாப்ரிக்கா விசாரணை கமிஷன்.—தென்னாப்ரிக்கா விசாரணைக் கமிஷன் நேட்டாலில் செய்து வந்த விசாரணை இன்றோடு முடிவடைந்துவிட்டது.

10-தேதி.

லார்ட் மிண்டோ.—இந்தியாவின் வைஸ்ராயாகவிருந்த லார்ட் மிண்டோ தற்போது ரொம்ப அஸௌக்யமாயிருக்கிறாராம்.

பார்லிமெண்ட்.—இன்றையதினம் ஜார்ஜ் அரசர் பார்லிமெண்டைத் திறந்துவைத்துப் பேசினார். இந்தியாவைப்பற்றிப் பேசினபோது, ஸமீபத்தில் இந்தியாவில் காலத்தில் மழை பெய்யாமல் போனதால் அநேக இடங்களில் விவஸாயத்துக்குக் கெடுதி நேரிட்டிருக்கிறதாகவும், இதனால் ஜனங்களுக்கு ரொம்பக் கெடுதி நேரிட்டால் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகவும் சொன்னார்.

10-தேதி.

ந்யூஸிலண்டில் ஹிந்துக்கள்.—ஆஸ்ட்ரேலியாவுக்குப் பக்கத்திலுள்ள ந்யூஸிலண்ட் தீவில் ஹிந்துக்கள் அதிகமாகக் குடியேறிக்கொண்டிருப்பதால் அதைத் தடுக்க ஏதாவது சட்டம் செய்ய வேண்டுமென்று அந்த நாட்டு மந்த்ரி சொல்லுகிறாராம். (ந்யூஸிலண்ட் என்பது ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் ஒன்றாகும்.)

11-தேதி

தென்னாப்ரிக்கா.—தென்னாப்ரிக்காவின் கவர்னர் ஜெனரலாகிய லார்ட் க்ளாட்ஸ்டன், தென்னாப்ரிக்காவில் தற்போது நடந்து கொண்டிருக்கும் யூனியன் பார்லிமெண்டு முடிவடைந்ததும், கவர்னர் ஜெனரல் ஸ்தானத்தை ராஜிநாமா செய்யப் போவதாக இன்று பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது.

துருக்கியும் க்ரீஸும்.—க்ரீஸை எதிர்ப்பதற்கு துருக்கியும் பல்கேரியாவும் ஒன்று சேர்ந்து கொள்ளும் என்ற வதந்தி பலமாட்களாக இருந்து வருகிறது. அப்படி சேர்ந்துவிட்டால் ரொமானியா க்ரீஸுடன் சேர்ந்து கொள்ளுமென்றுதெரியவருகிறது.

பேர்ஸியாவின் அரசர்.—பெர்ஷியாவின் அரசருக்கு அடுத்த ஜூலை மாஸம் 27உ முடிசூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அன்றையதினம் மகமது நபியின் பிறந்தநாளாகும்.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள்.—இன்று மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் என்று தோன்றின ஒரு ஸ்த்ரீ லண்டனில் ஒரு வீட்டு ஜன்னலில் நின்று கொண்டு ப்ரஸங்கம் செய்தாள். ஜனங்கள் கூட்டமாய்க் கூடியிருந்தார்கள். அவள் ப்ரஸங்கமுடிவில்கவர்ன்மெண்டை எதிர்ப்பதாகவும், வேண்டுமானால் தன்னை கைது செய்து கொள்ளட்டும் என்றும் சொன்னாள். அவள் பிறகு வெளியில் வந்தவுடன் போலீஸார் அவளை மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் என்று எண்ணிக் கைது செய்யப் போனார்கள். போலீஸாரும் அங்கே கூடியிருந்த ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகளும் கைகலந்து சண்டையிட்டார்கள். முடிவில போலீஸார் அந்த ஸ்த்ரீயைக் கைது செய்துகொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனதன்மேல், அவள் மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் அல்ல வென்றும், போலீஸை ஏமாற்றுவதற்காக இப்படி மாறுவேஷம் போட்டுக் கொண்டதாகவும் தெரியவந்தது.

12-ந் தேதி.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள்.—ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் பர்மிங்ஹாமிலுள்ள கார்னகி லைப்ரேரிக்கு நெருப்பு வைத்து நாசமாக்கி விட்டார்கள்.

ரஷ்யாவில் மதுபானத்தின் கெடுதிகள்.—ரஷ்ய சக்ரவர்த்தி ஸமீபத்தில் தமது தேசத்தில் ப்ரயாணம் செய்தபோது ஜனங்கள் குடி வழக்கத்தால் ரொம்ப பலவீனர்களாகவும், ஏழைகளாகவும் பொருளாதார மற்றவர்களாகவும் இருப்பதை யறிந்து, தமது ராஜ்யத்தில் பணத்தட்டு இல்லாமல் வேண்டியவளவு பணம் இருப்பதால் ஜனங்களுடைய நிலைமையை உயர்த்த பலமான முயற்சிகள் செய்ய வேண்டுமென்று தமது வரவு செலவு மந்த்ரிக்குத் தெரிவித்திருக்கிறார்.

SEASON.

காலஸ்திதி.

Rainfall.

மழை.—1913ஆம் ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஆம் பிப்வரிமீ 21உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் வெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	47·28	44·20
வால்டேர்	35·70	36·67
காக்கிநாடா	36·45	38·47
மசூலிபபட்டணம்	31·53	39·70
நெல்லூர்	30·41	34·82
மதராஸ்	65·99	49·25
கூடலூர்	96·58	50·59
நாகபட்டணம்	85·06	53·13
பாம்பன்	41·26	36·57
கொழும்பு	66·03	79·58
திருவநந்தபுரம்	62·44	61·45
கொச்சி	97·01	110·60
கள்ளிக்கோட்டை	111·58	116·35
மங்களூர்	110·25	126·98
மெர்க்காரா	109·07	126·08
ஐதராபாத்	18·91	91·11
பல்லாரி	15·06	19·75
கர்நூல்	17·84	26·61
கடப்பை	23·75	31·32
ஹாஸ்பான்	25·63	35·65
பெங்களூர்	21·47	34·98
கொடைக்கானல்	50·09	58·57
உதகமண்டலம்	44·65	54·95
கோயம்புத்தூர்	15·21	21·61
வேலூர்	23·89	44·95
சேலம்	31·30	39·57
திருச்சிநாப்பள்ளி	35·25	32·41
புதுக்கோட்டை	38·15	32·77
மதுரை	16·18	33·72
திருநெல்வேலி	34·41	26·21

Calendar—பஞ்சாங்கம்

அம்ரு தாதி.	லக்ன பாக்கி	அகச	துலு	இங்	தமி	வா	47-ப்ரமாதீச(ஹூ) பங்குனிமா- உத்தராயனம்-சிசிருது } கொல்லம்-1089 பஸலி-1823 { இங்கிலீஷ் - 1914 மார்ச்சுமீ-ஏப்ரல் } ஹிஜரி-1332 சப்பூலவல்-ரப்யூஸானி
யோகம்.	நா வி	நா வி	உ	உ	உ		
மஅ	4 13	29 49	16	14	1	ச	த்ரி 41-35, சித் 40-57, விரு 0-24, உப 50-3 வணி 15-49, தி 5-22, ரா 23-38, மீனசூன்யதி, ஷடசீதி புண்யகால
சிஉ	5	51	17	15	2	ஞா	சது 33-44, சுவா 35-0, வியா 41-14, பவ 7-31, ரா 17-54, மீனசதுர்த்தீதி, சங்கடசதுர்த்தி [ஸ்மார்க்கம்
மசி	3 56	52	18	16	3	தி	பஞ் 26-59, விசா 30-11, ஹர் 32-57, சவு 0-11, கர 54-9, ரா 9-40, பஞ்சமீதி
சிஉ	48	54	19	17	4	செ	ஷஷ் 21-42, அனு 26-48, வஜ் 25-53, பத் 49-42, ரா 10-24, திதிதுவயம்
சிம	39	55	20	18	5	பு	ஸப் 18-6, சேட் 25-7, விதீ 20-11, பாலவ 46-59, ரா 15-3, அஷ்டமீதி, வியசிரா, காலாஷ்டமீ
சி	31	57	21	19	6	வி	அஷ் 16-17, மூல 25-12, விய 1-54, தை 46-4, தி 21-9, ரா 19-47, சரிநாள்
பசி 3	23	29 58	22	20	7	வெ	நவ 16-15, பூரா 27-0, வரீ 13-2, வணி 46-53, ரா 18-0
சி	14	30 0	23	21	8	ச	தச 17-54, உரா 30-28, பரி 11-29, பவ 49-20, ரா 11-10, ஏகாதசீதி, மேஷாயனம் 25-32
அம	6	1	24	22	9	ஞா	ஏகா 21-3, திர 35-17, சிவ 11-6, சவு 53-9, ரா 16-12, அதிதி, ஸர்வஏகா, சிரவணஉப
சி 2	58	2	25	23	10	தி	த்வா 25-29, அவி 41-16, சித் 11-44, சர 58-6, துவாதசிதி, பிரதோஷ
ம	49	4	26	24	11	செ	த்ர 30-54, சத 48-6, சாத் 13-9, வணி 30-54, தி 1-14, மாஸசிவரா, வாருணீயோக
அசி	41	6	27	25	12	பு	சதி 36-57, பூட் 55-30, சுப 15-7, பத் 3-51, தி 6-2
சி	33	7	28	26	13	வி	● 43-25, உட் 60-0, சுப் 17-28, சது 10-8, தி 22-35, ஸர்வஅமா, மன்வாதி பிண்டபிதிரு, புஷ்கலா
சிஅ	24	9	29	27	14	வெ	ப்ர 50-0, உட் 3-33, பிரா 19-59, கிம் 16-41, ரா 7-1, சைத்ரசுத்த, கல்பாதி இஷ்டி, சந்திரஸ்ரீ வத்ஸராதி,
பசி	16	10	30	28	15	ச	த்வி 56-29, ரே 11-1, மா 22-32, பால 23-16, சந்திரதர்சனம் சரிநாள் [தேவீநவராத்ராரம்பம்
சிபி	7	12	1	29	16	ஞா	த்ரி 60-0, அசு 18-36, வை 24-52, தை 29-38, தி 7-23, ரா 15-23, வைசிரா, மன்வாதி திரிதினஸ்பிருக்
சிஅ 1	59	13	2	30	17	தி	த்ரி 2-35, பர 25-46, விஷ் 26-52, வணி 35-26, ரா 28-54, சதுர்த்தீவிரு, சத்திகணபதிவிரு, ஆந்தோளன
சி	51	15	3	31	18	செ	சது 8-1, கிரு 32-13, பரீ 28-18, பவ 40-23, சே 3-7 லக்ஷ்மீபஞ்சமீ, ச்ருத்திகை, ஷடவிருத [திரிதியா
சி	42	17	4	1	19	பு	பஞ் 12-28, ரோ 37-36, ஆயு 28-55, சவு 44-15, தி 15-55, ரா 22-23, ஷஷ்டியுபவா, கல்பாதி அனந்தாதி நாக பூஜை ஸ்கந்ததமனரோப, சரிநாள்
ப	34	18	5	2	20	வி	ஷஷ் 15-39, மிரு 41-38, ஸவு 28-29, கர 46-41, பாஸ்கரதமன, ஸந்தானஸப்தமீ
சு	26	19	6	3	21	வெ	ஸப் 17-16, திரு 44-6, சோ 26-48, பத 47-28, தி 3-40
சி	17	21	7	4	22	ச	அஷ் 17-11, புன 44-50, அதி 23-47, பால 46-28, தி 14-40, பவான்யுத்பத்தி, அசோகாஷ்டமீ
சி	9	22	8	5	23	ஞா	நவ 15-15, பூச 43-43, சுக 19-20, தை 43-35, தி 4-39, ஸ்ரீராமநவமீ, தேவீதமனம், இராமா
சிம	1	24	9	6	24	தி	தச 11-27, ஆயி 40-51, திரு 13-14, வணி 38 54 தி 14-24, ஸமார்த்த ஏகா, திவாமா
சி 0	52	25	10	7	25	செ	ஏகா 5-56, உப 53-0, மக 36-10, சூல 6-4, உப 51-28, பவ 32-37, தி 8-40, ரா 24-0, யதிவைஷ்ணவ ஏகா, ஆவம கிருஷ்ணார்தோளனம், விஷ்ணுதமனம
அ	44	26	11	8	26	பு	தர 50-42, பூர 50-24, வ்ரு 17-56, கர 24-56, ரா 16-9, பதனத்ரயோதசீ, பிரதோஷ
பசி	35	28	12	9	27	வி	சதி 41-37, உத 23-42, துரு 37-41, சர 16-14, ரா 11-40, தமனசதுர்த்தசீ, பங்குனி உத்திரம்
அசி	27	30	13	10	28	வெ	○ 32-4, ஹஸ் 16-15, வ்யா 26-58, பத் 6-51, பா 57-5, ரா 3-15, பூர்ணிமாதி, ஸர்வதேவதமனம், மன்வாதி
மஅ	19	32	14	11	29	ச	ப்ர 22-30, சித் 8-40, ஹர் 46-15, தை 47-53, தி 20-41, திதிதுவய, சைத்ரபூர்ணிமா, இஷ்டி இராமா
சிஉம 0	10	33	15	12	30	ஞா	த்வி 13-23, சுவா 1-24, உப 53-29, வஜ் 5-50, உப 50-25, வணி 39-6, தி 13-47, திரிதியாதி, திவாமா
							ஆனந்த(ஹூ) சித்திரைமா- [கால, வியசிரா, ஆவம சங்கடசதுர்த்தீ, ஸமார்ச்கம்
சி 0	2	30 34	16	13	1	தி	த்ரி 5-7, உப 53-24, சஜ 49-55, வ்ய 47-20, பவ 31-40, தி 3-54, மேஷரவி 14-7, விஷுவத்புண்ய

ர-சு		ச	செ
பு-ரா	19-மே-சு 29-மீன-பு		
குரு			கே